**Ben Vision Printers**

Digital banner and Sticker Printing, Book Page Making & Printing (Tamil & Sinhala), Offset Printing, Invitation Cards and Cake boxes, Visiting cards, Magazines, Leaflets, letterheads, Labels, Laminating, Scanning (Colour), All kind of Binding, Screen Printing, Photocopy, Type Setting (Tamil, English, Sinhala)

No:335A, Thiruganasampathar Street, Trincomalee
Tel: 0262225984, 0778615206
benvisionprinters@gmail.com



அறைவு 03 இயம் 04 August 23-29 , 2014

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பக்கங்கள் : 16 விலை : 30.00 பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்





**CCTV Installation & Maintenance**

**PHOTONTECK**

175, Main Street Trincomalee



075 6602486


# மாகாணசபை உறுப்பினரின் வீட்டுக்கு முன் காவல் அரண்




(ஸ்ரீ, அச்சன்)

கிழக்கு மாகாணசபையின் தமிழத் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் திரு.நாகேஸ்வரன் அவர்களது வீட்டிற்கு முன்புறமாக புதியதொரு காவலரண் அமைக்கப்பட்டுள்ளது.

கட்டைப்பறிச்சான் தமிக் கிராமத்திற்கு மத்தியில் முன்னர் பொதுச்சந்தையாகப் பாவிக்கப்பட்ட காணியிலேயே இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ள இக்காவல் அரண் கடந்த சில வாரங்களுக்குள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளதாக அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் காணியின் அந்தமொன்றில் தபால்நிலையம் அமைந்துள்ளதுடன் இப்பிரதேசத்தில் பெண்கள் தலைமை தாங்கும் 13

## கிளிவெட்டி வைத்தியசாலை வைத்தியர் அச்சுறுத்தப்பட்டார்....???



கிளிவெட்டி வைத்தியசாலையின் வைத்தியர் கடந்த 14ம் திகதி அச்சுறுத்தப்பட்டுள்ளார். அதையடுத்து வைத்தியசாலையை விட்டு வெளியேறிய அவர் கடந்த 19ம் திகதியே கடமைக்குத் திரும்பி-யுள்ளார். 13

## தமிழரசுக் கட்சி புனரமைப்பு




திருகோணமலை மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியை புனருத்தாரணம் செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

உள்ளூரிலுள்ள அரசியல் தலைவர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள இப் புனருத்தாரண முயற்சியில் புதிய அங்கத்தவர்களைச் சேர்த்துக்கொள்ளவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அக்கட்சி சார்பாக உள்ளூரில் பேசவல்ல அதிகாரி 13

## தோப்பூரில் ஏழு வீடுகளில் கொள்ளை

### மோப்பநாய் இராணுவக் காவலரணைத் தாண்டிச் செல்லவில்லை

### காவல்துறையில் முறையிடத் தயக்கம்

தோப்பூர் இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் வட்டார -ங்களைச் சேர்ந்த முஸ்லிம்களின் ஏழு வீடுகள் கடந்த 20ம் திகதி அதிகாலையில் கொள்ளை யடிக்கப்பட்டுள்ளன.

வீடுகளின் யன்னல் - 13

## "புறாமலை" முத்திரைகள் 6 வெளியீடு

திருகோணமலையின் சுற்றுலாத்தளங்களுள் ஒன்றான பிரசித்தம் பெற்ற புறாமலையைப் பிரதிபலிக்கும் 6 வகையான முத்திரைகள் வெளியிடப் பட்டுள்ளன.

தபால் சேவைகள் அமைச்சுமுத்திரைகள் பணியகத்துடன் இணைந்து இந்த முத்திரைகளை வெளியிட்டன.

ரூபா 7 தொடக்கம் ரூபா 50 வரை 13

## முரண்படுவோர் கூட்டணி நோக்கி நகர்வு ???

தமிழரசுக் கட்சியின் புனருத்தாரண வேலைகள் மாவட்டத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது மூத்த உறுப்பினர்களுக்கு உரிய கௌரவத்தை தமிழரசுக் கட்சி 13

## திருக்கோணேஸ்வர கும்பாபிஷேகம் 2015ல்

வரலாற்றுப் புகழ்வாய்ந்த திருக்கோணேஸ்வரத் தலத்தின் மகாகும்பாபிசேகம் அடுத்தவருடம் நடைபெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். எதிர்வரும் 2015ம் ஆண்டு தை மாதத்தில் - கும்பாபிசேகம் நடாத்தத் திருவருள் கூடியுள்ளதாகத் தெரிவித்த அவர்கள் முதற்கட்டமாக பாலஸ்தாபன அபிசேகம் நேற்று காலை 5.00 மணி தொடக்கம் 5.30 வரையான சுப நேரத்தில் நடந்தேறியுள்ளது என்றும் தெரிவித்தனர்.

கும்பாபிசேகத்திற்கு பெருந்தொகை நிதி தேவைப்படும் எனத் தெரிவித்துள்ள காவலர் சபை அந்நிதியை நன்கொடையாகத் தந்துதவுமாறு உலகெங்கும் வாழும் மாதுமை அம்பாள் 13




**aat SRI LANKA**

@

**Veal Business College**

No.159, Sea View Road, Trincomalee

026 222 76 22 - 077 02 03 201



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
malaimurasu@hotmail.com 075-4252042

## தம்பலகாமத்தில் மினி சூறாவளி -25 வீடுகள் சேதம்

தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் 21ம் திகதி மாலை நிலவிய கடும் காற்று மற்றும் பலத்த மழையின் காரணமாக சுமார் 25 வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

தம்பலகாமம் மற்றும் கோவிலடி ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 21ம் திகதி மாலை 3.30 முதல் நான்கு மணி வரை கடும் காற்று வீசியதாக தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஸ்ரீபதி ஜெயகௌரி தெரிவித்தார்.

இந்த அனர்த்தம் காரணமாக சுமார் 25 வீடுகளுக்கு பகுதியளவில் சேதம் ஏற்பட்டுள்ள போதிலும், எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

சேத விபரங்கள் தொடர்பில் கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக தகவல்களை திரட்டி வருவதாக தம்பலகாமம் பிரதேச செயலாளர் மேலும் கூறினார்.


(படம்-அச்சுதன்)

## 17வது திருத்தமும் பாதுகாக்கப்படும் களவும் ...

இலங்கையின் நீதித்துறையும் காவல்துறையும் சுயாதீனமாக இயங்குவதை உறுதிப் படுத்துவதற்கான ஏற்பாடுகளை சுதந்திரமடைந்த காலந்தொட்டே இலங்கையின் அரசியலமைப்புச் சட்டம் தன்னகத்தே கொண்டிருந்தது.

1977ம் ஆண்டில் ஆறில் ஐந்து பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டு ஆட்சிக் கட்டேறிய ஐக்கிய தேசியக் கட்சி நிறைவேற்று அதிகார சனாதிபதி முறையை, இலங்கையின் அரசியல் அமைப்பில் ஏற்படுத்திய மாற்றங்களின் ஊடாக கொண்டு வந்த போதும், நீதி மற்றும் காவல்துறையின் சுயாதீனத்தன்மை ஒருவழியாக உறுதிப்படுத்தப்பட்டே இருந்தன.

அது எவ்வாறு எனில் நீதி மற்றும் காவல்துறைக்கென இரண்டு சுயாதீன ஆணைக்குழுக்கள் இயங்கிவந்தன. அச்சுயாதீன ஆணைக்குழுக்களின் கட்டுப்பாட்டுக்குள் இவ்விரு துறையும் இருந்ததால் நிறைவேற்று அதிகார சனாதிபதி முறையிருந்தும் கூட நீதி மற்றும் காவல்துறையில் சுயாதீனம் சொல்லக்கூடிய அளவிற்குச் சுதந்திரத் தன்மை கொண்டதாகவும், பணவலுவோ, அரசியற் செல்வாக்கோ அற்ற சாதாரண இலங்கைக் குடிமகனுக்குக் கூட சில வேளைகளிற் காலந் தாழ்த்தியேனும் நீதி கிடைக்க வழி செய்திருந்தன.

ஆனால் இச் சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு சாவுமணி அடிக்கப்பட்டது 17வது திருத்தச் சட்டத்தின் ஊடாகவே.

அதன் தாக்கம் எதுவரை வருகின்றது என்பதை இன்று தெரிந்து கொள்ளக் கிடைத்துள்ளது.

அரசியற் செல்வாக்கானது வலுவுள்ளதாக மாறி நீதி மற்றும் காவல்துறையை விட மிகையான வலுவுடன் செயற்படத் தொடங்கியுள்ளது.

பிரதம மந்திரியின் அலுவலகத்திற்கும் 250 கிலோ ஹெரோயின் கடத்தலுக்கும் இருந்த தொடர்பு என்ன என்பது இன்றுவரை தெரியப்படுத்தப்படவில்லை. பிரதி அமைச்சர் ஒருவரின் வாகனம் மிகை வேகத்தில் சென்றபோது மேலதிகாரிகளின் பணிப்புரைக்கு ஏற்ப அதனைத் தட்டிக் கேட்டுத் தண்டித்த காவல் அதிகாரி இன்று இலஞ்சக் குற்றச்சாட்டின் கீழ் விசாரணையில் உள்ளார். அவரது நனோ கார் தீ வைக்கப்பட்டுள்ளது. குட்டைப் பாவாடை பாடசாலை ஒழுக்கத்திற்கு நல்லதல்ல என பிரதேசசபைத் தலைவரின் மகளைத் தண்டித்த ஆசிரியை முழந்தாளிட வைக்கப்பட்டார். இன்று உயிர்ப்பயத்துடன் இருக்கின்றார். அவருக்குப் பக்கபலமாக இருக்க வேண்டிய அப்பாடசாலையின் துணை அதிபரோ அவ்வாறு முழந்தாளிடற் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என தெரிவித்துள்ளார். அதனைக் கண்ணால் கண்ட சாட்சியான ஒரேயொரு சுதந்திரக் குடிமகன், ஏழைக் கடைக்காரன், சாட்சி சொன்ன குற்றத்திற்காக ஏன் இறந்தார் எனத் தெரியாமலே கிணறொன்றில் இருந்து சடலமாக மீட்கப் பட்டுள்ளார்..... இவ்வாறு உயர்ந்த அரசியல் பதவியில் இருந்து கடைநிலைப் பதவிவரை வலுக்கூடிய செல்வாக்குடன் நடப்பதை அறிந்துகொள்ளும் மக்களின் பாதுகாப்பிற்குப் பொறுப்பானவர்களின் சிந்தனையில் என்ன இருக்கும்????

கடைநிலைக் களவுகளுக்கு யார் பொறுப்பு... நிலாவெளியில் தொடங்கி தோப்பூர் வரை நீண்டுள்ள கடைநிலைக் களவுகளைச் செய்யக்கூடிய வலு யாருக்குள்ளது என்பதை குடிமக்கள் யாவரும் அறிவர்..... மோப்ப நாய்க்குத் தெரியாமல் இருக்கலாம் அவர்களைக் காட்டிக் கொடுக்கக் கூடாது என்று... மக்களுக்குத் தெரியும்...... அவர்களைக் கண்டிருந்தாலும் எதுவும் செய்ய முடியாது... ஏனெனில் அவர்களைப் பாதுகாப்பது 17.....

கடலில் தடுக்கப்பட்ட தமிழர்கள் விவகாரம் ஆஸி உச்ச நீதிமன்று நடவடிக்கை

## விசாரணைக்கு உத்தரவு

அவுஸ்திரேலியாவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சர்சைக்குரிய 157 இலங்கை தமிழர்கள் தொடர்பான நீதி விசாரணை குறித்து அவுஸ்திரேலியாவின் உச்ச நீதிமன்றம் உத்தரவு ஒன்றினை 21ம் திகதி பிறப்பித்துள்ளது.

இந்த இலங்கை தமிழர்கள் எவ்வாறு கடலில் தடுத்து வைக்கப்பட்டார்கள் என்பது குறித்து முழு விசாரணை ஒன்றை மேற்கொள்ளுமாறு அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக ரொய்டர் செய்தி ஸ்தாபனம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை தலையிடுவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக இலங்கை தமிழர்கள் சார்பாக முன்னிலையான வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.


இலங்கை தமிழர்கள் அசாதாரண முறையில் நடத்தப்படுவதாக தெரிவித்த அவர்கள், இதன் காரணமாக அவுஸ்திரேலியாவின் குடிவரவு சட்டங்கள் செயல்படுத்தப்பட்டதாக என சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்த நீதி விசாரணை தொடர்பான முழு அளவிலான விசாரணைகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் இடம் பெறும் என அவுஸ்திரேலிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வரட்சியைக் கட்டுப்படுத்த சிறு குளங்களைப் புனரமையுங்கள்

திருகோணலை மாவட்டத்தில் ஏற்பட்டிருந்த வரட்சியை அடுத்து பல பிரதேசங்களில் குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது. அதனை அவதானித்துள்ள திருமலை நகரசபை உறுப்பினர் திரு.நந்தகுமார் சிறுகுளங்களைப் புனரமைத்து நீரைத்தேக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

451 சிறுகுளங்கள் திருகோணமலை மாவட்டத்தில் காணப்படுவதாகவும் அவற்றில் 251 குளங்களே நீரைத்தேக்கும் வசதியுடன் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்


நன்றி - பேஸ்புக்

## "நாளை என்னைக் காண மாட்டீர்கள்"

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதிய உத்தியோகத்தர் ஒருவர் தற்கொலை செய்துள்ளார் எனச் சந்தேகிக்கப்பட்டுள்ளது.

கடந்த 20ம் திகதி சடலமாக மீட்கப்பட்ட இவர் அதற்கு முதல் நாள் பணி முடிந்து வீடு நோக்கிப் பயணித்த போது "நாளை என்னக் காண மாட்டீர்கள்'' என சக உத்தியோகத்தர்களிடம் கூறிவிட்டுச் சென்றுள்ளதாகத் தெரிகின்றது.

காவல்துறை விசாரணைகள் தொடர்கின்றன.

## உணவகங்களின் உரிமையாளருடன் பேச்சுவார்த்தை

திருகோணமலை சுகாதார வைத்திய பிரிவில் உள்ள உணவகங்களுக்கான உணவுகளை கையாளுதல் மற்றும் தர நிர்ணயம் தொடர்பான உணவக உரிமையாளர்களுக்கு விளக்கமளிக்கும் முதலாவது விசேட கலந்துரையாடல் திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே .விஜயகுமார் தலைமையில் திருகோணமலை சனசைன் ஹோட்டலில் இன்று 16.08.2014 காலை 10.30 மணியளவில் இடம் பெற்றது.

இந்த கலந்துரையாடல்களுக்கு நகரில் உள்ள முக்கிய உணவகங்களான 35 உணவக உரிமையாளர்கள் கலந்து கொண்டதுடன் உணவகங்களில் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய விதி முறைகள் தொடர்பாகவும் சுகாதார விதிமுறைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அமைவிடமும் சுற்றாடலும், கட்டடத்தின் தன்மை இடவசதி காற்றோட்டம், உணவு தயாரித்தலும் பரிமாறலும், உபகரணங்கள் தளபாடங்கள், உணவைக்களஞ்சியப்படுத்தல், நீர் வழங்கல், கழிவு அகற்றல் முகாமைத்துவம், உணவுகளின் தரம் நியமம் பாதுகாப்பு, உணவு கையாள்பவர்களின் சுகாதார நிலையும் பயிற்சியும் ,எழுத்து மூலமான அறிவுரைகளை அவளிக்காட்டி வைத்தல் முதலான பத்து தலைப்புகளில் இவர்களுக்கான விழிப்புணர்வும் அறிவுரைகளும் பொது சுகாதார பரிசோதகர்களால் வழங்கப்பட்டன.


(அச்சுதன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தவார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதான பார்வை

## Ceylon today

### "மனிதவுரிமை விவகாரங்களை ஆராய்வது கடினமானது"

### அவ்தேஸ் கௌசால்

HUMAN RIGHTS

மனித உரிமை விவகாரங்களுக்கு ஆலோசகராக சனாதிபதியால் அழைக்கப்பட்டுள்ள அவ்தேஸ் கௌசால் மனிதவுரிமை விவகாரங்களை ஆராய்வது சவால் மிக்கதும், தொழில்நுட்ப ரீதியானதும் நேர விரயம் கொண்டதுமாகும் எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தனது பணிக்காக தனது 25 மாணவர்களைப் பயன்படுத்தப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### மின்கட்டணக் குறைப்பு

### வாயே திறக்காத மின்சபை + அமைச்சு

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD


இரண்டாவது நுரைச்சோலை மின் வழங்கு முறைமை செயற்படத் தொடங்கியதும் மின் கட்டணங்கள் குறைந்துவிடும் என அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்த கருத்துத் தொடர்பாக மின்சாரசபையும், மின் அமைச்சும் வாயே திறக்காது உள்ளன.

### மேலும் 52 தனியார் பல்கலைக்கழகங்கள்

இலங்கையில் மேலும் 52 புதிய தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்க சனாதிபதி எண்ணம் கொண்டிருப்பதாக உயர்கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

### ஐரோப்பா 65 பழ கொள்கலன்களை

### திருப்பியனுப்பியது



இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட 85 பழக் கொள்கலன்களில் 65ஐ ஐரோப்பா திருப்பியனுப்பியுள்ளதாக பழ ஆராய்ச்சிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். வண்டுகளால் பழங்கள் தாக்கப்பட்டுள்ளதாலேயே இவ் அனர்த்தம் நிகழ்ந்துள்ளதாம். இதனையடுத்து மேலைத்தேய நாடுகள் பல இலங்கைப் பழ இறக்குமதிக்குத் தடை விதித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

### சீன வங்கிக்கு 2.6 பில்லியன் டொலர்

### கடன்

CHINA EXIM BANK
THE EXPORT-IMPORT BANK OF CHINA

2009 தொடக்கம் 2013 வரையான காலப்பகுதியில் இலங்கை மீதான எக்ஸிம் வங்கியிலிருந்து 2.6 பில்லியன் (2665 மில்லியன்) டொலர்களைக் கடனாகப் பெற்றுள்ளது.

இலங்கையின் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களுக்கும் இவ்வங்கியே கடன் வழங்கியுள்ளது. இவ்வங்கியிடம் மட்டும் ஏன் கடன் பெறப்பட்டது? என எதிர்க்கட்சி வினவியதை அடுத்து அமைச்சர், கலாநிதி சரத் அமுனுகம சரியான திட்டமிடல் மற்றும் ஆய்வுகளின் பின்னரே இவ் வங்கியிடமிருந்து நிதி பெறப்பட்டதாக தெரிவித்தார்.

### "வடக்குத் தமிழரே! சரியாக வாக்களியுங்கள்"

### சுப்ரமணியம் சுவாமி



முழு உரிமையையும் பெற வேண்டுமெனில் வடக்கின் தமிழர்கள் உணர்ச்சிக்கு வாக்களிக்காமல் தந்திரோபாயமாக வாக்களிக்க வேண்டும் என சுப்ரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார்.

தமிழர்கள் இலங்கையின் ஏனைய இனங்களில் இருந்து வேறானவர்கள் இல்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## the Island

### முன்னாள் மின்சபைத் தலைவருக்கு

### எதிராக நடவடிக்கை

ஆலொசகர் ஒருவரின் சேவை ஒப்பந்தத்தைத் தன்னிச்சையாக இடைநிறுத்தியதால் மின்சபையால் செலுத்தப்பட்ட ரூபா 30மில்லியன் தொடர்பாக முன்னாள் மின்சார சபைத் தலைவர் மற்றும் முன்னாள் நிறைவேற்று அதிகாரிக்கு எதிராக சட்ட நடவடிக்கையை மேற்கொள்ள தற்போதைய மின்சபைத் தலைவர் உத்தரவிட்டுள்ளார்.

## Sunday Observer

### த.தே.கூ வின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு

TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

அரசினால் முன்னெடுக்கப்படும் சமூக நலத் திட்டங்கள் தொடர்பாக த.தே.கூ கொண்டுள்ள மனோநிலைக்கு எதிராக தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

20 மில்லியன் பெறுமதியான இரணைமடு நீர் வினியோக நடவடிக்கைக்கு த.தே.கூவால் எழுந்துள்ள எதிர்ப்பையிட்டு தமது கண்டனங்களை த.வி.கூ ஆனந்த சங்கரியும், ஈ.பி.டி.பி யின் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவாநந்தாவும் தெரிவித்துள்ளனர்.

### அழகு நிலையங்களை ஒழுங்குபடுத்த

### சட்டம்



அழகு நிலையங்களை ஆய்வு செய்யும் வலுவை பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு வழங்கும் முகமாகவும், நிலையங்களை ஒழுங்குபடுத்தவும் என சட்டதிட்டங்களை உருவாக்கும் முயற்சியில் அழகுப்பொருட்கள் மற்றும் மருந்து ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு ஈடுபடவுள்ளது. அழகு சாதன நிலையங்கள் மருத்துவ நிலையச் சட்டதிட்டங்களுக்குள் உள்வாங்கப் படாமையால் அவற்றை நிர்வகிக்கும் திறனுள்ள சட்டங்களை இவ் ஆணைக்குழு உருவாக்கவுள்ளது.

## Mirror

### போக்குவரத்து பாதிப்பு

கொழும்பு, கொள்ளுபிட்டி பிரதேசத்தில் பாரிய வாகன நெரிசல் ஏற்பட்டு, போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் பெய்துவரும் கடும் மழை காரணமாக கொள்ளுபிட்டி டுப்ளிகேன் வீதியில் மரமொன்று முறிந்து வீழுந்ததையடுத்தே அப்பகுதியின் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

வாகன நெரிசலை தவிர்த்துகொள்ள மாற்று வழிகளை பயன்படுத்துமாறு வாகன சாரதிகளை பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

## The Leader

### வெளிநாட்டு முகாம்களில் வதியும்

### இலங்கையர் யார்?

வெளிநாட்டிலுள்ள முகாம்களில் வதியும் இலங்கையர் தொடர்பான விபரங்களை திரட்டவுள்ளதாக காணாமற் போனோர் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தமது வேண்டுகோளுக்கு அமைய வெளிநாடுகளை நோக்கி இந்தத் தகவல்களைத் தந்துதவுமாறு வெளிவிவகார அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளதாக இவ்வாணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

காணாமற் போனோர் தொடர்பான பட்டியலொன்றை தாம் வெளிவிவகார அமைச்சிற்கு வழங்கியுள்ளதாகவும் அப்பட்டியலுக்கு அமையவே இக்கோரிக்கை விடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இப் பட்டியலில் உள்ளவர்கள் வெளிநாட்டு முகாம்களில் வதிகின்றார்களா என்பது தொடர்பாக வெளிநாட்டு அரசுகள் ஆராய்ந்து தகவல்களை அனுப்பினால் போதும் என அவர் தெரிவித்துள்ளார்.

## The Sunday Times

### சிங்கப்பூர் கம்பனி எவ்வாறு வந்தது??

நிலக்கரி கொள்வனவு செய்வதற்காக சிங்கப்பூரைத் தளமாகக் கொண்டியங்கும் கம்பனியை மட்டும் தேர்வு செய்தது எவ்வாறு என்ற கேள்வி அமைச்சரவையில் எழுப்பப்பட்டதைத் தொடர்ந்து இம்முடிவை வாரமொன்றுக்கு அமைச்சரவை பிற்போட்டுள்ளது.

இலங்கைக்கு நிலக்கரியை வழங்கவென கூறுவிலைகள் கோரப்பட்டபோது மொத்தமாக ஆறு கம்பனிகள் விலைகளை சமர்ப்பித்திருந்தன. அவற்றுள் ஐந்து கம்பனிகளை நீக்கிய விதம் தொடர்பாக எழுந்துள்ள கேள்விகளுக்குச் சரியாக பதிலளிக்க வேண்டியதற்காகவே முடிவு பின்போடப்பட்டுள்ளது.

### தோட்டத் தொழிலாளரே!

### றொட்டி சாப்பிடாதீர்கள் - அமைச்சர்



தோட்டத் தொழிலாளரின் நாளாந்த உணவுகளுள் ஒன்றான கோதுமை றொட்டியை சாப்பிட வேண்டாம் என அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன கேட்டுக் கொண்டுள்ளார். இதற்காக தோட்டத் தொழிலாளருக்கு மானிய விலையில் அரிசி மா கிடைக்க வழி வகுக்கப்படும் என அவர் கூறினார்.

அதற்கமைய முதல் வருடத்தில் கிலோ 60.00 ரூபாவிற்கு விற்கப்படும் அரிசிமா அடுத்தவருடம் ரூபா 70.00 இற்கும் அதற்கு அடுத்து வரும் வருடங்களில் அதே விலையில் வழங்கவும் அவர் உத்தேசித்துள்ளார்.

### புதிய அதிகாரங்களுடன்

### புதிய போக்குவரத்து ஆணைக்குழு

பாடசாலை, தொழில் போக்குவரத்து உட்பட ஏனைய போக்குவரத்து சேவைகளையும் இலங்கை ஒழுங்குபடுத்தும் செயற்பாட்டை மேற்கொள்ளவுள்ளது. இவ் ஒழுங்குபடுத்தல் அதிகாரங்கள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு மேலும் அதிகாரங்களை வழங்கவுள்ளது.



### யுத்த வீரர் யுத்தம் செய்கின்றனர்

கடற்படையைச் சேர்ந்த யுத்த வீரர் ஒருவர் தனது விடயங்களுக்குப் போராட வேண்டியிருப்பதாக தெரிகின்றது. போரில் பணியாற்றியதற்காக ரண விக்ரம பதக்கம் பெற்ற அவர்விக்ரம விபூஷன பதக்கத்திற்கு முன்மொழியப்பட்ட போது கடற்படையில் இருந்து இளைப்பாறி அரச சேவையில் இணைந்துள்ளார்.

அதற்குப் பின்னர் அவரது கோரிக்கைகள் செவிமடுக்கப்படவில்லையாம். தனது மனைவியைக் கூட இழந்து நிற்கும் அவருக்கு ஓர் இடமாற்றம் கூட வழங்கப்படவில்லையாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சிமாற்றத்தை நோக்கிய அரசியல் நகர்வுகளும் கூட்டமைப்பினரின் வாக்கு அரசியலும்

இலங்கைத் தீவில், அடுத்த ஆண்டு முற்பகுதியில் ஜனாதிபதித் தேர்தலும், அதனைத் தொடர்ந்து பொதுத் தேர்தலும் நடைபெற விருப்பதாகத் நம்பப் படும் நிலையில், அங்கு நடப்பு அரசியல் இத்தேர்தல்களை மையப்படுத்தியதாக அமைந்திருப்பதனை அவதானிக்க முடிகிறது. தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காகவே தாம் பாராளுமன்றம் செல்வதாகக் கூறும் தமிழ் தேசியக்கூட்டமைப்பினரும் தத்தமது ஆசனங்களை தக்க வைத்துக் கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கூட்டமைப்பின் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு வாய்ப்பான பிரதேசங்களில் கட்சிப் பணிமனைகளை அமைப்பதும், கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் தனித்தனியே மாநாடுகளை நடாத்துவதும் அவர்கள் தேர்தலை சந்திக்கத் தயாராகுகிறார்கள் என்பதனையே காட்டுகிறது. இந்நிலையில், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளையிட்டு அக்கறைப்படாமல், அவர்களது அரசியல் நிலைப்பாட்டையே கேள்விக்குறியாக்கும் வகையில் கூட்டமைப்பினர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அதையிட்டு கேள்வி எழுப்புதல் அவசியமாகிறது.

பொதுவில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமை பேசும் விடயங்களை வைத்துப் பார்த்தால், அவர்களது அரசியல் கோரிக்கைகளாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

- தமிழ் மக்களின் நிலங்கள் பறிக்கப்படுவது நிறுத்தப்பட்டு அவர்கள் தமது சொந்த இடங்களில் குடியேறுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்.
- வடக்கு கிழக்கில் இராணுவம் குறைக்கப்பட்டு சிவில் நிர்வாகம் நடைபெறவேண்டும்.
- மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.
- பதின்மூன்றாம் திருத்தத்திற்கு அப்பாற் சென்று அரசியல்த் தீர்வு வழங்கப்பட வேண்டும்.
- இறுதி யுத்தத்தில் சிறிலங்கா அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் மேற்கொண்டதாக கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பாக பக்கச்சார்பற்ற பன்னாட்டு விசாரணை நடாத்தப்பட வேண்டும்

மேற்குறித்தவை கூட்டமைப்பில் தீர்மானம் எடுக்கக்கூடிய நிலையில் உள்ள சம்பந்தன், சுமந்திரன் போன்றவர்களால் தெரிவிக்கப்பட்டுவரும் கருத்துகளிலிருந்து பெறப்பட்டவை. இன்னொரு விதத்தில் கூறுவதானால், இவைதான் தமிழ் தேசியத்தரப்பைச் சேர்ந்தவர்கள் என்பவர்களால் முன்வைக்கப்படும் ஆகக்குறைந்தளவிலான அரசியல் கோரிக்கைகளாக இருக்கும். தேர்தல் மேடைகளில் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் போன்றவர்களது உணர்ச்சி வசப்பட்ட கருத்துகளே மேலோங்கி நிற்கும் என்பது வேறுவிடயம்.

எனினும், இவ்வாறான குறைந்தபட்ச அரசியற் கோரிக்கைகளிலாவது கூட்டமைப்பினர் உறுதியாக இருக்கிறார்களா என்றால், அதனையும் உறுதியாகச் சொல்ல முடியாதளவிற்கு அவர்களது நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன. இதுவே பாராளுமன்றத்தையும், மகாணசபை, மற்றும் உள்ளூராட்சிச் சபைகளையும் மட்டும் நம்பியிருக்கிற தாயக அரசியலின் இன்றைய அவல நிலமை.

இந்திய அதிகார மையத்தினதும், மேற்குலகச் சக்திகளினதும் வழி நடத்தலிலேயே கூட்டமைப்பு இன்று இயங்கி வருகிறது. ஜனாதிபதித் தேர்தலில் கூட்டமைப்பு யாரை ஆதரிக்க வேண்டும், பாராளுமன்றத் தேர்தலில் யாரை வேட்பாளர்களாக நிறுத்துவது போன்ற விடயங்களில் வெளித்தரப்பின் ஆலோசனைகளின்படியே கூட்டமைப்பின் தலைமை நடந்து கொள்கிறது. இது விடயத்தில் கூட்டமைப்பின் தலைமைக்கு எதுவித தயக்கமும் இருப்பதாகத் தெரியவில்லை. மாறாக மேற்குலகமும், இந்தியாவும் தங்களை அங்கீரித்திருக்கின்றன என்ற செய்தியை தமிழ் மக்கள் மத்தியில் பெருமிதத்துடன் வெளியிட்டு வருகிறது.

2010 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலைப் போன்று இம்முறையும் எதிர்கட்சிகளின் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை நியமித்து இவ்அரசாங்கத்தை தோற்கடிக்க முடியும் என்ற நம்பிக்கை வெளிச்சக்திகளிடமிருக்கிறது. அவர்களது ஆலோசனையை சிரமேற்றுச் செயற்பட கூட்டமைப்பு தயாராகிவிட்டது என்பதனை சம்பந்தன், சுமந்திரன் போன்றோர் அண்மையில் வெளியிடும் கருத்துகளிலிருந்து அறிய முடிகிறது.

சில மாதங்களுக்கு முன்னர் குசால் பெரெரா என்ற பத்தி எழுத்தாளர் தனது கட்டுரை ஒன்றில் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக விக்னேஸ்வரனை நியமிக்கலாம் என்ற ஆலோசனையை முன்வைத்திருந்தார். இதனை ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளினதும் ஒருமித்த கோரிக்கை போன்று எடுத்துக்கொண்டு, விக்னேஸ்வரன் பொது வேட்பாளருக்கு பொருத்தமானவர் என சுமந்திரன் பத்திரிகைகளுக்கு கருத்து வெளியிட்டார்.

விக்னேஸ்வரனும் தன் பங்கிற்கு, மிகவும் பெருந்தன்மையுடன் தனக்கு அவ்வாறான எண்ணமில்லை எனக் குறிப்பிட்டிருந்தார். ஆனால், ஐக்கிய தேசியக்கட்சி உட்பட எந்தவொரு எதிர்க்கட்சியும் குசால் பெரேராவின் இந்த ஆலோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை. சிறிலங்கா ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள பௌத்தர் அல்லாத ஒருவரை வெற்றி பெறச் செய்யும் பக்குவத்தில் பெரும்பான்மை வாக்காளர் இருக்கிறார்கள் என வெளியுலகுக்கு காட்ட முனைவது, தொடரும் தமிழின அழிப்பினை மறுதலிக்கும் செயற்பாடு என்பதனை அறியாதவராக சுமந்திரன் இருக்கிறாரா, அல்லது இதன் மூலம் ஒன்றுபட்ட இலங்கைத் தீவினுக்குள் அரசியல்த் தீர்வு சாத்தியம் என்பதனை வெளிப்படுத்துகிறாரா என்பதனை தீர்மானிக்கும் பொறுப்பினை இதைப் படிப்பவர்களிடமே விட்டுவிடுகிறேன்.

இப்போது பொது வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்படக் கூடியவர்கள் என சந்திரிகா குமாரணதுங்க, சரத் பொன்சேகா, சிரானி பண்டாரநாயக்க ஆகிய மூவரினதும் பெயர்கள் அடிபடுகின்றன. தமிழ்மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்காக அரசியல் செய்வதாகக் கூறும் கூட்டமைப்பினரும் இவ்விடயத்தில் ஏன் அக்கறைப்பட வேண்டும் என்ற கேள்வி தமிழ் மக்களிடமிருந்து எழுவது நியாயமானது. தமிழ் மக்களுக்கு எதிரான போரை நடாத்தி, பாரிய இனவழிப்பை மேற்கொண்ட சிறிலங்காப் படைகளின் இராணுவத் தளபதியாக விருந்த சரத்பொன்சேகா, தமிழ் மக்களின் இரத்தத்தால் நனைந்திருக்கும் கரங்களுடன் ஜனாதிபதித் தேர்தலில் நின்ற போது அவருக்கு ஆதரவளிக்குமாறு வேண்டிய கூட்டமைப்பினர்தான் மீளவும் பொது வேட்பாளர் ஒருவருக்கு வாக்களிக்குமாறு கேட்டு தமிழ் மக்களிடம் வரவிருக்கிறார்கள்.

கடந்த முறை கூறியது போன்று, இவ் அரசாங்கத்தை தோல்வியடைச் செய்யவேண்டும் என்பதுதான் அவர்களது ஒற்றைக் கோரிக்கையாக இருக்கப்போகிறது. இதனுடன் சேர்த்து, நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை இல்லாமல் செய்வதற்கு தமது பொது வேட்பாளருக்கு வாக்களிக்குமாறும், அவ்வாறு செய்யும்போது, தமிழ்மக்கள் நன்மையடைவார்கள் எனத் தம்மை நியாயப்படுத்தப் போகிறார்கள். ஆனால் மேற்குறிப்பிட்ட தமது ஆகக்குறைந்த அரசியற் கோரிக்கைகளையாவது பொது வேட்பாளர் நிறைவேற்றுவார் என கூட்டமைப்பினரால் உறுதியளிக்கமுடியுமா?

அண்மையில் ஹருவிற்றரில் நடைபெற்ற தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர்களுடனான கருத்து மோதலில், சுமந்திரன் விசமத்தனமான கருத்தொன்றை வெளியிட்டிருந்தார். அதாவது, 2010ம் ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு – கிழக்கில் சரத் பொன்சேகா பெற்ற வாக்குகள், பின்னர் ஏப்பிரல் மாதத்தில்



நடைபெற்ற பொதுத் தேர்தலில் கூட்டமைப்பு பெற்றவாக்குகளை விட அதிகமானது எனவும் தமிழ்மக்கள் சரத் பொன்சேகாவை ஏற்றுக்கொண்டிருந்தனர் என்பதுபதாகவும் அவரது கருத்து அமைந்திருந்தது. இவ் அரசாங்கத்தின் மீதான தமிழ் மக்களின் வெறுப்பை பயன்படுத்தி சரத் பொன்சேகாவிற்கு வாக்களிக்குமாறு கேட்டிருந்த கூட்டமைப்பு அதனை சரத் பொன்சேகா விற்கான ஆதரவு வாக்குகள் எனக் காட்ட முனையும் ஆபத்தான நகர்வினையிட்டு தமிழ் மக்கள் நிச்சயம் அவதானமாக இருக்க வேண்டும்.

பொது வேட்பாளர்களாக நியமிக்கப்படக் கூடியவர்கள் என்ற பட்டியலில், சந்திரிகா குமாரணதுங்கவின் பெயரே முதனிலையில் இருப்பதாகத் தெரியவருகிறது.

சம்பந்தன், சுரேஸ்பிரேமச்சந்திரன், சித்தார்த்தன் போன்றவர்கள் சந்திரிகா ஆட்சிக்காலத்தில், அவ்வரசாங்கத்துடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணிவந்தவர்கள் என்ற வகையில் சந்திரிகாவினை ஆதரிப்பதில் அவர்களுக்கு எதுவித தயக்கமும் இருக்காது. ஆனால், தமிழின அழிப்பு விடயத்தில் சற்றும் தளைத்தவரல்லாதவராக இருந்த இன்னொரு போர்க் குற்றவாளியான சந்திரிகா புதிதாக எதனை சாதிக்கப் போகிறார் என்பதனையிட்டு கூட்டமைப்பினர்தான் மக்களுக்கு விளக்க வேண்டும்.

இதனிடையே, சிங்கள தேசியவாதத்தை முன்னிறுத்தி மீண்டும் தேர்தலில் இறங்கப்போகும் மகிந்த இராஜபக்சவின் வெற்றிவாய்ப்புகள் இன்னமும் அதிகரித்த நிலையிலேயே காணப்படுகிறது என்பதனையும், தேர்தல்கள் மூலமான ஆட்சி மாற்றம் தற்போதைக்கு சாத்தியப்படாது என்ற நடைமுறை யதார்தத்தினையும் யாரும் புறந்தள்ளிவிட முடியாது. ஆகவே மகிந்தவை எதிர்ப்பது என்ற போர்வையில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு எதிரான செயற்பாடுகளில் தமிழ் அரசியற்கட்சிகள் இறங்குவது தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாட்டை நலிவடையச் செய்வதாகவே அமையும்.

**நன்றி : கோபி, ஒரு பேப்பர்** (www.orupaper.com)

# பாலஸ்தீனத்திலிருந்து அமெ. பெண் ஊடகவியலாளரின் இறுதிப் பதிவு

இஸ்ரேல் இராணுவத்தால் கொல்லப்படுவதற்குச் சில நாட்களுக்கு முன்னர், ரச்சேல் தன் பெற்றோர்களுக்கு எழுதிய கடிதத்திலிருந்து... சில பகுதிகள்!

நான் பாலஸ்தீனத்துக்கு வந்து சரியாக இரண்டு வாரங்களும் ஒரு மணி நேரமும் ஆகி விட்டது. ஆனால் இங்கே நான் காண்பதை உங்களுக்கு விவரிக்க, அதாவது அமெரிக்காவுக்குப் புரிய வைக்க வார்த்தைகள் கிடைக்காமல் தவிக்கிறேன். குண்டுகளால் துளைக்கப்பட்ட வீட்டுச் சுவர்கள், கழுகுப் பார்வையால் கண்காணிக்கும் இராணுவம் – இவையிரண்டும் இல்லாத ஒரு வாழ்க்கையை இங்குள்ள குழந்தைகள் வாழ்ந்ததேயில்லை. இருப்பினும் "வாழ்க்கை என்பது எல்லா இடங்களிலும் இந்த மாதிரி இல்லை" என்பதை இங்குள்ள சின்னஞ்சிறு பிள்ளைகள் கூடப் புரிந்து வைத்திருக்கிறார்கள்.

நான் இங்கே வந்து இறங்குவதற்கு இரண்டு நாட்கள் முன் ஒரு 8 வயதுச் சிறுவனை இசுரேலிய இராணுவம் சுட்டுக் கொன்று விட்டது. "அவன் பெயர் அலி" என்று என்னிடம் கிசுகிசுக்கிறார்கள் இங்குள்ள குழந்தைகள். இந்தச் சிறுவர்கள். உலக அரசியலின் அதிகாரம் எப்படி இயங்குகிறது என்பதைப் பற்றி நான் முன்னர் புரிந்து வைத்திருந்ததைக் காட்டிலும் இங்கே இருக்கும் 8 வயது வாண்டுகள் தெளிவாக அறிந்திருக்கிறார்கள். புத்தகங்கள், கருத்தரங்குகள், விவாதங்கள், செய்திப் படங்கள் போன்ற பல வழிகளில் பாலஸ்தீனத்தைப் பற்றி நான் சேகரித்த அறிவு அனைத்தையும் விஞ்சுகிறது இங்குள்ள யதார்த்தம். நேரில் பார்த்தாலொழிய நீங்கள் இதைப் புரிந்து கொள்ளவே முடியாது. ஒருவேளை நேரில் வந்து அனுபவித்தாலும் முழுமையாகப் புரிந்து விட்டதாக நான் சொல்லிக் கொள்ள முடியாது.

என்னையே எடுத்துக் கொள்ளுங்கள். இங்குள்ள கிணறுகளை இடித்தாலும் தண்ணீர் வாங்கிக் குடிக்க என்னிடம் பணம் இருக்கிறது நினைத்தால் நான் உடனே அமெரிக்காவுக்குத் திரும்பி விடலாம் என் குடும்பத்தினர் யாரையும் இராணுவம் ராக்கெட் வீசிக் கொன்றதில்லை எனக்கொரு வீடு இருக்கிறது. நான் ஆற அமரக் கடலைக் கண்டு ரசித்திருக்கிறேன் பள்ளிக் கூடத்திலிருந்து திரும்பும் வழியில் இராணுவத்தால் கொல்லப்படுவேனோ என்ற பயமின்றி சந்தோஷமாக நான் வீடு திரும்பியிருக்கிறேன். எனவேதான் இக்குழந்தைகள் வாழும் உலகத்திற்குள் கால் வைத்த மறுகணமே இந்தக் கொடூரங்களைக் கண்ணால் கண்ட மறுகணமே என் ரத்தம் கொதிக்கிறது. "ஒருவேளை ஒரு பாலஸ்தீனச் சிறுவன் அமெரிக்கா எனும் என்னுடைய உலகத்தை நேரில் வந்து பார்த்தால் அந்தப் பிஞ்சு மனம் எப்படித் துடிக்கும்" என்ற கேள்வி என்னை வாட்டுகிறது.

இவர்களைப் போலன்றி நான் வேறொரு வாழ்க்கையை வாழ்ந்து பார்த்திருக்கிறேன். அமைதியான இடத்தில் வசித்திருக்கிறேன். கிணற்றை இடித்து குடிக்கும் தண்ணீரை இராணுவம் பறித்து விடும் என்று நான் கற்பனையில் கூட அஞ்சியதில்லை. இரவு தூங்கிக் கொண்டிருக்கும் போது வீட்டின் சுவர்கள் உட்புறமாக இடித்துத் தள்ளப்பட்டு நான் பதறி விழித்ததில்லை. என்னுடைய வீட்டை நாற்புறமும் இராணுவக் கோபுரங்கள் கொலைவெறியுடன் குறிபார்க்கவில்லை.

ஆனால், இந்த பாலஸ்தீனச் சிறுவர்களோ நாம் வாழும் அமைதியான வாழ்க்கையை அறிந்ததே இல்லை. நினைத்துப் பாருங்கள். உங்கள் குழந்தைப் பருவம் முழுவதும் உயிர் வாழ்வதற்காக மட்டுமே நீங்கள் போராடிக் கொண்டிருந்தால் எப்படி இருக்குமென்று! உலக வல்லரசின் ஆதரவுடன், உலகின் நான்காவது பெரிய இராணுவம் உங்களையும் உங்கள் வீட்டையும் துடைத்தெறிவதற்கு மூர்க்கத்தனமாக முனைந்து கொண்டேயிருக்க, அதையெதிர்த்து நீங்கள் போராடிக் கொண்டேயிருக்க வாழ்க்கை என்பதே இதுதான் என்றால்...

அதனால்தான் எனக்கு இப்படித் தோன்றுகிறது. இந்த பாலஸ்தீனக் குழந்தைகள் அமெரிக்கா எனும் என்னுடைய உலகத்தை உண்மையிலேயே நேரில் பார்த்தால் என்ன நினைப்பார்கள் என்ற கேள்வி என்னை வாட்டுகிறது.

**நன்றி :** (www.tamilcnnlk.com)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இப்ப என்ன பண்ணுவ"

... நாட்டு நடப்பு...

- பாலையூற்றான் -

சில பிள்ளைகள் ஒரு குறிப்பிட்ட வயதை கடந்தபின் ஒரு பக்குவ நிலைமைக்கு வந்து விடுவார்கள். எதையும் தாங்களே திட்டமிட்டு செயல்படுத்துவார்கள். அவர்களுக்கு பெற்றோர் மற்றும் உறவினர் எவரது ஆலோசனையும் வழிகாட்டலும் என்றுமே தேவைப்படாது. நல்லவைகளை நன்கு சிந்தித்து என்றும் நல்ல வழியிலே நடப்பதால் பெற்றோர்களுக்கும் உற்றார் உறவினர்களுக்கும் என்றுமே தொந்தரவாக இருக்கமாட்டார்கள்.

சிலருக்கு ஆலோசனை, வழிகாட்டல் அத்தனையும் தேவை. அதைவிட அவர்களுக்கு விசேட பாதுகாப்பு, கண்காணிப்பு என்றெல்லாமே தேவை. ஒரு குடும்பச் சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டுதான் அக்குடும்பத்தின் பிள்ளையினது எதிர்காலம் அமைகிறது.

சில பிள்ளைகள் தமது சுய முயற்சியினால் முன்னேறி விடுவார்கள். ஆனால் சிலர் அப்படியல்ல. பிறந்த நாள் தொடக்கம் பெற்றோருக்கு பெரும் தொந்தரவாக இருப்பார்கள். மேலும் பிள்ளைகள் பெற்றோரை வெறுத்தாலும் பெற்றேரார்களால் பிள்ளைகளை புறம் தல்ல முடியாது. அதேவேளையில் தாம் ஈன்றெடுத்த பிள்ளைகளை ஏனொ தானோ என கவனிக்கும் பெற்றோர்களும் இல்லாமல் அல்ல. அவள் கீழ்தரமாக நடந்துகொள்வதற்கு காரணம் அவளின் பெற்றோரே. பாடசாலை காலத்தில் அவள் புரிந்த அட்டகாசங்களை கண்டும் காணாதது போன்று பெற்றோர் நடந்து கொண்டதே இன்று முழுக்குடும்பத்தையும் நடுத் தெருவுக்கு கொண்டு சென்றுள்ளது.

க.பொ.த(சாதாரண) தரத்தைக் கூட அவளால் பூர்த்தி செய்ய முடியவில்லை. கண்மூடித்தனமாக காதல் வலையில் சிக்குண்டதால் படிப்பில் அவளால் கவனம் செலுத்த முடியவில்லை. வாலிபர்களும் அவளை சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தனர். தொடர்ந்து தமிழ் வாலிபர்களுடன் மிக நெருங்கி பழகிய அவளுக்கு ஓர் மாற்றம் தேவைப்பட்டது.

வித்தியாசமான பொழுது போக்கை கொண்ட அவளால் எதுசரி, எது பிழை என சிந்திக்கக்கூட முடியவில்லை. தான் சமூகத்தில் நடந்து கொள்ளும் விதம் மிக தவறானது என புரிந்து கொள்ளும் விவேகமும் அவளிடம் அப்பொழுது இருக்கவில்லை. நேரத்திற்கு நேரம் உடைகளை மாற்றி அணிவது போன்று தனது காதலர்களையும் அடிக்கடி மாற்றிக் கொண்டாள். தான் அங்குள்ள இளைஞர்கள் அனைவரினதும் இதயங்களில் இடம்பிடிக்க வேண்டுமென்ற வெறி அவளை மேலும் மோசமான நிலைக்குத் தள்ளியது. அப்பகுதி தமிழ் வாலிபர்களுடன் ஊரை சுற்றிக் கொண்டிருந்த அவளை காணாது பெற்றோர் அன்று எங்கும் தேடத் தொடங்கினர்.

அன்று ஊர் முழுதும் அவளைப்பற்றியே பேச்சு இடம்பெற்றது. அவள் எங்கு சென்றுள்ளாள்? யாரும் அவளை கடத்தி விட்டார்களா? மேலும் காவல்துறை வரை அச்சம்பவம் சென்றுவிட்டது. அவர்களும் அன்று அவளை தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

உற்றார், உறவினர்கள் அனைவரும் அவள் வீட்டுக்குச் சென்று துக்கம் விசாரிக்கத் தொடங்கினர். அயல் கிராமமொன்றிலிருந்து கிடைக்கப்பெற்ற கையடக்க தொலைபேசி தகவலை அறிந்து பெற்றோர் அங்கு சென்றனர். அவள் அந்த வீட்டில் அவ்வீட்டாருடன் சந்தோசமாக உரையாடிக் கொண்டிருந்ததைக் கண்டனர். அவளைக் கண்டு அவளின் பெற்றோர் கவலை அடைந்தாலும், அவள் மிகவும் அமைதியாக காணப்பட்டாள். தங்கள் பிள்ளை கிடைத்த சந்தோசத்தை பெற்றோர்களால் வெளிப்படுத்த முடியவில்லை. காரணம் அங்கு இடம் பெற்றிருந்த சம்பவமே.

அந்த வீட்டுக்காரன் முஸ்லீம் இனத்தைச் சார்ந்தவர். அவரின் மகனுடன் அவள் ஓடிச் சென்றிருந்தாள். வெட்கத்தை வெளியில் காட்டமுடியாது பெற்றோர் தவித்தனர். எப்படியோ அந்த வீட்டுக்காரருடன் ஓர் இணக்கப்பாட்டிற்கு வந்து எப்படியோ மகளை கூட்டிக் கொண்டு அவர்களின் கிராமத்திற்கு மீண்டும் சென்றனர்.

சுமார் மூன்று மாதங்கள் பெற்றோர் அவளை வீட்டுக்கு வெளியில் செல்ல அனுமதிக்கவே இல்லை. உலை வாயை மூடினாலும் ஊர் வாயை மூடமுடியுமா? ஏற்கனவே அந்தக் குடும்பத்தின் கீழ்தரமான நிலையை ஊரார் அறியாமலா என்ன? அண்மையில் நடந்த சம்பவம் அவர்களை மேலும் மேலும் கேவலப்படுத்தியதுடன், கவலையும் அடையச் செய்தது.

அந்தக் குடும்பத்தில் அவள் மாத்திரம் தான் அப்படி நடந்து கொண்டாள் என்று கூறமுடியாது. அவள் அந்தக் குடும்பத்தில் கடைசி மகள். அவளின் மூத்த மூன்று சகோதரிகள் கூட பெற்றோரின் விருப்பத்தின் பேரில் திருமணமானவர்கள் அல்ல. முறையற்ற விதத்தில் தமக்கு தேவையானவர்களை துணைவர்களாக தேடிக் கொண்டவர்கள்.

அப்பகுதி அரசினர் மருத்துவமனையில் பெண் தொழிலாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. அப்பதவிக்கு அவளும் விண்ணப்பித்திருந்தாள். க.பொ.த (சாதாரணம்) தரம் அவள் சித்தி பெறாவிட்டிருந்தாலும் அவளது நண்பி ஒருவரின் குறித்த சான்றிதழை சமர்ப்பித்து ஆள்மாறாட்டம் புரிந்து எப்படியோ அப் பதவியை பெற்றுக்கொண்டாள்.



தற்பொழுது அவள் வேலைக்கு செல்வதால் பெற்றோர் அவளை முழுதாக நம்பினார்கள். முன்பு புரிந்த குழப்படிகளை அவள் மீண்டும் புரிய மாட்டாள் என்பதால் அவள் தொடர்பில் திருப்தியடைந்திருந்தனர். அவளும் பெற்றோர் திருப்திப் படும் விதத்தில் நடந்து கொண்டாள்.

அவளின் வீட்டுக்கு முன்னால் உள்ள மைதானப் பகுதியில் படையினர் புதிதாக முகாம் ஒன்றை அமைத்திருந்தனர். அந்தப் பகுதியில் பயங்கரவாதிகளின் ஊடுறுவல்கள் இரகசியமாக இடம்பெறுவதாக புலனாய்வுத் துறையினர் பாதுகாப்பு அமைச்சுக்கு அறிக்கையிட்டடை அடுத்தே அவ்வாறான முகாம் அங்கு அமைக்கப்பட காரணமாக இருந்தது.

அவள் அங்குள்ள சிப்பாய்கள் பலருடன் மிக நெருக்கமானாள். இனி கேட்கவா வேண்டும்? அவர்களும் அடிக்கடி அவளின் வீட்டுக்கு சென்று வரத் தொடங்கினர். அப்பகுதியில் மிக அன்யோன்யமாக அவர்களுடன் பழகும் குடும்பம் அவளின் குடும்பமே என அங்கு பரவலாகப் பேசப்பட்டு வந்தது.

படையினர் தமது வீட்டுக்கு வந்து போவதை அவ்வீட்டார் கௌரவமாக நினைத்தனர். சமையல், சாப்பாடு கூட முகாமிலிருந்து அந்த வீட்டுக்கும் இங்கிருந்து முகாமிற்கும் இடையில் பரிமாற்றப்படும். விடுமுறை நாட்களில் வீட்டுக்கு முன்னால் நின்று கொண்டு சிப்பாய்களுக்கு கைகளை அசைப்பதும் சகஜமாக அவர்களுடன் அவள் பேசிப் பழகுவதும் சர்வ சாதாரண நிகழ்வுகளாகவே இருந்து வந்தன. ஊரார் அதைப்பற்றி பெரிது படுத்துவதில்லை. ஏதாவது நடந்து முடியட்டும் என அமைதியாக இருந்தனர்.

மேலும் அவளின் குடும்பம் ஒரு பெரிய குடும்பம். சுமார் ஆறு பேர்ச் காணிக்குள் ஐந்து குடும்பங்கள் வாழ்கின்றனர். இந்தியாவிலுள்ள சேரிகள் போன்று சிறுசிறு கொட்டில்களை அமைத்து அவளின் சகோதரிகள் அங்கு தத்தமது குடும்பங்களுடன் வாழ்ந்து வருகின்றனர். அங்கு ஒரே ஒரு மலசலகூடமே உள்ளது. அதை சுமார் 25 பேர் உபயோகித்து வருகின்றனர்.

அக்காணி அரச திணைக்களமொன்றின் ஒதுக்கீட்டுக் காணியாகும். அது அப்பகுதியில் ஓய்வு பெற்ற ரெச உத்தியோகத்தரின் காணியுடன் இணைந்திருந்த காணியாகும். அவளின் பெற்றோர் இருப்பதற்கு இடமில்லாமல் அலைந்து திரிந்த பொழுது அவர்கள் மீது இரக்கப்பட்டு அவர்கள் அதில் இருப்பதற்கு அவர் அனுமதியளித்திருந்தார்.

ஆனால் அவளின் பெற்றோர் அக்காணித் தண்டுக்கு தவறான தகவல்களை வழங்கி வருடாந்த காணி அனுமதிப் பத்திரமொன்றை மிக இரகசியமாக பெற்றிருந்தனர். எப்படியோ அந்த ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தருக்கு அது தெரிய வரவே அவர் அதை இரத்துச் செய்ய உடனடி நடவடிக்கை எடுத்தது மாத்திரமல்ல, உரிய அரச நிறுவனம் மூலம் அங்கு அமைக்கப்பட்டிருந்த அனைத்து கட்டிடங்களும் அனுமதியற்ற கட்டிடங்களாக கணித்து உடனடியாக அவற்றை அகற்ற நீதிமன்ற உத்தரவும் பெறப்பட்டது.

அந்த உத்தரவை முடியடிக்க முடியுமென அவர்களின் சட்டத்தரணி ஆசை காட்டவே அது மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீட்டுக்காக கொண்டு செல்லப்பட்டாலும் அங்கும் அது தோற்கடிக்கப்பட்டது. இருந்தாலும் அந்த விடயத்தை அவளின் பெற்றோர் மிக இரகசியமாக வைத்திருந்தனர். அவளும் தற்பொழுது திருமண வயதை பூர்த்தி செய்துவிட்டாள். அவள் யாரை மனப்பூர்வமாக விரும்புகிறாள் என்பதை அவளின் பெற்றோர் தெரிந்து கொள்ளத் தவறவில்லை. இனியும் அவளை தனித்து வைக்க விரும்பாது அவளுக்கு திருமணத்தை நடாத்தி வைத்தனர். சீதனமாக கொடுப்பதற்கு பெற்றோரின் கையில் அந்தக் காணியை விட வேறொன்றும் இருக்கவில்லை. அவள் தனது விருப்பத்திற்கேற்ப தேர்ந்தெடுத்தது வேறு யாரையுமல்ல. வீட்டுக்கு முன்னால் முகாமிட்டிருந்த கடற்படை சிப்பாய்களில் ஒருவரையே. அவன் சிங்கள சிப்பாயாக இருந்தாலும் தமிழ் இனத்தைச் சார்ந்த அவளை துணிந்து திருமணம் செய்ய முன்வந்ததை பாராட்டாமல் இருக்கமுடியாது. அவள் ஏற்கனவே பல தமிழ் வாலிபர்களின் உள்ளங்களில் இடம்பெற்றிருந்தாலும் வயதுக் கோளாறின் காரணமாக முஸ்லீம் வாலிபனுடன் அன்று ஓடிப் போயிருந்தாள். இன்று சிங்கள இனத்து சிப்பாயை மனம் விரும்பி மணந்து கொண்டாள். தனக்கு பெற்றோரால் தரப்பட்ட அந்தக் காணியில் தனிக் குடித்தனத்திற்காக வீடொன்றைக் கட்ட அங்குள்ள தனது அனைத்து சகோதரிகளின் குடும்பங்களை வெளியேறும்படி உத்தரவையும் பிறப்பித்துவிட்டாள்.

இனிமேல் என்ன நடக்கப் போகின்றதோ தெரியவில்லை! காணிக்குரிய வழக்கின் தீர்ப்பை பெற்றோர் மிக இரகசியமாக வைத்துக் கொண்டதற்குக் காரணம் அவளின் திருமணத்தில் எந்தவித குளறுபடியும் நேக்கூடாதென்பதற்காகவே. திருமணமும் நடந்தேறிவிட்டது. புதிய தம்பதிகளால் காணியில் வீடு கட்டுவதற்காக அங்குள்ளவர்கள் அனைவரையும் அகற்றுவதற்கான நடவடிக்கையினால் ஒட்டு மொத்த குடும்பத்தில் தற்பொழுது சுனாமி தோன்றியுள்ளது. குறித்த வழக்கின் கட்டளையை வழக்கு தாக்கல் செய்த அரச நிறுவனம் என்று அமுல்படுத்த போகின்றதோ அன்று தான் பாரிய சுனாமியை அவ்வூரில் காணக்கூடியதாக இருக்கும்.






## மணமாகாமல் தந்தையான பெருமை

டச்சு நாட்டை சேர்ந்த Ed Houben என்பவர் கொடுத்த விந்தணு மூலம் இதுவரை 98 குழந்தைகள் பிறந்துள்ளதாகவும், இவர் கடந்த 2002ஆம் ஆண்டு முதல் விந்தணு தானம் செய்து வருவதாகவும் கூறப்படுகிறது.

இதுவரை திருமணம் ஆகாத 34 வயதான இவர் உலகிலேயே விந்தணு தானம் மூலம் அதிக குழந்தைகளுக்கு தந்தையானவர் என்ற பெருமையையும் இவர் பெற்றுள்ளார். இவர் தன்னுடைய விந்தணுக்களை பெரும்பாலும் லெஸ்பியன் ஜோடிகளுக்கு கொடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சொந்த காசில் சூனியம் செய்தவர்

டான்சர் ஒருவருக்கு $350 கொடுத்து தனக்கு விருப்பமான டான்ஸை ஆடச்சொன்னதாகவும், அதன்பின்னர் அவர் அந்த நடனம் ஆடும் பெண்ணை செக்ஸ் உறவுக்கு அழைத்ததாகவும், அதற்கு நடனப்பெண் மறுத்ததாகவும் அப்பெண் மீது போலீஸாரிடம் புகார் கூறிய ஒருவர் அதிரடியாக கைது செய்யப்பட்டு அவர் மீது விபச்சாரத்தை துாண்டியதாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.




## அதிர்ஷ்ட காற்று வீசியது



அமெரிக்காவில் Jabbar Collins என்பவர் கடந்த 1994ஆம் ஆண்டு R.A.Pollack என்பவரை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டார். சந்தர்ப்பங்களும் சாட்சியங்களும் அவருக்கு எதிராக இருந்ததால் அவருக்கு நீதிமன்றம் 20 வருட சிறைத்தண்டனை 1999ஆம் ஆண்டு அளித்து தீர்ப்பளித்தது. அதுமுதல் கடந்த 15 வருடங்களாக சிறைத்தண்டனை அவர் அனுபவித்து வருகிறார்.

சில நாட்களுக்கு முன்னர் R.A.Pollack என்பவரை கொலை செய்ததாக வேறொருவர் பிடிபட்டபோதுதான், இந்த கொலையை செய்யாத ஒருவர் சிறையில் இருப்பது தெரியவந்தது. உடனடியாக அவரை விடுதலை செய்யவும், அவருக்கு $10 மில்லியன் நஷ்ட ஈடு கொடுக்கவும் முடிவு செய்யப்பட்டது.

## புதிய தந்திரோபா



சீனாவில் ஆல்கஹால் தயாரித்து விற்பனை செய்யும் நிறுவனங்கள் இடையே ஏற்பட்ட கடும்போட்டியை சமாளிக்க ஒரு நிறுவனம் தாங்கள் உற்பத்தி செய்யும் ஆல்கஹாலில் வயாகராவை கலந்து விற்பனை செய்ததால் அந்த நிறுவன அதிபர் அதிரடியாக கைது செய்யப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ரூம் போட்டு யோசிப்பார்களோ?

ரோமானியாவை சேர்ந்த நான்கு பேர் கொண்ட கும்பல் ஒன்று ஏ.டி.எம் செண்டர்களில் பணம் எடுக்க வந்தவர்களிடம் இருந்து நூதனமான முறையில் சுமார் 60,000 வங்கிக் கணக்குகளில் இருந்து £16million பவுண்ட் பணத்தை கொள்ளையடித்த அதிர்ச்சி சம்பவம் ஒன்றை பிரிட்டன் போலீஸார் கண்டுபிடித்து அவர்களை கைது செய்துள்ளனர்.



## வாயில கை வேணாமே

பிரான்ஸில் மோனாகோ (Monaco) நகரில் உள்ள அழகிய உயரமான பெந்தவுஸ் (penthouse) கட்டிடம் விற்பனைக்கு வந்துள்ளது. 300 மில்லியன் பவுண்ட்ஸ் விலைக்கு விற்கவுள்ள இந்த கட்டிடம் உலகின் விலை மிகுந்த கட்டிடம் என பெயர் பெரும் என பலர் தெரிவித்துள்ளனர்.

170 மீ உயரம் அளவுடன், ஒவ்வொரு மாடியிலும் அழகிய படுக்கை அறைகள், உணவு அருந்தும் அறை, சமையல் அறை, உடற்பயிற்சி கூடம், அழகு நிலையம் என அனைத்து வசதிகளும் உள்ளது. மேலும் கட்டிடத்தின் 47 வது மாடியில் சருக்கி வரும் நீச்சல் குளம் உள்ளது. கட்டிடத்தில் உள்ள 167 வீடுகளையும் மோனாகோ அரசு வாங்க உள்ளது.



# ஒரு வாய்ப்பு வேண்டும்!!

## சிறுகதை

அம்மா.. அம்மா.. என்னோட லேப்டாப் பேக் கொஞ்சம் எங்க இருக்குன்னு பாருங்க. ஏய் கவி என்னோட ஷூவிற்கு பாலிஷ் போட்டியா?

ஆமா! காலைல எழுந்திருச்ச உடனே அண்ணன் செய்யற பந்தா தாங்க முடியல.

ஏய் கவி பேசாம வாய மூடு. அவன் காதில விழுந்தா உன்னைய உண்டு இல்லைன்னு ஆக்கிவிடுவான்.

எங்க கணேஷ காணோம். அவன சீக்கிரம் வண்டிய கிளீனா துடைக்கச் சொல்லு. ஐயோ ஆண்டவா உங்கள ஏவி ஒவ்வொரு வேலைய சொல்லறது க்குள்ள எனக்கு வயசு ஆகிவிடும்.

பாவம் கமலாம்மா. இவங்களுக்கு இரண்டு பையன். ஒரு பெண். அவங்க வீட்டுக்காரர் பேரு ரமணி. அவரு ஒரு கம்பெனியில் நல்ல போஸ்ட்ல இருந்தாரு. திடீர்னு அவர் ஒரு நாள் ஆபிசில் இருக்கும் போது மயக்கம் போட்டு விழுந்துட்டார். கடைசில ஹாஸ்பிட்டல்ல சேர்த்தாங்க. பின்னதான் தெரிஞ்சது அவருக்கு பக்கவாதம் வந்துடிச்சுன்னு. அதனால பெரிய பையன் விக்னேஷ் மேல எல்லா பொறுப்பும் விழுந்திடுச்சு.



விக்கி நல்ல புத்திசாலி. எம்.சி.ஏ. கோல்ட் மெடலிஸ்ட் யுனிவர்சிட்டியில். அவனுக்கு நல்ல சாப்ட்வேர் கம்பெனியில் வேலை. மாசம் இரண்டு லட்சம் சம்பாதிக்கிறான். அதனால வீட்டில அவன் வச்சதுதான் சட்டம். யாரும் அவன கேள்வி கேட்க முடியாது.

விக்கி இந்தாப்பா மதியத்துக்கு சாப்பாடு.

எனக்கு வேண்டாம். நான் காண்டீனில் சாப்பிட்டுக்கிறேன்.

பார்த்து போப்பா. இந்தா ஹெல்மெட் போட்டுக்கிட்டு போ. அம்மா பேசாம இருங்க. இந்தா கண்றாவி எல்லாம் பயப்படறவங்களுக்குதான். எனக்கு இல்ல. வரட்டா.

இந்த காலனியில் வண்டி உறுமுகிற சத்தம் கேட்டாலே விக்கி கிளம்பிவிட்டான் என்று அர்த்தம். அவன் வீட்டில் உள்ளவர்களை எப்பொழுதுமே வண்டியில் ஏற்றிக் கொண்டு சென்றதில்லை.

ஒரு வழியா அவன் ஆபீஸ் கிளம்பி விட்டான்.

ஏம்மா அண்ணன் மட்டும் வெளிய சாப்பிடுது. நானும் எங்க காலேஜ் காண்டினில் சாப்பிடவா?.

ஏய் கவி நீ அடி வாங்கப்போற?.

நீ நல்லா விக்கிக்கு சப்போர்ட் பண்ற.

சரிசரி சீக்கிரம் காலேஜ் கிளம்பு. எனக்கு தலைக்கு மேல வேலை இருக்கு.

இரவு விக்கி வந்தவுடன் அவன் அம்மா கேட்டாள்.

ஏம்பா நாளைக்கு கணேஷுக்கு ஸ்கூல் பீஸ் கட்டணும். பிளஸ்டுக்கு எல்லாரும் தனியா டியூஷன் போறாங்க. அவனும் போகணும். அதுக்கும் சேர்த்து பணம் வேணும்பா.

சரி எவ்வளவு வேணும்னு சொல்லு. டேய் கணேஷ் ஒழுங்கா படிக்கல அப்பறம் இருக்கு உனக்கு.

நான் நல்லா படிக்கறேண்ணா.

சரி..சரி. பார்க்கலாம்.

அப்புறம் அப்பாவ டாக்டரிடம் செக்கப் கூட்டிக்கிட்டு போகணும்.

உங்களுக்கு காசு எவ்வளவு வேணும்னு சொல்லுங்க நான் தரேன். ஆனா என்னால எல்லாம் கூட்டக்கிட்டுப் போக முடியாது.

விக்கி வீட்டில் எல்லாரிடமும் அதிகாரத்துடன்தான் பேசுவான். அவன் குடும்பச் செலவுக்குப் போக மீதி பைசா எல்லாம் அவன் வைத்துக்கொள்ளுவான். வீட்டில் யாரிடமும் பிரியமாகப் பேசமாட்டான். அவன் அப்பா இப்படி இருப்பது அவனுக்கு அவமானமாக இருந்தது.

தங்கை, தம்பிக்கு பிறந்தநாள் என்றாலும் ஒரு வாழ்த்து சொல்லமாட்டான். அவனுக்கு எல்லாமே நண்பர்கள்தான்.

தப்பித்தவறி வீட்டில் இருந்தாலும் இன்டர்நெட்டில் இருப்பான். யாரிடமாவது பேசிக் கொண்டு இருப்பான். அவன் வீட்டில் இருந்தால் வீடே அமைதியாக இருக்கும். அவனைப் பார்த்தாலே ஈகோ பிடித்த ஆள் என்று முகத்தில் தெரியும்.

நல்ல அறிவாளியாக இருந்தாலும், குடும்பத்தை மதிக்காமல் ஊர் சுற்றக் கிளம்பி விடுவான். அவன் அப்பாவிற்கு இவனிடம் பேச வேண்டும் என்ற ஆசை இருந்தது. ஆனால் இவன் மதிக்க மாட்டான். இப்படியே நாட்கள் கடந்தது. ஒரு முறை ஆபீஸ் முடிந்து வீட்டுக்கு வந்தவுடன் டிவி பார்த்துக் கொண்டு இருந்தான்.

கவிதா வெளியே போயிட்டு லேட்டாக வந்தாள். கண்டபடி திட்டினான். அவன் அம்மாவால் ஒரு வார்த்தை பேசமுடியவில்லை.

கடைசியில் யாருமே அன்று இரவு சாப்பிடவில்லை.

காலையில் விக்கி எழுந்து விட்டான். எதுவும் சாப்பிடாமல் அவசரமாகக் கிளம்பி விட்டான். அவன் அம்மா கவனமா போப்பா என்று சொன்னது கூட அவன் காதில் விழவில்லை. தலையில் ஹெல்மெட் மாட்டாமல் வேகமாக ஸ்பீடில் போனான். ஏதோ ஒரு யோசனையில் மெயின் ரோடில் திரும்பும் போது எதிரே வந்த லாரியில் மோதி தூக்கி வீசப்பட்டான்.

ஒரு வழியாக ஹாஸ்பிடலில் சேர்த்து வீட்டுக்கு தகவல் சொல்லப்பட்டது. அவனுக்கு கண்விழித்துப் பார்க்கும் போது ஒரு காலே இல்லை என்று தெரிந்தவுடன் கதறி அழுதான். அவன் குடும்பமே அவனைப் பார்த்து அழுதது.

ஐயோ அண்ணா உனக்குப் போய் இப்படி கடவுள் கொடுத்துட்டாரே. என் கால வேணா எடுத்துக்கட்டும். அவன் தம்பி அவன் கையை பிடித்துக் கொண்டு அழுதான். அவன் அம்மாவோ மயக்க நிலையில் இருந்தாள். அவன் அப்பா வீல் சேரில் உட்கார்ந்து கொண்டு கண்ணீர் விட்டார்.

விக்கி மனதில் நினைத்தான்.

ஐயோ இவ்வளவு பேரும் என்னிடம் பிரியமாக இருக்கிறார்களே, இவர்களை எல்லாம் மதிக்காமல் ரொம்ப அலட்சியப்படுத்தி விட்டேன். கவி உன்னைய எத்தினை நாள் திட்டி இருப்பேன். நீ என்னடான்னா உன் காலை கொடுக்கிறேன்னு சொல்லுற. அப்பா ஒரு மூலையிலே அழுகிறாரு. இந்தப்பக்கம் தம்பி வருத்தப்படுகிறான். சே எத்தனை நாள் இவங்கள மதிக்காம இருந்திருக்கிறேன்.

கடவுளே எனக்கு ஒரே ஒரு சந்தர்ப்பம் கொடு. என் குடும்பத்தை சந்தோஷமா நான் வைக்கணும். என் தம்பி, தங்கையை வண்டியில் கூட்டிகிட்டுப் போகணும். அப்பா கூட மனசுவிட்டு பேசணும். அம்மா உங்கள எவ்வளவு பாடுபடுத்தினேன். ப்ளீஸ் அம்மா என்னைய மன்னிச்சுடுங்க. இனிமே என்னால வண்டி ஓட்ட முடியாது.

கடவுளே கொஞ்சம் என்மேல் கருணை காட்டக் கூடாதா? நான் செஞ்சது எல்லாமே தப்புதான். என் குடும்பத்தை மதிக்காமல் வெளியே நல்ல பெயர் எடுத்து என்ன பயன்? எனக்கு இனிமேல் வாழ்வே இல்லை என்று கதறி அழுதான். அப்பொழுது அவன் அம்மா, ரூமுக்கு ஓடிவந்து என்னப்பா ஆச்சு என்று கேட்டாள்.

அவன் அம்மா குரல் கேட்டு விழித்தான்.

அவன் அம்மா என்ன விக்கி ஏதாவது கனவு கண்டையா?.

அவனுக்கு அப்பொழுதுதான் புரிந்தது. அவன் காலைத் தொட்டுப் பார்த்தான். அவன் அம்மாவிடம் கையைப் பிடித்துக் கொண்டு அழுதான்.

அம்மா இவ்வளவு நாள் உங்களை எல்லாம் மதிக்காமல் இருந்தேன். என்னை மன்னித்து விடுங்கள். இன்னையிலேர்ந்து நான் நல்ல பிள்ளையாக நடந்துகொள்வேன்.



என்னப்பா ஆச்சு. சரி சரி கிளம்பு. வேலைக்கு போகணும்ல.

இல்லம்மா ஒருவாரத்துக்கு லீவ் போட்டுட்டு உங்க கூட இருக்கப் போறேன்.

அவன் அம்மாவிற்கு புரிந்தது, இவனுக்கு மாற்றம் வந்துவிட்டது என்று.

நன்றி - வீ.நிஷாந்தினி

# எங்கே நடந்தது தவறு

மணி பத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. கீதா ஸ்கூட்டியின் வேகத்தைக் கூட்டினாள். தவசி நகர் திருப்பத்தில் வேகமாக திருப்பவும் சிறு கல் முன் சக்கரத்தை பதம் பார்த்தது. தடாலென்று கீழே வண்டியோடு சாய்ந்தாள்.

எதிர்வீட்டிலிருந்த கமலாம்பாள் ஓடிவந்து அவளைத் தூக்க முயன்றாள். வயது மூப்பில் தளர்ந்த உடலால் இதெல்லாம் சாத்தியமா? நல்லவேளை தெருவில் போன யாரோ வண்டியையும் அவளையும் தூக்கி விட்டனர். கைத்தாங்கலாய் கமலாம்பாள் உள்ளே அழைத்துச் சென்றாள். முகத்தை துடைத்துவிட்டு தண்ணீர் தந்து ஆசுவாசப்படுத்தினாள் சீதா சற்று தெளிவானாள்.



நல்லவேளை தோளில் தொங்கிய ஹாண்ட்பேக் டேபிள் மேல வைக்கப்பட்டிருந்தது. எடுத்து செல்லை உசுப்பி அலுவலகத் தோடு தொடர்பு கொண்டு விசயத்தைச் சொல்லி ஒருமணி நேரம் பர்மிஷன் கேட்டாள்.

பேசி முடித்ததும் கமலாம்பாள் காப்பியை நீட்டினாள் நிமிர்ந்து வாங்கிய போது சுவரில் தெரிந்த போட்டோ அவளை அதிர வைத்தது.

"இது யாரும்மா?" கீதா கேட்டாள்.

"இது எம் பையன் விஷ்ணு. அம்பாள் இண்டஸ்ட்ரீஸ்லே வேலை பாத்துண்டிருந்தான். என்ன பொல்லாத காலமோ கம்பெனில கட்டச் சொல்லிக் கொடுத்த ரெண்டு லட்ச ரூபாய பேங்க்ல கட்டினானாம்.. ஆனா அவா கம்பெனிக் கணக்குலே வரவு வர்லேன்னு சஸ்பெண்ட் பண்ணீட்டா. ஒரு வாரமாச்சு பாவம் பைத்தியமா அலையறான்."

"விஷ்ணுவை எனக்கு நல்லாத்தெரியும் அப்படிப்பட்ட ஆளு இல்லை. எங்கயோ தவறு நடந்திருக்கு. அவர் பணம் கட்டினது எங்க பேங்க்லதான்.. இவ்வளவு சீரியஸாகுமுன்னு நினைக்கலை நீங்க கவலைப்படாதீங்க. உடனே இந்தப் பிரச்சினையைக் கவனிக்கறேன்."

"எப்படியோ தாயி அந்தக் கடவுள்தான் உன்னை அனுப்பிச்சிருக்கார். நிச்சயம் ஒரு வழி பொறக்கும்."

கீதா கிளம்பினாள்.

பேங்க் மும்முரத்திலிருந்தது. கீதா தன் சீட்டில் அமர்ந்தவுடன் அம்பாள் இண்டஸ்ட்ரீஸ்க்கு போன் செய்தாள். கம்பெனி முதலாளிதான் பேசினார்.

பணம் கட்டிய தேதியையும் தொகையும் கணக்கு எண்ணையும் கேட்டுக் குறித்துக் கொண்டாள்.

அடுத்து அதே தொகை, அதே தேதியில் வேறு யாருக்காவது வரவு வைக்கப்பட்டிருக்கிறதா என்பதை கம்ப்யூட்டரின் பற்களை பதம் பார்த்தாள்.

அடுத்தசில நிமிடங்களில் அது உண்மையைக் கக்கி விட்டது. அம்பாள் இஞ்சினீரிங்ஸ் என்ற கம்பெனிக்கு அதே தொகை அதே தேதியில் வரவு வைக்கப்பட்டிருந்தது. அந்தக் கம்பெனியை அழைத்துக் கேட்டதில் அவர்கள் அந்த தேதியில் வேறு தொகைதான் கட்டப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். விஷயம் இதுதான் அம்பாள் இண்டஸ்ட்ரீஸ் கணக்கு எண் 1300023 ஆனால் அம்பாள் இஞ்சினியரிங்ஸ் கணக்கு எண் 1300032. பிங்கரிங் மிஸ்டேக். சம்மந்தப்பட்ட அதிகாரியை அழைத்து ட்ரான்ஸ்பர் என்டரி போடச் சொல்லி உத்திரவிட்டாள். பணம் அம்பாள் இண்டஸ்ட்ரீஸ் கணக்கில் வரவு வைக்கப்பட்டது.

மீண்டும் அம்பாள் இண்டஸ்ட்ரீஸ் முதலாளியை அழைத்தாள். "சார் உங்க கணக்கில பணம் வரவு வச்சாச்சு. பாவம் சார் விஷ்ணு நல்ல மனுசன் இதில அவரோட தப்பு எதுவுமில்லே ரொம்ப புவர்பேமலி அவர் அம்மாவப் பார்த்தேன். முகத்தில மூக்குத்தி தவிர வேற எதுவுமில்லை இவுங்களா திருடியிருப்பாங்க." "


சாரிம்மா இவ்வளவுதூரம் நீங்களே சொல்லும் போது நா மறுப்பேனா இதோ இப்பவே சஸ்பென்சன் ஆர்டரை கேன்சல் பண்றேன்." என்றார் அவர்.

அடுத்த அரைமணிக்குப் பின் விஷ்ணு நன்றி சொல்ல கீதாவின் அறைக்கு வெளியே காத்திருந்தார்.

நன்றி - சந்திரக்கமலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போரும்... புழுக்களும்....



புழுக்களுக்குத் தெ
தம்மால் போராட
முடியாதென்று...

மெதுமெதுப்பான தோல்
கொழ.. கொழ வென்றோர்
திரவம் அதனுள். . . .

நகர்வோ மிகச் சோம்பேறி
அருவருப்பாய்
நெளியும் - புழுக்களுக்கு
தெரியும்...

சில புழுக்கள் பரிணாமம்
அடையும். .
சிலவேளைகளில்
ஒரு பறவையாய்
விசம் கொண்ட வோர்
ஜந்தாய். .
இன்னும் ஏதொவாய் ...
புழுக்கள் பரிணாமம் அடையும்
எனினும்
போரிடாது . . . ஏனெனில்
அது புழு தான் . .

எதிரிகளுக்கு அஞ்சும் - புழுக்கள்
தமக்கோர் இடத்தில்
குகைகளில்,
மரப்பட்டைகளில்
மறையும் - குடும்பம்
பெருக்கும் . . .

புழுக்கள் போரிடாது . . .

ஆனாலும்

புழுக்களை
யாருக்குமோ பிடிப்பதில்லை.

புழுக்கள் போரிடாது - ஆனால்
எதிரிடுவோரையெல்லாம்
அஞ்ச வைக்கும் . . .

பரிணாமமடையாப் புழுக்களை . . . .
போரிடாப் புழுக்களை
நசுக்கி எறியவே
பேரினம் விரும்பும்
நசுக்கி எறியப் போர்
தொடங்கும்

புழுக்கள் விரும்பாத
போர் . . .
போரிட விரும்பாத
புழுக்கள் . . .

புழுக்களின் வாழ்வும்
போராகும் . . .
புரிகின்றதா உங்களுக்கு!



– மாயன் –

## குணம் குப்பையிலே

பணம் பந்தியிலே
குணம் குப்பையிலே
பழமொழிகள் என்றும்
பொய்த்துப் போவதில்லை
புனித பூமியிலே

ஏய்த்துப் பிழைப்பவர்
ஓர் புறம்
ஏமாற்றிப் பிழைப்போர்
ஓர் புறம்

மந்திரம் செய்து பிழைபபோர்
ஓர் புறம்
பெரும் தந்திரம் செய்து
பிழைப்பவர் ஓர் புறம்

திருப்பிக் கொடுக்கவே
போவதில்லை என்ற
திருட்டுக் கொள்ளையோடு
வாங்கி ஏமாற்றுபவர் ஓர் புறம்

நல் உலகையே தம் இழி
செயலால் நாசப்படுத்தும்
கூட்டம் இருக்கையிலே
பணம், பந்தியிலே
குணம் குப்பையிலேயே!

– – கே.நிஷா – –

## அழியாத சொத்து

பெண்ணுக்குள் உருவாகும்
இன்பம் - அவள்
கண்ணுக்குள் கதைபேசும்
ஆயிரம்!

விண்ணுக்குள் எத்தனை
அதிசயம் - இந்த
மண்ணுக்குள் - இருப்பது
பல வளம்!

அன்புக்கு மேலான சக்தி
அகிலத்தில் வேறேதுமில்லை
அன்றும் இன்றும் என்றும்
அழியாத சொத்து அன்பே!

தொன்மை மிக்கது தமிழ்
சோதனையில் சாதனை புரிவது தமிழ்
செம்மொழியானது தமிழ்
செந்தமிழ் எங்கள் உயிர்!

– சேனையூரான் –

## ஓர் ஏமாற்றுப் பாட்டு

இரவுகளில் உன் நினைவுகள் என்னைச் சுற்றுகின்றன

ஆறு தன்னுடைய நிலையான ஒப்பாரியைக்

கடலோடு சேர்ந்து இசைக்கிறது

உதய நேரத் துறைமுகம் போல

எதுவும் இல்லாமல் ஆயிற்றே.



இது பிரிவின் வேளை

ஓ! பிரிந்து சென்றவளே!

குளிர் மலரின் முகங்கள் அனைத்தும்

என் நெஞ்சில் சாராலாகின்றன.

ஓ! எருக்குளியே நீ

கப்பலையும் மூழ்க வைத்த பயங்கரக்

கெவியாகி விட்டாய்.

நூல் : மறுபாதி
–சௌ.மதார் மைதீன்–
சிலிக் குயிலுக்கு ஓர் செங்கவிதாஞ்சலி – ௨00௯

## போற்றத்தகும்!

– தாமரைத்தீவான்–
[ஈச்சந்தீவு, கிண்ணியா]

எத்தனை பேர் தமிழை எழுதி இருந்தாலும்
பத்து முறையும் படித்திடலாம் ! - வித்தியே
வேளாண்மை செய்துமே வென்றிட்ட பாவாணர்
தாளாண்மை போற்றத் தகும்!

பாவாணர் தமிழைப் படித்தோர் வடசொல்லை
நாவாலுங் கூட நவிலாரே! - பாவாலே
போற்றியே பாவேந்தர் புகழ்ந்தாரெனில் வேறு
கூற்றில்லை என்று நீ கொள்!

பாவாணர் நூலைப் படியாத் தமிழர்கள்
காவாரோ தமிழைக் கடைசிவரை - நோவாமல்
தமிழ்த் தாயைப்பேணும் தரத்தைப் பெறுவாரோ?
அழுதுண்ணுவாரோ அவர்?

அன்னாரின் நூலில்லா அரியநூற் காட்சிதனை
என்னென்றுரைப்போம், இனியேனும் - அன்னாரின்
தன்னேர் இலாத தமிழ் நூல்களும் சேர்ந்து
மின்னட்டும் நூற்காட்சி மேல்!



## ஒவ்வொரு வரிகளும் உனக்கே சொந்தம்

காற்றுக் கூட
என்மேல் - கோவம்
கொள்கிறது
காரணம் கேட்டேன்...
சுவாசிப்பது என்னை
நேசிப்பது அவனையா - என்கிறது
அதற்கு தெரியவில்லை
நான் சுவாசிப்பதும்
உன்னையே என்று!

– சந்தீபனீ –

## புதிய ஆபத்திலா? – தமிழ் மொழி



உலக மொழிகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் எழுத்துக்கும் ஒரு தனிக் குறியீடு ஒதுக்கப் படுகிறது. இக்குறியீடு எல்லா வகைக் கணிகளிலும் ஒன்றாகவே இருக்கும்.

ஒருங்குறிக் கட்டமைப்பு என்பது பல்வேறு தளங்களால் ஆனது:

- அடிப்படைப் பன்மொழித் தளத்தில் (Basic Multilingual Plane-BMP) தமிழ் உள்ளிட்ட மொழிகள் அனைத்தும் இடம்பெற்றுள்ளன. அதிகமாகப் பயன்படும் எண்-குறிகள், கணிதக் குறிகள், சின்னங்கள், மீக்குறிகள் போன்றவையும் இதில் இடம் பெறுகின்றன.
- துணைப் பன்மொழித் தளத்தில் (Supplementary Multingual Plane - SMP) வழக்கொழிந்த மொழிகளின் எழுத்துக் குறிகளும், அரிதாகப் பயன்படும் எழுத்துக் குறிகளும்,
- துணைப் பன்மொழித் தளத்தோடு கூட துணைப் படமொழித் தளமும் (Supplementary Ideographic Plane) உள்ளது.

ஒருங்குறிச் சேர்த்தியம் 1991ஆம் ஆண்டு தன் பணிகளைத் தொடங்கிய போதிலும், ஒருங்குறியைப் பயன்படுத்துவது 2000ஆம் ஆண்டுதான் தொடங்கியது.

ஒருங்குறி தோன்றிய போதே ஜ, ஸ, ஷ, ஹ ஆகிய கிரந்த எழுத்துகள் தமிழ் எழுத்து வரிசையில் சேர்க்கப்பட்டு விட்டன. ஒருங்குறிச் சேர்த்தியம் யாரைக் கேட்டுக்கொண்டு இப்படிச் செய்தது என்று தெரியவில்லை. இந்த கிரந்த எழுத்துகளைத் தமிழர்கள் பரவலாகப் புழங்குவது தெரிந்ததே,

கிரந்தம் கலந்த தமிழ் எழுத்துமுறை சமற்கிருத, ஆங்கிலச் சொற்களைத் தமிழில் கலந்து எழுதுவதற்கு (எ-டு: ஜெயம், ஜூனியர்) உதவியாகவும் ஊக்கமாகவும் அமைந்து விட்டது. கிரந்தம் தேவைப்படாத பெயர்களைக் கூட கிரந்தம் கலந்து எழுதுவதைப் பார்க்கிறோம் (சஞ்சய் இவ்விதம் "சஞ்ஜய்" ஆகி விடுகிறார். சங்கர் "ஷங்கர்" ஆகிறார்). இதை விடவும் பெருங்கொடுமை தூய தமிழ்ச் சொற்களை எழுதுவதற்கே கூட கிரந்தத்தைப் பயன்படுத்துவதாகும். மதுக்கடை ஒன்றின் பெயர்ப் பலகை "குறிஞ்ஜி வொய்ன்ஸ்" பருக அழைக்கிறது.

குறிஞ்சி கிரந்த போதையால் "குறிஞ்ஜி" ஆகித் தள்ளாடக் காண்கின்றோம். தமிழை விலக்கி வைப்பதற்குச் சான்றாக, காவல்காரன் படத்துக்கு இரசிகர்கள் வைத்துள்ள விளம்பரத் தட்டி "இளைய தளபதி விஜய்" என்று கொண்டாடுகிறது.

ஒருங்குறியில் நாமறிந்த ஜ, ஸ, ஷ, ஹ ஆகியவற்றோடு ஐந்தாவதாக நாம் இது வரை அறியாத ஒரு கிரந்த எழுத்தும் சேர்ந்து விட்டது. இந்த ஐந்தும் தமிழ் எழுத்துகளாகவே குறியிடப்பட்டிருப்பது பெருங்கொடுமை! இதற்கான முன்மொழிவை "உத்தமம்" என்ற அமைப்பு அனுப்பியதாம்! அமெரிக்காவில் வாழும் தமிழர் - கணிஞர் நா.கணேசன் இதற்குத் தூண்டுதலாம்! இந்தக் கொடுமையை ஒருங்குறியைப் பாரத்துத்தான் தமிழறிஞர்களே தெரிந்து கொண்டார்களாம்! ஆனால் இணையத்தில் இந்த எழுத்தை இருவர் மட்டுமே பயன்படுத்தி வருவது ஆறுதலான செய்தி. இந்த இருவரில் ஒருவர் நா.கணேசன்!

உத்தமமும் நா.கணேசனும் ஒருங்குறிச் சேர்த்தியத்தில் உறுப்பினர்கள். இன்னோர் உறுப்பினர் தமிழ்நாட்டில் இருக்கும் சிறிரமணசர்மா. இவர் கொடுத்த முன்மொழிவு: 26 கிரந்தக் குறிகளை ஒருங்குறிக்குள் கொண்டு வந்து, அதனைத் "தமிழ் நீட்சி" என அழைப்பதாகும். தமிழை இப்படி நீட்டினால்தான் சமற்கிருதம், சௌராட்டிரம் ஆகிய மொழிகளைத் தமிழ் வரி வடிவத்தில் எழுத முடியும் என்பது ரமணசர்மாவின் வாதம்.

பதறியெழுந்த தமிழறிஞர்கள் அவசரமாகத் தங்கள் மறுப்புக் கருத்துகளை ஒருங்குறிச் சேர்த்தியத்துக்கு அனுப்பி வைத்தார்கள். ஒருங்குறி அறிஞர்களான மலேசியாவைச் சேர்ந்த திரு முத்து நெடுமாறனும், தமிழகத்தைச் சேர்ந்த திரு மணி மு.மணிவண்ணனும் நுணுக்கமான முறையில் ரமணசர்மாவின் முன்மொழிவை நொறுக்கி விட்டார்கள்.

எப்படியோ ஒரு வழியாக ஒருங்குறிச் சேர்த்தியம் ரமணசர்மாவின் "தமிழ் நீட்சி"யை ஏற்றுக் கொள்ளவில்லை. ஒரேயடியாக மறுத்து விட்டதா என்று இனிதான் தெரிய வேண்டும்.

இம்முறை தமிழ் அறிஞர்கள், உணர்வாளர்களும், தமிழ் அமைப்புகளும் விழித்துக் கொண்டு விறுவிறுப்பாகச் செயல்படுவது நல்ல செய்தி. தமிழுக்கு இப்படித் திடுமென ஆபத்துகள் கிளம்புவது ஏன்?

உலகில் தமிழனைப் போலவே அவன் பேசும் மொழியும் நாதியற்றுப் போய் விட்டதே!

முற்றும்

- - சமூக நீதித் தமிழ்தேசம் - -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## முழிக்கும் சரண்



சரண், சிறு இடைவெளிக்கு பிறகு இயக்கி வரும் படம் ஆயிரத்தில் இருவர். இப்படத்தில் வினய் ஹீரோவாக நடிக்கிறார். முனி படத்தை தயாரித்த சரண், அப்பட போஸ்டர் அச்சடித்தது தொடர்பாக சிவகாசியை சேர்ந்த ஞானசேகரன் என்பவருக்கு கொடுத்த செக்கை, வங்கியில் செலுத்தியபோது பணமில்லை என்று திரும்பி வந்ததால், சரண் மீது வழக்கு தொடரப்பட்டது. இதன் அடிப்படையில் சிவகாசி போலீசார், படப்பிடிப்பில் இருந்த சரணை கைது செய்து, சிவகாசி கோர்ட்டில் ஆஜர்படுத்தினர்.

## திருமண பந்தத்தில் நஸ்ரியா



திருவனந்தபுரம் கழக் கூட்டத்தில் உள்ள அல்ஹாஜ் திருமண மண்டபத்தில் இருவருக்கும் திருமணம் நடைபெற்று. 2 பேரும் முஸ்லீம் மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் முஸ்லீம் மத வழக்கப்படியே சடங்குகள் செய்யப்பட்டு திருமணம் நடந்தது. இதில் சினிமா துறையினர், அரசியல் தலைவர்கள் உள்பட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.திருமணம் மண்டபம் முன்பு பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது. இவர்களது திருமண வரவேற்பு நிகழ்ச்சி வருகிற 24ம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஆலப்புழாவில் நடக்கிறது.



## 3வருட சிறையில்



marijuana போன்ற போதைப்பொருட்களை பிரபல நடிகர் ஜாக்கி சான் மகன், Jacyee Chan நேரடியாக கடத்தவில்லை என்றாலும், அவரும் அவருடைய நண்பர் Kai Ko அவர்களும் கடத்தி கொண்டுவரப்பட்ட போதைப்பொருட்களை உபயோகித்ததாகவும், மேலும் நண்பர்கள் வட்டத்தில் அதை விற்பனை செய்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளதாக சீனாவில் இருந்து வெளிவரும் சவுத் சைனீஸ் போஸ்ட் என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## நாய்க்கடி தேவையா சிபி

நாய்கள் ஜாக்கிரதை என்று வித்தியாசமான படத்தில் நடித்து உள்ளார்.இப்படம் ஒரு நாய்யை மையபடுத்தி வருகிறது, இதில் நாய் வளப்பரவராக சிபிராஜ் நடித்து உள்ளார், அவர் அந்த நாய் கிட்ட மாட்டிகிட்டு படு அவஸ்தையும் அதில் சில பல திருப்பமான விஷயங்களையும் சேர்த்து ஜனரஞ்சகமான தயாராகியுள்ளது.அவர் படத்தில் நடிக்கும் அந்த நாய் கிட்ட பல கடிகள் நடித்து உள்ளேன் ,சொல்லபோன என் உயிரை பண்ணையம் வைத்து நடித்து இருக்கிறேன் என்றார்.



## கஜோல், ஷாருக் 2015 இல்




ஷாருக்கான், கஜோல் நடிப்பில் ஆதித்ய சோப்ரா இயக்கத்தில் வெளிவந்த Dilwale Dulhania Le Jayengey திரைப்படத்தின் மொத்த பட்ஜெட் வெறும் ரூ.4 கோடிதான். ஆனால் இந்த திரைப்படம் உலகம் முழுவதும் ரூ.120 கோடி வசூல் செய்தது. மும்பையில் ஒரே தியேட்டரில் இந்த படம் மூன்று வருடங்கள் தொடர்ந்து ஹவுஸ்புல் காட்சிகளாக ஓடி வரலாற்று சாதனை படைத்தது. 20 வருடங்களுக்கு முன்பே மாபெரும் வெற்றியை கொடுத்த ஷாருக்கான் - கஜோல் ஜோடி மீண்டும் தற்போது ஒரு புதிய படத்தில் இணைய உள்ளனர்.

## அடுத்த முதல்வர்



பிரதமர் நரேந்திர மோடிக்கு மிகவும் நெருக்கமான அமித் ஷா, பாரதிய ஜனதாவின் தலைவர் ஆனபின்னர் ரஜினிகாந்த் அவர்களை தொடர்பு கொண்டு 2016ஆம் ஆண்டு நடைபெறும் தமிழக சட்டசபை தேர்தலில் ரஜினிகாந்தை பாஜகவின் முதல்வர் வேட்பாளராக அறிமுகப்படுத்தி தேர்தலை சந்திக்க விரும்புவதாக பேசியதாகவும், அதற்கு ரஜினி தரப்பில் இருந்து யோசித்து பதில் சொல்வதாக கூறியதாகவும் செய்திகள் வெளிவந்து கொண்டு இருக்கின்றன.



## ஒரு நல்ல மனிதன்

தமிழ் சினிமாவில் மாஸ் ஹீரோவான அஜித் இன்றைய இளைஞர்களின் ரோல்மாடலாக திகழ்கிறார். அதனால் தான் என்னவோ அவர் நடிக்கும் எல்லா படத்துக்கும் மிக பெரிய எதிர்பார்ப்பு உண்டு. அஜித் என்ற நடிகனை விட நல்ல மனிதனாக தான் எல்லோரும் பார்க்கிறோம். இன்று அவர் நடித்து கொண்டு இருக்கும் தல 55 படம் தான் கோடம்பாக்கத்தின் ஹாட் டாபிக், ஷூட்டிங் புகைப்படங்கள் வெளிவந்து இணைய தளத்தில் பட்டய கிளப்பி கொண்டிருக்கிறது.



## திரை விமர்சனம்

### லிங்குசாமியின் அஞ்சான்



மும்பையில் சூர்யா- வித்யுத் ஆகிய இரு நண்பர்களும் மா.'பியா கூட்டத்தை சேர்ந்தவர்கள். இவர்கள் இருவரையும் பார்த்தால் மும்பையே நடுங்குமாம். சூர்யா கேங்கை சேர்ந்த சிலரை மும்பை போலீஸ் கமிஷனர் கைது செய்ததால் அவரை மிரட்ட அவரது மகள் சமந்தாவை கடத்துகிறார் சூர்யா. பின்னர் கடத்தப்பட்ட சூர்யா ஆட்களை போலீஸ் விடுதலை செய்ததால் சூர்யாவும் சமந்தாவை நல்ல முறையில் திருப்பி அனுப்புகிறார். இந்த இடைவெளியில் சூர்யாவுக்கு சமந்தாவுக்கும் இடையே காதல் உண்டாகிறது.

இந்நிலையில் எதிர்கோஷ்டி மாபியா கேங் சூர்யாவின் நண்பர் வித்யூத்தை கொலை செய்ய, அவர்களை பழிவாங்க துடித்து காரில் சென்றுகொண்டிருக்கும்போது எதிர்பாராத டுவிஸ்ட்டில் அவரது கூட்டாளியே சூர்யாவை சுட்டு விடுகிறார். குண்டடிபட்டு பாலத்தில் இருந்து தண்ணீரில் விழும் சூர்யா, என்ன ஆனார்? சூர்யாவை கொலை செய்தது யார்? எதிர்கோஷ்டி வில்லனா? அல்லது போலீஸ் கமிஷனரின் ஆளா? போன்ற கேள்விகளுக்கு விடை கண்டுபிடிக்கிறார் கன்னியாகுமரியில் இருந்து மும்பை வரும் தம்பி சூர்யா. அவர் என்ன கண்டுபிடித்தார் என்பதே இரண்டாம் பாதி கதை. இதற்கிடையில் சிலபல டுவிஸ்ட்டுகளும் படத்தில் உண்டு. மகள் சமந்தாவை கடத்தியவனை சும்மா விடமாட்டேன் என கர்ஜிக்கும் மும்பை போலீஸ் கமிஷனரை இடைவேளைக்கு பின்னர் ஆளையே காணோம். அவர் எங்கே போய் சூர்யாவை தேடிக்கொண்டிருக்கிறார் என்பதை லிங்குசாமி தனது அடுத்த படத்தில் லாவது விளக்குவாரா? என்று பார்ப்போம். மும்பையில் சூர்யாவுக்கு எதிராக கேங்க்ஸ்டார் தலைவனாக வரும் வில்லன், மனோபாலாவை விட ஒல்லியாக, பார்ப்பதற்கே பரிதாபமாக இருக்கின்றார். இவரை போய் மெயின் வில்லனாக நடிக்க வைக்கும் ஐடியாவை லிங்குசாமிக்கு யார் கொடுத்தார்கள் என்றே தெரியவில்லை. தம்பியாக வரும் சூர்யாவின் நடிப்பு ஓகே. மற்றபடி கேங்க்ஸ்டார் கேரக்டர்க்கெல்லாம் ஒரு பாடி லாங்க்வேஜ் வேணும். படம் முழுவதும் கவர்ச்சியில் வரும் சமந்தா, படத்தின் ப்ளஸ். அதுவும் டூ பீஸில் ஸ்லோமோஷனில் சமந்தா வரும் காட்சியில் ஜொள்ளுவிடாதவர்களே இல்லை எனலாம். மற்றபடி நடிப்பு என்று சொல்லிக்கொள்ளும்படி எதுவும் இல்லை.

## சினிமா குறுஞ் செய்திகள்

மலையாளத்தில் வெளியாகி மிகப்பெரிய வெற்றியடைந்த 'ஹவ் ஓல்டு ஆர் யூ' படத்தை பார்த்த சூர்யாவுக்கு இந்தப் படத்தை தமிழில் ஜோவை நடிக்க வைக்கலாமே என்று தோன்றி இருக்கிறது. இது குறித்து ஜோதிகாவிடம் பேசிவிட்டு, அப்படத்தின் இயக்குநர் ரோஷன் ஆண்ட்ரூஸை தொடர்பு கொண்டு, கதைத்துமுள்ளாராம்.

சமீபத்தில் ஐதராபாத் நகரில் நடந்த .'பேஷன் ஷோ ஒன்றில் சமந்தா கேட்வாக் நடக்க சம்மதித்துள்ளார். அதற்காக அவர் வாங்கிய சம்பளம் ரூ.10 லட்சம். இந்த கேட்வாக்கில் சமந்தா வெறும் இரண்டு நிமிடங்களே நடப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

அஞ்சான் எதிர்பாராத நிலையில் அதிர்ச்சி தோல்வி அடைந்ததால் தற்போது சூர்யாவை வைத்து மாஸ் படத்தை இயக்கும் வெங்கட் பிரபு அதிர்ச்சி அடைந்துள்ளதாக கோலிவுட்டில் செய்திகள் பரவியுள்ளன.

ஸ்ருதிஹாசன் அவருடைய வீக்னஸாக நினைப்பது என்ன தெரியுமா. நல்ல சுவையான உணவு கிடைத்தால் அதை ஒரு கை பார்க்காமல் விட மாட்டாராம். எந்த வஞ்சனையும் இல்லாமல் அப்படி ருசித்துச் சாப்பிடுவாராம்.

பார்த்திபன் இயக்கிய கதை திரைக்கதை வசனம் இயக்கம் படம் கடந்த 15ந் தேதி வெளியானது. மக்களிடம் வரவேற்பை பெற்றுள்ள இந்தப் படம் பார்த்திபனை மகிழ்ச்சி கடலில் ஆழ்த்தியுள்ளது. 60 திரையரங்குகளும் உயர்த்தப்பட்டுள்ளது. 25 வருடங்களுக்கு பிறகு பெற்ற வெற்றியை நண்பர்கள், பத்திரிகையாளர்களுடன் கொண்டாடுகிறார்.

தமிழ் சினிமாவில் 18 வயது கூட பூர்த்தி அடையாத துளசி, லட்சுமிமேனன், சந்தியா போன்ற பெண்கள் நடித்து வருகின்றனர். இதுபோன்ற பெண்களை தமிழ் சினிமாவில் நடிக்க வைக்கக் கூடாது என முத்துலட்சுமி என்ற பெண் சென்னை உயர்நீதிமன்றத்தில் பொது நலன் ஒன்றை நேற்று தாக்கல் செய்துள்ளார். தமிழகத்தில் இதுபோன்ற வழக்கு இதுவரை தொடரப்படாததால், இந்த வழக்கு பரபரப்பை

இளமை ரகசியம் என்ன என்று அனுஷ்காவிடம் கேட்டபோது "நான் தினமும் உடற்பயிற்சி செய்கிறேன். ஒரு மணி நேரம் யோகாவும் செய்கிறேன். மூச்சுப் பயிற்சியிலும் ஈடுபடுகிறேன். இரவு சாப்பாட்டை 8 மணிக்கு முன்னால் முடித்து விடுகிறேன். அதன் பிறகு எதுவும் சாப்பிட மாட்டேன். தினமும் 2 லிட்டருக்கு மேல் தண்ணீர் குடிப்பேன்" என்கிறார்.

விஜய், ஹன்சிகா, லட்சுமிராய், ஆண்ட்ரியா மற்றும் சந்தானம் நடிப்பில் விரைவில் வெளியாகவுள்ள அரண்மனை திரைப்படத்தின் டீசர் இயக்குனர் சுந்தர் சியின் அனுமதியின்றி வெளியானதாக நடிகை குஷ்பு கண்டனம் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏஸி சார்ஜர்



டேப்லட்கள், ஸ்மார்ட் கைப்பேசிகளை சார்ஜ் செய்வதற்கு வயர்லெஸ் சாதனம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அலுமினியத்தினால் வடிவமைக்கப்பட்டுள்ள இப்புதிய சாதனமானது விளம்பரப்படுத்தல் மற்றும் 40,000 டொலர்கள் வரையிலான நிதியீட்டல் என்பவற்றினை நோக்காகக் கொண்டு தற்போது Kickstarter தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## புதிய ஸ்டேடஸ்

வீடியோ கோப்புக்களை பகிரும் பிரபல தளமான யூடியூப்பினை சப்ஸ்கிரைப் (Subscribe) செய்து பயனர்கள் வீடியோக்களை உடனுக்கு உடன் தெரிந்து கொள்ளும் வசதி தற்போது காணப்படுகின்றது. அதேபோன்று யூடியூப் ஆனது YouTube Music Key எனும் புதிய சப்ஸ்கிரைப் வசதியினை விரைவில் அறிமுகம் செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனை சப்ஸ்கிரைப் செய்வதன் மூலம் மியூசிக்கினை இணைய இணைப்பு இல்லாத நிலையிலும் கேட்டு மகிழ முடியும்.

# விளையாட்டுப் பையன்

## Shutdown செய்ய மறந்தாச்சா!!

ஜிமெயில் ஆனது ஒரு வெறும் மெயில் அனுப்புதல், பெறுதல் எ நிறைய வசதிகளை தருவதால் இதன் பயனாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. ஆனால் அவசரத்தில் கணக்கை முழுவதும் முறைப்படி signout செய்யாமல் விட்டுவிடுவோம்.

முதலில் உங்கள் Gmail கணக்கை Login பண்ண வேண்டும். பின் உள்ளே அதன் வலது பக்கம் Last Account Activity ன் கீழ் Details என்பதை கிளிக் செய்யவும். புதிதாக "activity on this account" என்ற விண்டோ திறக்கப்படும். அதில் எங்கு, எந்த நேரத்தில் உங்கள் Gmail கணக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது காட்டப்படும்.

"sign out all other sessions" சென்று அனைத்து தீர்வு காணலாம்.

## மின்கல கார்கள்


Tesla நிறுவனம் கடந்த 2008ம் ஆண்டு மின்கலத்தை பயன்படுத்தி 245 மைல்கள் பயணிக்கக்கூடிய கார்களை அறிமுகம் செய்திருந்தது. இக்கார்கள் அமெரிக்காவில் 2011ம் ஆண்டு வரையிலும், ஏனைய நாடுகளில் 2012ம் ஆண்டு வரையிலும் விற்பனையில் இருந்தது. தற்போது அதேபோன்று 400 மைல்கள் பயணிக்கக்கூடியவாறான மின்கலத்தினை உள்ளடக்கிய புதிய கார் ஒன்றினையும் வடிவமைத்து வருகின்றது.



## எங்கிருந்தும் பாடல் கேட்கலாம்

இணையத் தளங்களிலிருந்து ஒலிபரப்பாகும் பல்வேறு வானொலிகளையும் கேட்டு மகிழவும், அவற்றினை பதிவு செய்து சேமித்துக்கொள்வதற்கும் Pocket Radio Player எனும் மென்பொருள் உதவுகின்றது. இம்மென்பொருளானது Windows, Mac மற்றும் Linux இயங்குதளங்களில் செயற்படக்கூடியதாக இருப்பதுடன் 15.2MB கோப்பு அளவு உடையதாகக் காணப்படுகின்றது. மேலும் இம்மென்பொருளை பென்டிரைவில் சேமித்து வைத்து செல்லும் இடங்களில் இணைய இணைப்பு உள்ள கணினிகளின் உதவியும் பயன்படுத்திக்கொள்ளக்கூடியதாகவும் காணப்படுகின்றது.

## மின் உற்பத்தி



உடற்பயிற்சிகளின் போது வெளியேறும் வியர்வையைக் கொண்டு மின்சக்தியை உற்பத்தி செய்யக்கூடிய இலத்திரனியல் டாட்டூ உருவாக்கப்பட்டுள்ளது. சிறிய இலத்திரனியல் சாதனமாகக் காணப்படும் இந்த டாட்டுவில் சென்சார் இணைக்கப்பட்டுள்ளது. இந்த சென்சார் ஆனது வியர்வையினை பயன்படுத்தி 70 microWatts per cm2 எனும் சிறிய அளவில் உயிரியல் மின்னை உற்பத்தி செய்யக்கூடியதாக காணப்படுகின்றது.

## Digicam Photo Recovery

கணனியின் வன்றட்டிலிருந்து அழிக்கப்பட்ட புகைப்படங்களை இலகுவான முறையில் மீட்டுக்கொள்வதற்கு Digicam Photo Recovery மென்பொருள் பெரிதும் உதவியானதாக காணப்படுகின்றது. இதில் புகைப்படம் காணப்பட்ட வன்றட்டின் பகுதியை தெரிவு செய்து வேகமான முறையில் மீட்டுக்கொள்ளும் வசதி தரப்பட்டுள்ளது. தவிர மீட்கப்பட்டுக்கொண்டிருக்கும் புகைப்படங்களை பிரத்தியேக கோப்புறை ஒன்றினில் சேமிக்கும் வசதியும் காணப்படுகின்றது. இதன் கோப்பு அளவானது 1.3MB மட்டுமே ஆகும்.

## இலகு படம் வரைய மென்பொருள்

அன்ரோயிட் மொபைல் சாதனங்களுக்கான Corel Painter அப்பிளிக்கேஷன் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் இலகுவாக படங்களை வரைந்து கொள்ள முடியும். இதில் 70 வரையான Painter Brush தரப்பட்டுள்ளதுடன், வரைந்த படங்களை JPEG, PNG மற்றும; PSD கோப்பு வகைகளில் சேமிக்கும் வசதியும் தரப்பட்டுள்ளது.



## ஷட்டவுன் செய்யாமல் போறீங்களா?

முன்பெல்லாம் கணனியை முறையில்லாமல் ஆப் செய்து விட்டு போனாலோ, அல்லது அனைத்து புரோகிராம்களை முறைபடி குளோஸ் செய்யாவிட்டாலும் கணனியில் பல சிக்கல்கள் தலையை எட்டிபார்க்கும். ஆனால் தற்போது உள்ள கணனிகளில் உள்ள முக்கியமான உறுப்புகள் மதர்போர்டு, கேபினட் போன்றவைகள் ATX வகையானதாக உள்ளது. அதனால் பிரச்சனைகள் வருவது குறைவாக உள்ளது.

இந்த பிரச்சனையை கண்ட்ரோல் பேனலில் Power Options சென்று choose what the power button do என்பதினை கிளிக் செய்து, when i press the power button என்பதில் Shutdown என்பதினை தேர்ந்தெடுக்கலாம். மேலும் அதில் பல சிறப்பு அம்சங்கள் இருக்கும். Shutdown க்கு பதிலாக sleep, nothing என சில ஆப்ஸனும் இருக்கும். மேலும் மடிகணனியில் உள்ள Power Options மூலம் உங்கள் திரையை மூடுவதன் மூலம் உங்கள் கணனியை ஆப் செய்யலாம்.

இனி நீங்கள் அவசரமாக கணினியை ஷட்டவுன் செய்ய வேண்டுமெனில் பவர் பொத்தானை அழுத்தினால் மற்றும் திரையை மூடினால் போதுமானது. உங்களுடைய கணனி பாதுகாப்பாக ஷட்டவுன் ஆகிவிடும்.

# ஒரு கொலையின் கதை

3-4

மாயன்

**ஒரு உண்மைச் சம்பவத்தைத் தழுவிய கதை...... கதையொன்றில் புனைவுகள் இருப்பதைப் போல இக் கதையிலும் புனைவுகள் உள்ளன.**

கடந்தவாரத் தொடர்ச்சி...............

"உங்களுடைய உதவியாளர் எங்கே?...."

" அவர் வர்த்தக விடயமாக வெளியே சென்றிருக்கின்றார்..... '' ... '' அவரைஅலைபேசியில் கூப்பிடுங்கள்...'' என்றவாறே அடுத்த கேள்வியொன்றை அவர் மீது புலனாய்வாளர்கள் வீசினர்... அந்த கேள்வி...

.................................................. இனி இந்த வாரம்...

பணத்தை வங்கியில் இட்டதை திருகோண மலையில் யாருக்குத் தெரிவித்தீர்கள்........?

அவர் சிறிது நேரம் அமைதியாக யோசிக்கத் தொடங்கினார்..... வந்திரனுக்குத் தெரியும் தான் இவ்விடயம் தொடர்பாக யாருடனும் கதைக்கவில்லை என்று.... அத்துடன் யாருக்கும் இவ்விடயத்தைக் கூற வேண்டாம் என்று ஹிம்சா அவரிடம் கேட்டிருந்ததாலும் அவர் யாரிடமும் அதைப்பற்றிப் பேசவில்லை என்பதில் தெளிவாக இருந்தார். ஆனால் புலனாய்வாளர்கள் திருகோணமலையில் யாரிடம் கூறினீர்கள் என்று குறிப்பாகக் கேட்ட போது அவரால் உடனடியாக மறுப்புத் தெரிவிக்க முடியவில்லை..... எச்சந்தர்ப்பத்திலாவது நான் யாருக்கும் தெரிவித்தேனோ????? என்று அவர் சிந்தனைகள் பறந்தன.... சிறிது நேரத்தில் அவர் பணிவாக " நான் இவ்விடயம் தொடர்பாக இன்று உங்களிடம் மட்டும் தான் பேசுகின்றேன்... அதனைத் தவிர வேறு யாரிடமும் இவ்விடயத்தைச் சொல்லவில்லை....."

அவர் அழுத்தம் திருத்தமாகத்தனது பதிலைக் குறித்தார்....

" சரி இந்தப் பணக்கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக வேறு யாரையாவது நீங்கள் தெரிந்து கொண்டீர்களா?..."

அவருக்கு அந்தக் கேள்வி புரியவில்லை....

"உங்களுக்கு இந்தப் பணக்கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக ஹிம்சா வையும் அவர் வங்கியில் இடச்சொன்ன கணக்கு வைத்திருப்பவரையும் அதற்கு உதவிபுரிந்த உங்களது உதவியாளரையும் தவிர வேறு யாராவது இக்கொடுக்கல் வாங்கலில் சம்பந்தப்பட்டவர்களைத் தெரியுமா?..."

" மன்னிக்க வேண்டும்.... எனக்கு ஹிம்சாவையும் எனது உதவியாளரையும் மட்டுமே தெரியும்... யாருடைய கண்க்கிற்கு வைப்பிடச் சொன்னாரோ அந்தப் பெண்ணைப்பற்றி எதுவுமே தெரியாது...."

அக்கணத்தில் அவரது உதவியாளர் அங்கு பிரசன்னமாகினார்..... அவனுக்கு ஒரு 23 வயதை மதிக்க முடிந்தது. சுத்தமான உடை... அப்பழுக்கற்ற கண்கள் அவர்கள் இருவரையும் நேரடியாகப் பார்த்தபோதே அவர்கள் காவல்துறையைச் சேர்ந்தவர்கள் என்பது அவனுக்குப் புரிந்து போயிற்று...

வீட்டிற்கு வெளியே மேலதிகக் காவலர்கள் எவரையும் காணாததால் அவர்கள் விசாரணைக்காக வந்திருப்பதையும் அவன் புரிந்து கொண்டான்.

இப்படி ஒரு விசாரணை வரும் என அவனுக்கும் அவனது முதலாளிக்கும் எப்போதோ தெரிந்திருந்ததால் அவர்கள் எவ்வித பொய்யான தயார்ப்படுத்தலையும் மேற்கொள்ளாது உண்மைகளைச் சொல்லுவதற்குத் தயாராகவே இருந்தனர்....

அவனை அவர்கள் இருவரும் முழுமையாக தமது மனக்கண்ணில் பதிப்பித்துக்கொண்டு தமது விசாரணைகளை அவனை நோக்கித் திருப்பினர்....

இந்தக் கொலை விசாரணையில் அவனை, அன்றைய தினம் அவனது முதலாளி குறித்த நேரத்தில் வங்கிக்குச் சென்றானா?, குறித்த தொகையை வங்கியில் இட்டானா?..... அவனுக்கும் சந்தேக நபர்களைத் தெரிந்திருந்ததா? என்ற கோணங்களில் அவன் மீதான விசாரணைகள் தொடர்ந்தன.....

அவர்கள் அவனுடனான சம்பாசனையை முடித்துக்கொண்டு அவனை இவ்வழக்கில் இணைக்கத் தேவையற்றவனாகக் குறித்தனர்.

" சரி ...... தவேந்திரன் ஐயா.... நீங்கள் சொன்னவைகளை மீண்டும் ஒரு முறை நீதிபதியின் முன்னர் சொல்ல வேண்டியிருக்கும்.....அதற்கான நாட்களை எண்ணிக்கொண்டிருங்கள்.... நாங்கள் உங்களை அழைக்கின்றோம்.... நன்றி"

அவர்களின் வாகனம் அமைதியாக கொழும்பின் வாகன நெரிசலுக்குள் உட்படாமல் பயணித்துக் கொண்டிருந்தது.

அதிகமாக அனைத்து வேலைகளும் நிறைவு பெற்றிருந்தன....

டோடியின் வீட்டில் இருந்த கைப்பற்றப்பட்டவைகள் புதிய தடயங்களாக இருந்ததுடன்...., புதிதாகச் சாட்சியாளர் ஒருவரையும் சந்தேக நபர் ஒருவரையும் அடையாளப்படுத்தியிருந்தன...

ஏற்கனவே இரண்டு சந்தேகநபர்களும் கைதாகியுள்ள நிலையில்... இறுதிச் சந்தேகநபரான ஹிம்சாவையும் கைது செய்து அழைத்து வந்தால் இந்தக் கொலை வழக்கின் நிறைவுப் பணிக்கு அவர்கள் வந்து விடுவார்கள்....

அந்தக் காவல்துறை அலுவலக அறையின் கதிரைகள் யாவும் சுமைதாங்க முடியாமல் சத்தமெழுப்பிக்கொண்டு இருந்தன... உதவிக் காவல்துறை அத்தியட்சகரின் முன்நிலையில் விசாரணைகள் முடிவடைந்த விடயங்களை உள்ளடக்கிய கோப்பு மின் விசிரியின் சுழற்சிக்கு தன்னுள்ளே அடங்கியிருந்த காகிதங்களின் ஆட்டத்திற்கு ஈடுகொடுத்துக் கொண்டிருந்தது...... அவர்கள் கட்டளைக்காகக் காத்திருந்தனர்..... (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வியல் -15 திறமையும் புகழும்

(வி.என்.சந்திரகாந்தி)



ஒரு குழந்தை பிறக்கும் போதே அது சில திறமைகளை தன்னகத்தே கொண்டிருப்பதை பெற்றோராலும் நெருங்கிப்பழகும் உறவினர்களாலும் அவதானிக்க முடியும். அதற்குக் காரணம் கருவிலேயே அதற்குச் சில திறமைகள் ஊட்டப்பட்டிருப்பதுதான்!

இந்துமதம் பல முற்பிறப்புக்கள் பற்றிய நம்பிக்கையை கொண்டது. 'புல்லாகிப்பூடாய் புழுவாய் மரமாகி என்று தொடங்கி 'செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்திழைத்தேன் எம்பெருமான்...' என்பது ஈறாய் அனைத்து பிறவிகள் பற்றியும் சிவபுராணம் கூறுகின்றது.

ஒவ்வொரு பிறவியிலும் நாம் பெற்ற அனுபவமும், அறிவும், திறமையும், பிறவிகள் தோறும் எம்மை தொடர்ந்து வந்து கைகொடுக்கின்றன. அதனால் தான் சிறுவயதிலேயே சுடர் விட்ட ஆன்மீகவாதிகளையும் விஞ்ஞானிகளையும் இந்த உலகம் கண்டது! வெளிநாடுகளிலெல்லாம் மூன்றே வயது நிரம்பிய குழந்தை கணனி பயன்பாடு பற்றி நன்கு அறிந்து வைத்திருக்கின்றது. பிறந்து சில மாதங்களேயான குழந்தை, பெற்றோருடன் தடாகத்தில் நீச்சலடிக்கின்றது. 'டீன் ஏஜ்' முடிவடையாத பிள்ளைகளால் கண்டு பிடிப்புக்கள் பலவற்றை வெளிக்கொணர முடிகின்றது! அதே போன்று கலைத்துறையை எடுத்தால் ஐந்து வயதே நிரம்பிய குழந்தை தனது சக்தி மிக்க நடனத்தால் அரங்கத்தையே அதிர வைக்கிறாள். ஐந்து வயதுக்கும் பத்து வயதுக்கும் இடைப்பட்ட குழந்தைகள் தமது கணீர் என்ற குரல் வளத்தாலும் சங்கீத ஞானத்தாலும் மத்தியஸ்தர்களையும் பார்வையாளர்களையும் முற்று முழுதாக தம் வசப்படுத்தி விடுகிறார்கள்!

அடிப்படைப் படிப்பறிவே இல்லாத பல ஆக்க இலக்கிய படைப்பாளிகளையும் கவிஞர்களையும் நாம் எம் கண் முன்னாலேயே காண்கின்றோம். அவர்களுடைய சிந்தனா சக்தி எம்மை திகைப்புற வைக்கின்றது! கம்பராமாயணமும் மகாபாரதமும் சாதாரண மனித பிறவிகளால் ஆக்கக்கூடிய இதிகாசங்கள் என கொள்ள முடியுமா? பாத்திரப்படைப்பு என்ன.. சிந்தனா சக்தி என்ன... மதிநுட்பமென்ன.. இனி திருக்குறளை எடுங்கள். 1330 குறள்களில் (வெறுமனே ஈரடிகள்) அறம் பொருள் இன்பத்தை ஒரு தனி மனிதனால் அவனது குறுகிய வாழ்நாளில் அனுபவித்து கூறிவிடமுடியுமா?

இனி ஆன்மீகத்தை எடுங்கள், சம்பந்தர், சுந்தரர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர் அவர்களது தேவார திருவாசகங்கள் பற்றி சிறிது சிந்தியுங்கள்! அகில உலக சர்வமத மகாநாட்டில் சுவாமி விவேகானந்தரின் உரையை இந்த உலகம் உள்ளவரை மனிதனால் மறக்கமுடியுமா? அவரது விரிவுரைகள் அடங்கிய பத்து சுடர்கள் மனிதனை ஆன்மீக வழியில் நிறுத்தக் கூடியவையல்லவா? அதேபோன்று அரசியலில் மகாத்மாகாந்தி, நெல்சன்மண்டேலா, ஆபிரகாம்லிங்கன், கென்னடி என திறமை கொண்டோர் பலரது பட்டியல் நீளும். இவைதான் திறமைகள்! திறமை பற்றிய ஆய்வை இத்துடன் நிறுத்தி 'புகழ்'' என்றால் என்ன என்று பார்ப்போம்.

திறமை எங்கிருக்கின்றதோ, அங்குதான் புகழ் இருக்க வேண்டும். இந் நாட்களில் அப்படியில்லை. திறமை இல்லாத இடத்திலும் புகழ் போய் சேர்ந்து விடுகின்றது. அதற்கான உண்மையான காரணம் என்ன? ஒரே வரியில் கூறுவதென்றால், திறமை இறைவனால் வழங்கப்படுவது, புகழ் மனிதனால் வழங்கப்படுவது. அங்கேதான் தவறு நேரிடுகின்றது. பெருமைக்கு அருகதை அற்றவர்களை நாம் புகழக்கூடாது. ஆனால் நாம் புகழ்கின்றோம். அது வெற்று முகஸ்துதிதான்!

அது தவிர சிலர் புகழ்ச்சியை முன்னிட்ட வேட்டையில் அலைந்து திரிகிறார்கள். அவர்களுக்கென தனி திறமை எதுவும் இல்லை. திறமையை வெளிப்படுத்தக் கூடிய முயற்சிகள் எதிலும் ஈடுபடுவதும் இல்லை. இயேசுநாதர், இராமகிருஷ்ண பரமஹம்சர் போன்றோரின் சிரசை சுற்றி ஒரு ஒளிவட்டம் இருப்பது அவர்களது ஞானத்தை பிரதிபலிப்பதற்கு. ஆனால் சில தற்பெருமை வாதிகள் தமது சிரசைச் சுற்றியும் அப்படி ஒரு ஒளிவட்டத்தை கற்பனையில் உருவாக்கி தலைக்கணம் கொண்டு அலைகிறார்கள். அவர்கள் தாமாகவே திருந்த வேண்டும். அது தவிர பட்டங்களும் விருதுகளும் வழங்க தகுதி படைத்தவர்கள், தாம் திறமை உள்ளவர்களுக்குத்தான் அவற்றை வழங்குகிறோமா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். அடுத்து, பட்டங்களும் விருதுகளும் வழங்குபவர்கள் அதற்கான தகுதி தமக்கு உண்டா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

எனது உறவினளான பெண் ஒருத்தி எப்போதும் புகழ்ச்சியை முன்னிட்டே கருமமாற்றுவாள். அவளது தந்தை ஒரு வங்கி 'மனேஜர்' ஆவர். தான் ஒரு வங்கி அதிகாரியின் மகள் என்று பெருமை பேசுவதை தவிர அவளிடம் வேறு திறமை எதுவும் இருந்ததில்லை. வங்கி மனேஜருக்கு ஒரு மாடி வீடு வேண்டும் என்று பிடிவாதம் பிடிப்பாள். இன்னும் வீட்டு தளபாடங்கள், குளிரூட்டி, தொலைக்காட்சிப்பெட்டி, தொலைபேசி என்று கேட்டு பிடிவாதம் செய்வாள். அவரிடமோ பணம் இல்லை. இருந்த காணிகளை விற்று விற்று அனைத்தையும் பெற்று கொடுத்தார். அத்தோடு விட்டாளா? கார் இல்லாமல் பாடசாலை போவது கௌரவமா? இன்னும் விற்க காணி இல்லை. படிப்பை நிறுத்தினாள். விவாகம் என்று வந்த போது வெளிநாட்டு மாப்பிள்ளை என்று ஒற்றைக்காலில் நின்றாள். விவாகமாகி வெளிநாடு சென்றாள். அங்கு போய் பார்த்த போது மாப்பிள்ளை போதை வஸ்துவுக்கு அடிமையாகி இருந்தான். அவனை தூக்கி எறிந்து விட்டு நாடு திரும்பினாள். தந்தையுடன் சென்று சோதிடம் பார்த்தாள். அவனை விட்டால் மறுமணம் கிடையாது என சோதிடர் கூறினார். வேறு வழியின்றி பெரும் பண செலவில் மீண்டும் அவனை நாடி சென்றாள். பணம்தான் கரைந்தது. அவனுக்கு வேறு பலவீனங்களும் இருப்பதை கண்டாள். வாழ்க்கையில் எல்லையற்ற விரக்தி ஏற்பட்டது. புகழுக்காக தான் செய்த தவறுகளை எல்லாம் உணர்ந்தாள். எதிர்பாராத விதமாக என்னை ஒரு நாள் சந்தித்தபோது , 'வளர்த்துக்கொள்ள வேண்டியது திறமையையே அன்றி புகழை அல்ல' என்று எடுத்துரைத்தேன். ஆச்சரியம்! இன்று இலவச சிறுவர் பாடசாலை ஒன்றை ஆரம்பித்து தனது திறமையை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறாள்!

# குறுக்கெழுத்து புதிர் 023

முடிவுத் திகதி : 29.08.2014

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 12 | | 2 அ | 13 | | | | |
| ■ | | ■ | | | 14 தே | ■ | 15 | ■ |
| 3 து | | | 16 | | 4 | | ட | |
| 5 | | | | ம் | | ■ | | ■ |
| | | ■ | 6 ப | | | 17 | | 18 |
| | 7 ஆ | 19 | | ப | | | ■ | |
| ■ | 8 | | | ■ | ■ | | ■ | |
| 20 | ■ | | ■ | 9 | | ய | | ணி |
| 10 | | | ■ | ■ | ■ | 11 | | |

### இடமிருந்து வலமாக

1. வீட்டு வாசலில் போடுவது
2. கவனயீனத்தைக் குறிக்கும் சொல்
3. படகைத் தள்ளுவது
4. வடிவமொன்று
5. பெண்களின் பெயரைக் கொண்ட நட்சத்திரம்
6. இராணுவத்தைக் குறிக்கும் இந்தியச் சொல்
7. முடியொன்று இருந்தால் இது இருக்கும்
8. பழம் தின்று போடுவது
9. செலவின் ஒத்தசொல்
10. யானையைக் கொண்டு உருவாகிய திரைப்படம்
11. அன்பே இது தான் - இடமிருந்து வலமாக

### மேலிருந்து கீழாக

2. அப்பாவை இப்படியும் அழைக்கலாம்
3. மகாபாரதத்தில் வில்வித்தைக்குப் பெயர் போனவர்
12. திருப்பதியில் கிடைக்கும்
13. இலகு ஒத்தசொல்
14. முன்னாள் இந்திய பிரதமர் ஒருவர்
15. இறந்த உடல்
16. பூவைக்குறிக்கும் இந்தியச் சொல்
17. பாட்டுக்கு ஏற்ப ஆடும் அளிக்கை (குழம்பியுள்ளது)
18. வண்டிச் சில்லு கழறாமலிருக்கப் பொருத்துவது
19. ரட்சகனின் பெண்பால்
20. தட்சணை கொடுக்க வேண்டியவர் (குழம்பியுள்ளது)

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

*விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :*
*மலைமுரசு. இல - 159ஏ.*
*கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.*

### புதிர் ០២២ ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | று | க | ம் | பை | 12 கு | டா | ■ | ■ |
| வ் | ■ | ■ | 13 ர் | ■ | 2 ஞ் | அ | சா | ன் |
| 3 வை | த் | 14 தி | ய | ர் | 4 சு | க் | 15 கா | ன் |
| 5 ச | வ | ப் | பெ | ட் | டி | ■ | ல் | ■ |
| ண் | ■ | 6 பு | ர | வ | ல | ர் | 7 மா | ன் |
| 8 மு | டு | சு | ■ | 16 ட | ■ | 9 க | ர் | 17 மா |
| கி | ■ | ல் | ■ | த் | 18 க | ■ | க் | த |
| 10 ர | ர் | தா | ன் | தோ | ன் | ரீ | ஸ் | வ |
| வை | ■ | ன் | ■ | ■ | னி | ம | 11 த | ம் |

### பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:

*செல்வன். பு. யக்சயன்*
*இல.12, சாரதா வீதி, திருகோணமலை.*

*திரு. சி. சர்வேஸ்பரன்*
*17ஏ, [illegible] வீதி, திருகோணமலை.*

# தேசிய SMS செய்திகள்

- **தேர்தலில் போட்டியிட முடியாது - ஜோன்**

அரசியல்வாதிகள் பாலியல் குற்றங்களில் ஈடுபட்டு அது நிரூபிக்கப்படும் பட்சத்தில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட முடியாது. ஆனால் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியும் என அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்தார்.

- **யாழில் ஆர்ப்பாட்டம்**

கைது செய்யபட்டு விசாரணைகளின்றி சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் எனக்கோரி முற்போக்கு தமிழ்த் தேசியக் கட்சியால் கவனயீர்ப்புப் போராட்டமொன்று யாழ். மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக புதன்கிழமை (20) முன்னெடுக்கப்பட்டது.

- **ஐ.நா தலையிடும் - யாரும் தடுக்கமுடியாது**

கான்பெராவில் ஒக்டோபர் மாதம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் குறித்த வழக்கில் ஐக்கிய நாடுகள் சபை தலையிடக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- **அதி தர பெற்றோல் சந்தையில்..**

பெற்றோலிய கூட்டுத்தாபனம் நான்கு நட்சத்திர தரமுடைய அதிசிறந்த தரமுடைய லங்கா சுப்பர் டீசல் வகையை வியாழன்(21) முதல் வழங்க இருப்பதாக பெற்றோலியத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார். சாதாரண டீசல் விலையினை ஒத்ததாக 145 ரூபாவுக்கே வழங்கப்படும்.

- **சட்டவிரோத மீன்கள் அழிப்பு**

மன்னார் சௌத்பார் கடற்பரப்பில் சட்ட விரோதமான முறையில் டைனமைற் வெடி பொருள் பயன்படுத்தி பிடிக்கப்பட்ட 500கி.கி விள மீன்கள் மன்னார் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய மண்ணெண்ணெய் ஊற்றி அழிக்கப்பட்டன.

- **பாதாளக் குழுக்களை கைது செய்யுங்கள்**

பாதாளக் குழுக்கள், குற்றவாளிகளை கைது செய்யவேண்டுமெனில் அலரி மாளிகைக்குச் சென்றால் ஒட்டுமொத்தமாகப் பிடிக்க முடியுமென ஜனநாயக தேசியக் கூட்டணியில் சுயாதீனமாக இயங்கிவரும் எம்.பி.யான அஜித்குமார தெரிவித்தார்.

- **ஸ்ரீ தலதா மாளிகையில் திருட்டு**

கண்டி ஸ்ரீ தலதா மாளிகையிலிருந்து திருடப்பட்ட பெறுமதி மிக்க நான்கு புத்தர் சிலைகளையும், ஒரு தூபியையும் கட்டுகாஸ்தோட்டைப் பொலிஸார் கைப்பற்றி உள்ளனர்.

- **அமர்வில் பெரும் அமளி துமளி**

வடமாகான சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிங்கம் கொண்டுவர முனைந்த தமிழ் மக்களை இனப்படுகொலையில் இருந்து பாதுகாக்க சர்வதேச பொறிமுறையை ஏற்படுத்த வேண்டும், விசாரணை கால எல்லையை நீடிக்க வேண்டும், மற்றும் விசாரணை குழு இலங்கையில் விசாரணை நடத்த அனுமதிக்க வேண்டும் எனும் மூன்று பிரேரணைகளால் சபை அமர்வில் பெரும் அமளி ஏற்பட்டது.

- **வல்லுறவுக்குட்படுத்திய ஆசிரியர் கைது**

பதினைந்து வயது மாணவியை, பாலியல் வல்லுறவிற்குட்படுத்திய பதுளைப் பகுதியில் பிரபல பாடசாலையொன்றில் கடமையாற்றும் சங்கீத ஆசிரியரொருவரை, பொலிஸார் கைது செய்துள்ளனர்.

- **த.தே.கூ. இந்தியா பறந்தது**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்கடைங்கிய குழுவினர் வியாழக்கிழமை புதுடில்லிக்கு பயணம் மேற்கொண்டுள்ளனர். இக்குழுவினர் எதிர்வரும் 23 ஆம் திகதி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

- **வேலை வழங்கக் கோரி போராட்டம்**

இதுவரை தமக்கு வேலை வாய்ப்பு வழங்குவது தொடர்பில் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் விரைவில் தமக்கான வேலையினை பெற்று தருமாறு கோரியே போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் மகஜர் ஒன்றினை கையளித்து தமது போராட்டத்தை முடித்து கொண்டனர்.

- **தொலைபேசியில் இருந்து மோசடியான முறையில் சுதந்திர ஊடகவியலாளர் இயக்க முக்கியஸ்தருக்கு மிரட்டல்**

மோசடியான முறையில் வவுனியாவில் உள்ள பிரபல ஊடகவியலாளர் ஒருவருடைய கைத்தொலைபேசியில் இருந்து சுதந்திர ஊடகவியலாளர் இயக்கத்தின் முக்கியஸ்தராகிய சுனில் ஜயசேகரவுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கின்றது. இது தொடர்பில் தலங்கம பொலிஸ் நிலையத்தில் சுனில் ஜயசேகர முறைப்பாடு ஒன்றைச் செய்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மருத்துவம்

## அளவுக்கு மிஞ்சினால் ...



மாரடைப்பு வந்த போதிலும் தெய்வாதீனமாக உயிர்பிழைத்தவர்கள் நாள் ஒன்றிற்கு தொடர்ச்சியாக 30 நிமிடங்களுக்கு மேல் உடற்பயிற்சி செய்யக்கூடாது என ஆய்வு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 வருடங்களாக மாரடைப்பு வந்து உயிர் பிழைத்த 2400 பேரை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில் ஒரே நாளில் 4.4 மைல்கள் தூரத்திற்கு மேல் ஓடுதல் அல்லது 6.6 மைல்களுக்கு மேல் நடத்தல் உயிர் ஆபத்தினை மீண்டும் விளைவிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உப்பிட்டவரை நினைப்பதா?!!

உலகம் முழுவதும் உணவில் அதிக உப்பை சேர்த்துக் கொள்ளும் 187 நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் இத்தகவல் வெளியாகியுள்ளது. உலக சுகாதார அமைப்பு ஒரு நாளைக்கு 2 கிராம் உப்பை உணவில் சேர்த்து கொள்வதே ஆரோக்கியத்திற்கு நல்லது என பரிந்துரைத்துள்ளது.

ஆனால், தேவையை விட இரண்டு மடங்கு அதிகமாக உப்பை மனிதர்கள் உணவில் சேர்த்துக் கொள்வதாக இந்த ஆய்வு கூறுகிறது. அதாவது, சராசரியாக நாளொன்றுக்கு மனிதர்கள் 3.95கிராம் உப்பை உணவில் சேர்த்துக் கொள்பவர்கள் அதிக இதயப் பிரச்சனைகளுக்கு ஆளாவதாக தெரிய வந்துள்ளது.



அதிக சோடியம் உடலில் சேர்வதால் இதயத்தின் மீதான வேலைப்பளு அதிகரிக்கிறது. இதனால் விரைவாக இதய நோய்த் தாக்கம் ஏற்படுகிறது என மருத்துவர்கள் கூறுகின்றனர்.

அதிக உப்பினால் இதய நோய் பாதிப்பு ஏற்பட்டு சுமார் 17 லட்சம் பேர் உயிரிழந்துள்ளதாகவும், அவர்களில் 61.9 சதவீதம் ஆண்கள், 38.1 சதவீதம் பெண்கள் என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

## மசாலாவில் உள்ள சத்துக்கள்

**வெந்தயம்**



உடல் நலத்திற்கு தேவைப் படும் சிகிச்சைமுறை பண்புகளை மிகச் சிறப்பாக கொண்டுள்ளது வெந்தயம். இந்த வெந்தயமானது செரிமானம், சுவாச கோளாறு, நரம்பு மற்றும் மாதவிடாய் கோளாறுகளை சீர்படுத்த பெரிதும் பயன்படுகிறது, மேலும் தோல்களை தூய்மைபடுத்துகிறது. எடைக்குறைப்புக்கு மிக எளிய முறையில் வெந்தயம் பயன்படுத்தப்படுகிறது. இரவில் ஊறவைத்த வெந்தயத் தண்ணீரை குடிப்பதால் உடலில் உள்ள இரத்த சர்க்கரை அளவை குறைக்கிறது. இந்திய சமையலில் வெந்தயத்தை வாசனைப்பொருளாகவும் பயன்படுத்துவார்கள்.

**மஞ்சள்**

மஞ்சள் மங்கள அடையாளம். எந்தவொரு நல்ல நிகழ்விலும் மஞ்சளுக்குத்தான் முதலிடம். -இந்தியாவின் குங்குமப்பூ என்று மஞ்சளை குறிப்பிடுகிறார்கள். கசப்பை கட்டுபடுத்தக்கூடிய காரமான வாசனை கொண்ட மஞ்சள் பல மருத்துவ குணங்களை கொண்டுள்ளது.

நம் உடலில் உள்ள நச்சுப் பொருட்களை அழிப்பதில் மஞ்சளுக்குப் பெரிய பங்கு உண்டு. மஞ்சளானது இன்சுலின் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. இது குளூக்கோஸ் கட்டுப்பாட்டை ஒரே அளவில் தக்க வைத்துக்கொள்ள உதவுகிறது. நம் உடம்பில் எந்த இடத்தில் புண் வந்தாலும் வீக்கத்தைக் குறைத்து விரைவில் ஆற வைப்பதில் மஞ்சளுக்கு நிகர் வேறில்லை.



## ஆரோக்கியமான வாழ்வு



**தொண்டைப்புண்** : சித்தரத்தை எடுத்து இடித்து பொடி செய்துக் கொள்ள வேண்டும். இந்த பொடியுடன் தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் தொண்டைப்புண் குறையும்.

**தலைவலி** : கற்பூரவல்லி, நல்லெண்ணெய், சர்க்கரை ஆகியவற்றை கலந்து நன்கு கலக்கி நெற்றியில் பற்று போட்டு வந்தால் தலைவலி குறையும்.

அத்துடன் தேநீருடன் சிறிதளவு இஞ்சியைச் சேர்த்து இஞ்சித் தேநீர் பருகினால் தலைவலி குறைந்து சரியாகிவிடும்.

**மூட்டு வலி** : கஸ்தூரி மஞ்சள், சாம்பிராணி, கடுகு ஆகியவற்றை சம அளவு எடுத்து தண்ணீர் விட்டு அரைத்து சுட வைத்து அதை இளம் சூட்டில் சிறிது கற்பூரம் கலந்து வீக்கம், வலிஉள்ள இடங்களில் தடவி வந்தால் மூட்டுவலி குறையும்.

**காதுவலி** : கடுகை அரைத்து காதுக்கு பின்புறம் பற்று போட்டு வந்தால் குளிர்ச்சியினால் ஏற்படும் காதுவலி குறையும்.

**கண் உஷ்ணம்** : வெள்ளை நத்தியாவட்டைப் பூவை எடுத்து கண்களில் மேல் வைத்து அடிக்கடி ஒற்றிக்கொண்டே இருந்தால் கண்களில் ஏற்படும் உஷ்ணம் குறையும்.

**வாய்ப்புண்** : பலா இலையை எடுத்து சிறியதாக நறுக்கி தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து வடிகட்டி அதனுடன் பனங்கற்கண்டை கலந்து காலையில் சாப்பிட்டு வந்தால் வாய்ப்புண் குறையும்.

## நாய் – அடிமைத்தனம் – ஓநாய் குட்டிக்கதை

ஒரு நாள் மாலை ஒரு நாயும் ஓர் ஓநாயும் சந்தித்தன. பல நாட்களாய் போதுமான உணவு இல்லாததால், ஓநாய் மிக்க மெலிந்து அயர்வுடன் இருந்தது.



நாய் ஓநாயைப் பார்த்து நண்பரே! ஏன் மிக்க வருத்தத்துடன் இருக்கின்றீர்கள்? தங்களுக்கு என்ன குறை? என்று கேட்டது. நான் உணவு உண்டு இரண்டு நாட்களுக்கு மேல் ஆகின்றது. பசியால் மிக்க வாடுகிறேன். என்று ஓநாய் பதில் கூறியது.

இதைக் கேட்டு வருத்தமுற்ற நாய், நண்பரே! கலங்கவேண்டாம். நான் தங்களுக்கு உதவுகின்றேன். என்னுடன் என்னை வளர்ப்பவர் வீட்டிற்கு வாருங்கள். தங்களுக்கு அங்கு நிறைய உணவு கிடைக்கும். தாங்கள் பசியால் வாட நேரிடாது என்றது.



சிறிது மகிழ்ச்சியுடன் ஓநாய் நாயுடன் கூடப் புறப்பட்டுச் சென்றது. இரண்டும் பேசிக்கொண்டே சென்றன. சிறிது தூரம் சென்றதும் தற்செயலாய் ஓநாய் நாயின் கழுத்திலுள்ள தோல்ப்பட்டையைப் பார்த்தது. உடனே நாயிடம் அப்பட்டை எதற்காக என்று கேட்டது.

இது என்னை வளர்ப்பவர் எனக்கு போட்டுள்ள பட்டை. இதிலுள்ள கொக்கியால் என்னை ஒரு சங்கிலியுடன் பிணைத்து பகலில் கட்டி வைப்பார். இரவு நேரத்தில் தான் சங்கிலியை அவிழ்த்து விடுவார். என்று நாய் கூறி வாருங்கள் போகலாம் என்று ஓநாயை அழைத்தது.

இது கேட்ட ஓநாய், நாயைப்பார்த்து, அன்புள்ள நண்பரே! தங்களது உதவிக்கு எனது நன்றி. ஆனால் நான் பசியால் வாடினாலும் உணவுக்காக அடிமையாக வாழ விரும்பவில்லை. என்று கூறி நாயிடம் விடை பெற்று வந்த வழியே திரும்பிச் சென்றது.

**அடிமைத்தனமாக வாழ்வதை விட சுயத்தோடு பட்டினியாய் வாழலாம்**

## சிந்திக்க .. ..

புரிந்து கொண்டால், கோபம் கூட
அர்த்தம் உள்ளதாய் தெரியும்.
புரியவில்லை என்றால், அன்பு கூட
அன்பு கூட அர்த்தமற்றதாய் விளங்கும்.

## சிறுவர் முரசு






ம.மலரவழி
திருகோணமலை.



ஜே.ஜோயலா, புனித மரியாள் கல்லூரி
திருகோணமலை.

நிஷாந்தன்.கே, 11ஏ,
கைலேஸ்வரா கல்லூரி
நிலாவெளி.



## கண் வை. .



தம்பிப் பயலே,
தங்கத் துரையே,
நம்பிக் கிடக்கும்
நம்மைக் காவாய்!

படிபடி நன்றாய்ப்
பழகு விழிப்பாய்,
துடித்தெழு பிறரின்
துயரினைக் கண்டால்!

தேடோர் தொழிலை,
சேர்த்திடு காசை!
பாடாய்ப் படினும்
பண் பிழக்காதே!

பெற்றோர் சொற்கேள்,
பெரியார்ப் போற்று!
கற்றோரை மதி,
கடமையில் கண்வை!

(ஈச்சந்தீவு, கிண்ணியா)

## உடல் எடை குறைக்க ஈஸி வழி



குழந்தைகளை சாப்பிட வைப்பது என்பது எல்லா தாய்மார் களுக்கும் கஷ்டமான வேலை ஒன்றே. அவர்களுக்கு பிடித்தமான உணவு மற்றும் ஆரோக்கியமான உணவு என்று பார்த்து பார்த்து சாப்பிட வைக்க வேண்டும்.

சில குழந்தைகள் ஊட்டி விட்டவுடன் சமத்தாக சாப்பிடுவார்கள், ஆனால் பெரும்பாலான குழந்தைகள் விளையாட்டு சிந்தனையில் இருந்தால் உணவினை தவிர்ப்பார்கள்.

- குழந்தைகளுக்கு உணவை ஊட்டும் போது அவர்கள் உணவை துப்புவார்கள். இதற்கு காரணம், அவர்களுக்கு அந்த உணவை சாப்பிட வெறுப்பாகியிருக்கும். இதனால் அவர்கள் தனக்கு பிடிக்காததை அவ்வாறு வெளிப்படுத்துகிறார்கள். ஆகவே அவர்களுக்கு உணவை ஊட்டும் போது, அவர்கள் கவனத்தை திருப்புவதற்கு விளையாட வைத்து கொடுத்தால், தடுத்துவிடலாம்.
- சில குழந்தைகள் முகத்தை திருப்பிக் கொண்டே இருப்பார்கள். ஆகவே அவ்வாறு செய்யும் போது அவர்களுக்கு பிடித்த ஏதேனும் ஒரு விளையாட்டு பொருளை, அவர்கள் முன்பு கொண்டு வந்தால், அவர்கள் அதை வாங்கும் போது உணவை சுலபமாக ஊட்டிவிடலாம்.
- ஏதேனும் அவர்களுக்கு சொல்லிக் அதைக் கேட்டுக் விடுவார்கள்.



வித்தியாசமானவற்றை காண்பித்து, அதைப் பற்றி கொண்டு இருந்தால், அவர்கள் கொண்டே சமத்தாக சாப்பிட்டு

- உணவைக் கொண்டு வந்தாலே,

– தொடரும் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. அ. கூட்டல் விருத்தி ஒன்றின் ஆறாம் உறுப்பு 9உம் ஒன்பதாம் உறுப்பு 15உம் ஆகும். இவ்விருத்தியின்,
1. முதலுறுப்பு, பொது வித்தியாசம் என்பவற்றைக் காண்க.
2. nஆம் உறுப்புக்கான கோவையைத் தருக.
3. முதல் 12 உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க.
4. 108 இத்தொடரின் ஓர் உறுப்பாகுமா?

ஆ. 3a இற்கும் 8b-a இற்கும் இடையில் மூன்று கூட்டல் இடைகளைக் காண்க.

02. பை ஒன்றினுள் வடிவத்தில் ஒத்த 6 சிவப்பு பந்துகளும், 2 நீல பந்துகளும் உள்ளன. மாணவன் ஒருவன் முதலில் எழுமாறாக ஒரு பந்தை எடுத்து அதன் நிறத்தைக் குறித்துக் கொண்டான். பின்னர் அப் பந்தை பையினுள் இடாமல் இரண்டாவது தடவையாக வேறொரு பந்தை எடுக்கின்றான்.
1. மேற்குறித்த நிகழ்ச்சியின் மாதிரி வெளியை தெக்காட்டின் தளத்தில் குறித்துக் காட்டுக.
2. இரண்டாவதாக எடுக்கப்படும் பந்து சிவப்பாக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க?
3. இரு தடவைகளிலும் எடுக்கப்பட்ட பந்துகளில் ஒன்று சிவப்பாகவும் மற்றையது நீலமாகவும் இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க?

03. நபர் ஒருவர் ரூபா 80000 ற்கு கொள்வனவு செய்த குளிர்சாதனப் பெட்டி ஒன்றை 35வீத இலாபத்தில் விலை குறித்து பின்னர் 15வீத கழிவில் விற்கின்றார்.
1. குளிர் சாதனப் பெட்டியின் குறித்த விலை யாது?
2. குளிர் சாதனப் பெட்டியின் விற்ற விலை யாது?
3. விற்றுப் பெற்ற பணத்தை 12% எளியவட்டி வழங்கும் நிறுவனம் ஒன்றில் 2 வருடங்களுக்கு வைப்பிலிடுவதினால் பெறப்படும் வட்டிப் பணம் எவ்வளவு?
4. அப்பணத்தை 10 கூட்டு வட்டி வழங்கும் வங்கியில் 2 வருடங்களுக்கு வைப்பிலிட்டால் பெறப்படும் கூட்டுவட்டி எவ்வளவு? எது இலாபகரமானது என அவருக்கு அறிவுரை வழங்குக.

04. 0.8m விட்டமும் 1cm உயரமும் உடைய உருளை வடிவ நீர்த்தாங்கி ஒன்றின்
அ. உருளையின் அடி வட்டத்தின் ஆரை யாது?
ஆ. வட்டக் குறுக்கு வெட்டுத் தோற்றத்தின் பரப்பளவு யாது?
இ. தாங்கியின் கொள்ளளவை ml இல் தருக.
ஈ. 7cm, 14cm விட்டமுடைய என்னும் இரு நீர்ப்பம்பிகள் முறையே 20, 5 வேகங்களில் தாங்கியினுள் நீரைப் பாய்ச்சுகின்றது. தாங்கியை முற்றாக நீரால் நிரப்புவதற்கு எடுக்கும் நேரத்தைக் காண்க.

05. காரணி பற்றிய அறிவைப் பயன்படுத்தி பெறுமானம் காண்க. $12.5^2 - 2.5^2$
06. ஏறுவரிசைப்படுத்துக. 4/5, 4/7, 4/6
07. 5m/s இனை Km/h இல் தருக.
08. S=Ut+at இல் t ஐ எழுவாயாக்குக.
09. தீர்க்க $5x-2(x-1)=5x+4$
10. ரூ 1000 க்கு வாங்கிய பொருளை ரூ 1040 இற்கு விற்றால் இலாப சதவீதம் எவ்வளவு?

**திருமலையின் பிரபல ஆசிரியர் T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**

30.08.2014 முதல் பிரதி சனி (10-12 மு.ப) தோறும் G.C.E (O/L) மாணவர்களுக்கான மாதிரி வினாப் பரீட்சை நடைபெறவுள்ளது. முன்கூட்டியே பதிவு செய்து பங்குபற்றவும்.

## பாடம் : விஞ்ஞானம்

01. திண்மம், திரவம், வாயுக்களினால் ஏற்படும் அமுக்கத்தை நாம் அன்றாடம் அவதானிக்கின்றோம். அமுக்கத்தினால் ஏற்படும் அனுகூலங்கள் பிரதிகூலங்கள் பற்றி நாம் அறிவோம்.
1. அமுக்கம் என்றால் என்ன? 2. அமுக்கத்தை அளக்கும் சர்வதேச அலகு என்ன?
3. அதிகரிக்கச் செய்வதினால் பயன்பெறும் இரு சந்தர்ப்பங்கள் தருக.
4. அமுக்கத்தை குறைவடையச் செய்வதன் மூலம் பயன்பெறும் இரு சந்தர்ப்பங்கள் தருக.
5. வளிமண்டல அமுக்கத்தை அளக்கப் பயன்படுத்தும் கருவி யாது?
6. ஆக்கிமிடிசின் கோட்பாட்டைத் தருக. 7. மேலுதைப்பு என்றால் என்ன?

02. காச நோய் காரணி பற்றீரியாவான பசிலிஸ் ரியூபளோசிஸ் என்ற நுண்ணங்கி யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?
1. வில்லியம் கார்வே 2. ரொபர்ட் கொக்
3. அலெர்சாண்டர் பிளமிங் 4. கிரகர் மெண்டல்

03. சுவாசப்பை சிற்றறைகளில் வாயுப்பரிமாற்றம் நிகழ போதிய சுவாசம் கிடைப்பதற்கு குருதிகலங்கள் எவ்வாறு சிறப்படைந்துள்ளது?
1. செங்குழியங்களின் எண்ணிக்கை அதிகமாக காணப்பட்டது.
2. வெண்குழியங்களின் எண்ணிக்கை அததிகமாக காணப்பட்டது
3. செங்குழியங்களின் விட்டம் குருதி மயிர்த்துளைக்குழாயின் விட்டத்திலும் அதிகமாக காணப்பட்டது.
4. செங்குருதி கலங்கள் மயிர்துளை குழாயிகளினூடாக விரைவாக செல்லக் கூடியதாக இருந்தது.


9. காரியம், வைரம் ஆகிய காபன்கள்
1. சமதானிகளாகும் 2. பிறதிருப்ப வடிவங்களாகும்
3. சேர்வைகளாகும் 4.. வேறுபட்ட பௌதீக நிலைகளாகும்

10. சில வெப்பமானிகளில் இரசத்திற்குப் பதிலாக அற்கோல் பயன்படுத்தப்படுகின்றது. இதன் பிரதான அனுகூலம்?
1. குறைந்த வெப்பநிலைகளை அளக்கத்தக்கதாக இருத்தல்.
2. கூடிய வெப்பநிலைகளை அளக்கத்தக்கதாக இருத்தல்.
3. உள்நாட்டில் உற்பத்தி செய்யத்தக்கதாக இருத்தல்.
4. நிறை குறைந்ததாக இருத்தல்.

11. ஒரு கல் வேகம் 20m/s உடன் நிலைக்குத்தாக மேல் நோக்கி எறியப்படுகின்றது. கல் அடையும் உயர்ந்தபட்ச நிலைக்குத்து உயரமும் கல் நிலத்தில் படுவதற்கு எடுக்கும் மொத்த நேரமும் முறையே யாவை?
1. 20m, 2s 2. 20m, 4s 3. 40m, 2s 4. 40m, 4s

12. குரைத்துப் பாயும் நாயைக் கண்ட ஒருவர் விரைவாக ஓடத் தொடங்குகிறார். அவருடைய உடலில் சுரக்கப்படும் இச்செயலுடன் தொடர்புபட்ட ஓமொன்?
1. வளர்ச்சி ஓமோன் 2. தைரொட்சின் ஓமோன்
3. ஈஸ்ரஜன் ஓமோன் 4. அதிரீனலின் ஓமொன்

13. இங்கு காணப்படும் இடப்பெயர்ச்சி -நேர வரைபு பின்வரும் எவ்வியக்கத்திற்குரியது?




1. சீரான வேகத்துடன் சென்று ஓய்வு நிலையை அடைதல்
2. சீரான் ஆர்முடுகலுடன் சென்று ஓய்வு நிலையை அடைதல்.
3. ஓய்விலிருந்து ஆரம்பித்துச் சீரான வேகத்துடன்சென்று ஓய்வு நிலையை அடைதல்.
4. ஓய்விலிருந்து ஆரம்பித்துச் சீரான ஆர்முடுகலுடன் சென்று ஓய்வு நிலையை அடைதல்.

13. ஒளியின் மூன்று அடிப்படை நிறங்களாகக் கருதப்படுபவை.
1. சிவப்பு, மஞ்சள், பச்சை 2. சிவப்பு, பச்சை, நீலம்
3. சிவப்பு, மஞ்சள், நீலம் 4. நீலம், பச்சை, மஞ்சள்

14. பாதுகாப்பிற்காக வீட்டு மின்சுற்றில் பயன்படுத்தப்படாத துணையுறுப்பு
1. உருகி 2. பிரதான ஆளி 3. மின்மானி 4. இடறு ஆளி

## பாடம் : வரலாறு

பின்வரும் விகாரைகளைக் கொண்டு 1-3 வரையிலான வினாக்களுக்கு விடை தருக

A – தூபராம B – அபயகிரி C – ரண்கொத்
D – கடலாதெனிய E – லங்காதிலக F – கிரிவிகாரை
G – ஜேத்தவனராமய H – விஜயசுந்தரராமய
J – ருவன்வெலிசாய K – தம்புள்ள L – மிரிசவட்டிய

1. பொலநறுவை இராசதானிக்குரிய விகாரைகள் அடங்கும் தொகுதி 1. AC 2. BF 3. CF 4. JC
2. துட்டகைமுனு மன்னனால் அமைக்கப்பட்ட விகாரைத் தொகுதி 1. AD 2. BC 3. FC 4. LJ
3. இந்து சமயத்தின் செல்வாக்கை கொண்டுள்ள விகாரை
1. DE 2. CF 3. DC 4. FC
4. லம்பகர்ண வம்சத்தின் தொடக்க ஆட்சியாளன்
1. தாதுசேனன் 2. வசபன் 3. மகாசேனன்
4. துட்டகைமுனு

5. கீழேதரப்பட்ட விடயங்களுடன் தொடர்புடைய ஆட்சியாளனைத் தருக.
இலங்கையை அதிககாலம் ஆட்சி செய்தல்
நகரகாவலுக்கு நகர குத்திக பதவி ஏற்படுத்தல்
ஆரிய குழுக்களை ஒன்றிணைத்தல்
1. துட்டகைமுனு 2. எல்லாளன் 3. காவன்தீஸன்
4. பண்டுகாபயன்

6. இந்தியாவில் ஆரியர் முதலில் குடியேறிய பிரதேசம்
1. சிந்து 2. கங்கை 3. ஆப்கானிஸ்தான் 4. தக்கிணம்

7. மகதத்தை ஆண்ட முதல் மன்னன்
1. அஜாசத்துரு 2. காலாசோகன் 3. பிம்பிசாரன்
4. பிந்துசாரன்

8. கீழ்குறிப்பிடப்படும் விடயங்களுடன் தொடர்புடைய குப்த பேரரசன்
பிராமணர்களுக்கு 'பசுக்களை' தானமாக வழங்கல்
அஸ்வமேதயாகம் செய்தல்
மிகப்பலம் வாய்ந்த ஆட்சியாளன் என புகழ் பெறல்
1. 1ம் சந்திரகுப்தன் 2. சமுத்திரகுப்தன்
3. 2ம் சந்திரகுப்தன் 4. குமாரகுப்தன்

9. மகதத்தின் தலைநகரான ராஜகிருகத்தை கைவிட்டு பாடலிபுரத்தை தெரிவு செய்த மன்னன்
1. பிம்பிசாரன் 2. அஜாசத்துரு 3. அசோகன்
4. சமுத்திரகுப்தன்

10. அஜந்தா குகை ஓவியம் சிறப்பு பெற்ற காலம்
1. மௌரியர் 2. குப்தர் 3. குஷாணர் 4. நந்தர்

11. ஆரியர் இலங்கையின் கிழக்குப் பகுதியில் அமைத்துக் கொண்ட குடியேற்றம்
1. தீககம, உபதிஸ்ஸகம 2. மஹாகம, தீககம
3. உபதிஸ்ஸகம, அனுராதகம 4. தீககம, விஜிதபுர

12. கீழ் குறிப்பிடும் நிகழ்வுகளுடன் தொடர்புடைய மன்னன்
சோழரிடம் இருந்து நாட்டை விடுவித்தல்
முதன் முதலில் மகாதீத்த துறைமுகத்தில் காவலரண் அமைத்தல்
பாண்டிய நாட்டுடன் திருமண உறவை ஏற்படுத்தல்
1. 1ம் பராக்கிரமபாகு 2. நிஸ்ஸங்கமல்லன்
3. மகாசேனன் 4. 1ம் விஜயபாகு

ஆசிரியர் : அகிலன்

## Grammar

Ex 01: Use your own ideas to complete these sentences. Use the past continuous.
1. The television was on but nobody ..............................
2. Tom burnt his hand while he ..............................
3. The door bell rang while I ..............................
4. Marry fell asleep while she ..............................
5. We saw an accident while we ..............................
6. I saw Sue in town yesterday but she ..............................
7. I was having dinner with ..............................
8. Ann was watching television when the ....................
9. When Yakshayan arrived We ..............................
10. I waved to her but she ..............................

Ex 02: A friend has just come back from holiday. You ask him about it.
1. (Where/ go) ..............................
2. (go/ alone) ..............................
3. (food/ good) ..............................
4. (how long/ stay there) ..............................
5. (stay/ at a hotel) ..............................
6. (how/ travel) ..............................
7. (the weather/ fine) ..............................
8. (what/ do in the evenings) ..............................
9. (meet anybody interesting) ..............................

Yesterday on your way home you met your teacher who was your class teacher last year. She invited you and a classmate of yours to visit her home during the new year. Convey this information to your friend.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாணசபை உறுப்பினரின்....

குடும்பங்களும் வாழ்வதாகவும் அவர்களிடையே இன்ந்தெரியாத அச்சமொன்று ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

இக்காணியில் சனசமூக நிலையமொன்றை அமைக்கும் முயற்சியை மக்கள் எடுத்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எவ்வித நியாயமான காரணங்களும் இன்றி மாகாண சபை உறுப்பினரின் வீட்டிற்கு முன் இராணுவக் காவலரண் ஏன் அமைக்கப்பட்டது எனத் தெரியவில்லை.

இதேவேளை இவ்விடயம் தொடர்பாக மாகாணசபையின் உறுப்பினருடன் தொடர்புகளை ஏற்படுத்த முயற்சித்த போதும் அது கைகூடவில்லை.

## புறாமலை....

பெறுமதியுடைய இம் முத்திரைகளை சித்திரக் கலைஞரான சுதத் ஜெயவர்தன வரைந்துள்ளார். 2003ம் ஆண்டு முதல் தேசிய பூங்காவாகப் பிரகடனப்படுத்தப்பட்ட புறாமலை விலங்குகளின் சரணாலயமாகவும் உள்ளது.

2013ம் ஆண்டில் புறாமலையிலிருந்து வருமானமாக 17 மில்லியன் ரூபாய்களை அரசு சுற்றுலாப் பயணிகளிடம் இருந்து திரட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழரசுக்....

தெரிவித்தார்.

கிராமங்கள் தோறும் இப்பணிகளை முன்னெடுத்துள்ள இவர்கள் கிராம மூலக்குழுக்களை உருவாக்கி வருவதாகவும் எதிர்வரும் 24ம் திகதி பட்டித்திடலில் மூதூருக்கான தொகுதி மட்டக்குழு உருவாக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளனர்.

## திருக்கோணேஸ்வர....

உடனுறை கோணேஸ்வரப் பெருமானின் அடியவப் பெருமக்களிடம் கோரிக்கையும் விடுத்துள்ளனர்.

இந்நன்கொடைகளை இலங்கை வங்கி திருகோணமலையின் வங்கிக் கணக்கிலக்கம் 70109163ற்குச் செலுத்த முடியும் எனவும் அறியத்தந்துள்ளனர்.

## மாவட்டத்தைப் பிரதிபலிக்...

இருக்கும் நாணயத் தாள்கள் வர்த்தகச் சுழற்சியின் ஊடாக மத்திய வங்கியால் மீளப் பெற்ப்படவுள்ளன. அதனையடுத்து வெளியிடப்படவுள்ள ரூபா 10 பெறுமதியான குற்றிகள் உவ்வொரு மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் வெளியிடப்படவுள்ளன. அவ்வாறு மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் குற்றிகள் இலங்கையில் எங்கும் பாவிக்கக்கூடியவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புனித மரியாள் ...

வழங்கப்பட்டது. அத்துடன் குடும்பக்கட்டுப்பாட்டு ஆலோசனைகள் வழங்கப்பட்டதுடன் சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உபகார பொருட்களாக உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன. இங்கு நடைபெற்ற மருத்துவ முகாமில் பணியாற்றிய மருத்துவர்கள் அனைவரும் புனித மரியாள் கல்லூரியின் பழைய மாணவிகள் என்பது குறிப்பிடத்தக்கது. இம்மருத்துவ முகாமில் ஏறத்தாழ 800 மக்கள் பாட்டாளிபுரம், இலக்கந்தை, நல்லூர், நவரட்ணபும் ஆகிய இடங்களிலிருந்து வந்து பயன்பெற்றுள்ளனர்.

விழாவினை முன்னிட்டு பாரியளவிலான நடை பவனி செப்டெம்பர் மாதம் 13ம் திகதி காலை நடைபெறவுள்ளது. பாடசாலைக்கு தமது நன்றியை வெளிப்படுத்தும் முகமாக 150 பழைய மாணவர்களால் இன்னிசைப்பாவினை தமது குரலொலி மூலம் இசைப்பார்கள். அத்துடன் 150வது நிறைவையொட்டி மைல்கல் ஒன்றினையும் நாட்டி வைப்பார்கள் என பழைய மாணவிகள் சார்பில்

## விசா அனுமதி ...

இவ்விசாரணையைப் பலவீனப் படுத்தவே இத் தீர்மானத்தை அரசு எடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இத்தடையால் எதிர்காலத்தில் இலங்கைக்குள் வராமல் மேற்கொள்ளப்படும் விசாரணையின் நம்பகத் தன்மையைக் கேள்விக்குள்ளாக்கக்கூடியதாக இருக்கும். ஆனால் இலங்கைக்குள் இருக்கும் தகவலகளை விட அதிகமான தகவல்கள் வெளிநாடுகளிலேயே இருப்பதாக நான் நம்புகின்றேன். அத்துடன் வீடியோ கொன்பரன்சிங் மூலம் உள்நாட்டு தகவல்களை நம்பகத் தன்மையுடன் பதிய மடியும் எனவும் நான் நம்புகின்றேன் என அவர் தெரிவித்துள்ளார்.

## கிளிவெட்டி வைத்திய....

இணைப்புச் செயலாளர் ஒருவராலேயே இவர் அச்சுறுத்தலுக்குள்ளானதாகத் தெரிகின்றது.

குறித்த வைத்தியர் அங்குள்ள மக்களுக்கு மிகத் தரமான சேவையை வழங்குவதாகத் தெரிவித்த மக்கள் அவ் வைத்தியர் மதிய உணவு இடைவேளைக்குச் செல்லாமல் 2 மணிவரை தொடர்ந்து வைத்தியசாலையில் இருப்பதாகவும் அதன் பிறகே வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவைப் பூட்டுவதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

2 மணியின் பின்னர் வெளிநோயாளர் பிரிவு பூட்டப்படுவதாக அர்த்தமற்ற காரணத்தைக் கொண்டே அவ்வைத்தியர் அச்சுறுத்தலுக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரிய வைத்தியர் வைத்தியசாலையை விட்டு வெளியேறிய அடுத்த இரண்டு நாட்களும் அப்பிரதேச மக்கள் வைத்தியர் இன்றிச் சிரமப்பட்டுள்ளனர். அதனைத் தெரிந்துகொண்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் அடிப்படையில் சேருவிலை வைத்தியசாலையில் இருந்து வைத்தியர் ஒருவர் தழுவல் பணியினை நாளொன்றுக்கு இரண்டு மணி நேரம் மேற்கொண்டதகவும் கடந்த சனி மற்றும் ஞாயிறு நாட்களில் அச்சேவையும் இடம்பெறவில்லை என்றும் மக்கள் தெரிவித்தனர்.

## புலிகளால் நிகழ்த்தப்பட்ட....

பெயரில் உருவாக்கப்பட்டிருந்த இந்தப் புத்தகத்தில் 1985 தொடக்கம் 2009வரை முஸ்லிம்கள் மீதான படுகொலைகளின் படங்கள் உட்பட விபரங்கள் பதியப்பட்டுள்ளன.

அத்துடன் குறிப்பு ஒன்றாக தமிழ்ச் செய்தி அலைகள்ஈ இல.44245, மார்ச் -ஏப்ரல் 1995 என்ற ஓர் அறிக்கையில் "கிழக்கு மாகாணம் முஸ்லிம்களின் தற்காலிக வதிவிடப்பிரதேசமேயன்றி நிரந்தரமானதல்ல என்பதை நான் உறுதிப்படுத்துகின்றேன் என்ற இறுதி வாசகத்துடன் குரிகாலன், ஆசிரியர் தலைவர், தமிழீழ விடுதலைப் புலிகள்'' என்ற விபரமும் சேர்க்கப்பட்டுள்ளது.

அதிகாலை வேளையில் எறியப்பட்டுள்ள இக்கைநூலின் உரிமையாளர்களான முஸ்லிம் வயோதிபர் சங்கத்தின் முகவரியோ, தொடர்பு இலக்கங்களோ குறிப்பிடப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து இப்பெறுமதிவாய்ந்த கைநூலை வெளியிடும் அளவிற்கு வசதிபடைத்தவர்கள் யார் என்பதும் அதனை அதிகாலை வேளையில் தங்குதடையின்றி வினியோகிக்கக்கூடிய வாய்ப்புள்ளவர்கள் யார் என்றும் மக்கள் எதிர்வு கூறல்களை முன்வைத்துள்ளனர்.

தமிழ்-முஸ்லிம் உறவை சீர்குலைக்கும் நடவடிக்கையாக இதனைக் கருதலாம் என தோப்பூர்வாசிகள் தெரிவித்தனர்.

## முரண்படுவோர்....

தர மறந்து விட்டதாகச் சில மூத்த உறுப்பினர்கள் முரண்பட்டுள்ளனர் என நம்பகமாகத் தெரிய வந்துள்ளது.

போராட்ட காலங்களில் உயிர்ப்பயத்துடன் மறைவிடங்களில் கூட தாம் கூட்டங்களை நடாத்தி கட்சியைக் கட்டியெழுப்பியதை தற்போது அனைவரும் மறந்து விட்டனர் எனத் தெரிவித்த தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர், தம்மைத் தவிர்க்கும் நடவடிக்கைகளைத் தமிழரசுக் கட்சி எடுத்துவருவதால் தாம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பக்கம் சரியப் போகும் எண்ணத்தைக் கொண்டிருப்பதாகவும், தமிழரசுக் கட்சியை விட்டு நீங்கவிருப்பதாகவும் மலைமுரசிற்குத் தெரிவித்தனர்.

## தோப்பூரில்....

களில் உள்ள கம்பித்தடுப்புக்களை அகற்றி உள்நுழைந்த கொள்ளையர்கள் பணம் மற்றும் நகைகளைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாகத் தெரிகின்றது.

இக்கொள்ளை தொடர்பாகத் தோப்பூர் வாசியொருவர் தகவல் தருகையில் தம்மால் கண்களைத் திறக்க முடியாத நிலையில் தாங்கள் இருந்ததாகவும் தனது மனைவியின் கழுத்தில் இருந்த சங்கிலியை அறுத்தபோது அவருக்கு ஏற்பட்டிருந்த சிராய்பைக் கூட அதிகாலையில் சிரமப்பட்டுக் கண்விழித்த போதே உணரக்கூடியதாக இருந்ததாகவும் தெரிவித்தார்.

மற்றொருவர் பேசுகையில் காவல்துறை தற்போதுவரை எவரையும் கைது செய்யவில்லை என்பதுடன் காவல்துறையின் மோப்பநாய் அருகிலுள்ள இராணுவக் காவலரண் வரையுமே சென்றதாகவும் அதற்கு அப்பால் நகர மறுத்துவிட்டதாகவும் தெரிவித்தார்.

ஒருவரைத்தவிர ஏனையவர்கள் காவல்துறைக்கு முறையிடக்கூடத் தயங்குவதாகத் தெரிவித்த கிராமவாசியொருவர் முறைப்பாட்டைச்செய்தால் நீதிமன்றுக்கு அலைய வேண்டியிருக்கும் எனவும் பெருந்தொகைப் பணத்தைச் செலவுசெய்ய வேண்டியிருக்கும் எனவும் சிலரால் அம்மக்கள் அறிவுறுத்தப்பட்டதாகத் தெரிவித்தார்.

வழமைபோல விசாரணைகள் தொடர்வதாகத் தெரிகின்றது.

## கிழக்கு முதல்வரின்....

வரலாற்றுச்சின்னமாக இது விளங்கியது.

முழுமையாக இப்பள்ளிவாயல் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்ததால் இங்கு தொழுகை நடத்தவோ, இதனை பராமரிக்கவோ முடியாத நிலை காணப்பட்டது.

இதனால் இப்பள்ளிவாயலை படையினரிடமிருந்து விடுவித்து பொதுமக்கள் பாவனைக்கு விட வேண்டும் என கிழக்கு மாகாணசபையில் கடந்த 2012ஆம் ஆண்டு நவம்பரில் ஆளுங்கட்சி உறுப்பினர் அமீர் அலியினால் பிரேரணையொன்று சமர்ப்பிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. மாகாணசபைக்குப் பொறுப்பானவர் என்ற வகையில் இது விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தி மூன்று மாத காலத்துக்குள் பள்ளியை விடுவித்து தருவதாக முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத் இதன் போது வாக்குறுதியளித்திருந்தார்.

மாகாணசபை ஹன்சாட்டில் இதனை வாசிக்க முடியும். கிழக்கு மாகாணசபையில் சிறுபான்மையினர் பிரச்சினை, காணிப் பிரச்சினை தொடர்பாக பிரேரணை வரும் போதெல்லாம் கருமலையூற்று பள்ளி விடுவிப்பு தொடர்பாக முதலமைச்சருக்கு ஞாபகப்படுத்தப் பட்டு வந்துள்ளது. இதனையும் ஹன்சாட்டில் பார்க்க முடியும்.

எனினும், இப்பிரேரணை நிறைவேற்றப்பட்டு 20 மாதங்கள் கடந்த போதிலும் 3 மாத கால அவகாசம் கேட்ட முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத் இது விடயத்தில் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இன்று இந்த கையாலாகாத் தனத்தினால் பள்ளியை உடைக்க வழிவிட்ட குற்றத்துக்காக முதலமைச்சரை வரலாறு தூற்றும் நிலை உருவாக்கப் பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

## கரிமலையூற்று ...

தளர்த்தி பொதுமக்களிடம் ஒப்படைக்குமாறு முதலமைச்சரிடம் அணைத்து மாகாண சபை அமைச்சர் உறுப்பினர்களால் வேண்டப்பட்டது.

அத்துடன் கிழக்கு மாகாண முதமைச்சர் மற்றும் தவிசாளர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டு முதலமைச்சர் அமைச்சர்கள் மாவட்ட மாகாண சபை உறுப்பினர்கள் கட்சியின் தலைவர்கள் உட்பட அனைவரையும் குறித்த பிரதேசத்துக்கு அழைத்துச் சென்று நிலைமைகளை ஆராய ஏற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு அனைவராலும் சபையில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

இதற்கு இணங்க எதிர்வரும் ஒரு வாரத்திற்குள் குறித்த பகுதிக்கு தான் அழைத்துச் செல்வதாகவும் முதமைச்சரால் வாக்குறுதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து சபை ஒத்திவைக்கப்பட்டது என மாகாணசபை உறுப்பினர் அன்வர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஸகாத் : ஒரு சமூகக் கடமை

**ஸகாத் வழங்குவோர் பெறுவோர்**



ஸகாத் கூட்டாக நிறைவேற்றுவதாலேயே தகுதியான அனைவரிடமிருந்தும் அது பெறப்பட்டு அருகதையுடைய சகலருக்கும் முறையாக வழங்கப்படும் நிலை தோன்றும். மேலும் ஏழைகள் சுய கௌரவத்தோடு ஸகாத்தைப் பெறவும் சமூகரீதியான சேவைகளுக்கு ஸகாத் பயன்படுத்தப்படவும் இது வழிவகுக்கின்றது. எனவே இலங்கை போன்ற இஸ்லாமிய அரசு எதுவுமற்ற சிறுபான்மை நாடுகளில் தேசிய மட்டத்திலும் பிரதேசவாரியாகவும் ஸகாத் சேகரிப்பு விநியோகத்துக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இம்முயற்சி பரவலாக்கப்பட்டால் சிறுபான்மை முஸ்லிம்களின் எண்ணற்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம். இன்ஷா அல்லாஹ் எங்களில் ஒருவர் குளிப்புக் கடமையான நிலையில் தூங்கலாமா? ... ... ... .. என்று உமர் (ரழி) நபி (ஸல்) அவர்களிடம் கேட்டபோது, ஆம் வுழூச் செய்து விட்டு தூங்கலாம் என்றார்கள். (அறிவிப்பவர்: உமர் (ரழி), ஆதாரம்: புகாரி-280, முஸ்லிம்-306, நஸாயீ-259)

முற்றும் .. ..




# உள்ளி ஊறுகாய்



**தேவையான பொருட்கள்**

உள்ளி - கால் கி.கி, நல்லெண்ணெய் - 3 மே.க, பெருங்காயம் - 1 துண்டு, கடுகு - 1 தே.க, மிளகுத் தூள் - 1 தே.க, உப்புத் தூள் - 1 தே.க, சீரகத் தூள் - 1 தே.க, புளி - பாக்களவு, தண்ணீர் - அரை தம்ளர், வினாகிரி - 3 மே.க, தனி மிளகாய்த் தூள் - 1 தே.க, மஞ்சள் தூள் - 1 தே.க

**செய்முறை**

உள்ளியைத் தோல் நீக்கி வைத்துக் கொள்ளவும். பெருங்காயத்தைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டவும். பின் தாச்சி சூடானதும் நல்லெண்ணெய் விட்டு, கொதித்ததும் பெருங்காயத்தை இட்டு பொரியவிடவும். பெருங்காயம் பொரிந்து நிறம் மாறியவுடன் கடுகை இட்டு வெடிக்க வைக்கவும். கடுகு வெடிக்கத் தொடங்கியவுடன் உள்ளியையிட்டு பொன்னிறமடைந்ததும் மஞ்சள் தூள், மிளகுத் தூள், மிளகாய்த்தூள், சீரகத்தூள், உப்புத் தூள் என்பன இட்டு நன்கு கிளறிச் சேர்த்துக் கொள்ளவும். பின்பு அரை தம்ளர் தண்ணீரில் கரைத்து வடித்த புளிக்கரைசல், 3 மே.க வினாகிரி என்பன இட்டு நன்றாகச் சேர்த்துக் கொண்ட பின் நீர்த்தன்மை வற்றும் வரை கொதிக்க வைத்து இறக்கி நன்றாக ஆறியதும் போத்தலில் அடைத்து வைத்துப் பயன்படுத்திக் கொள்ளவும்.




# வாரமொரு ஜோக்

- அருணன் -

வைத்தியரிடம் நோயாளி கூறினார் : ஜயா..! நீங்கள் எழுதிதந்த மருந்துச் சீட்டை கொன்டு அலையாத மருந்தகங்களே இல்லை. இப்படி ஒரு மருந்தை தாங்கள் இதுவரை கேள்விப்பட்டதே இல்லை என கூறுகிறார்கள். தயவுசெய்து சற்று புரியும்படி எழுதிக் கொடுங்கள் என்றார் பணிவுடன்.

சிட்டை வாங்கி பார்த்த வைத்தியர், அறிவுகெட்டவனே! உன்னை யார் இதை எடுத்து போக சொன்னது. இது நான் பேனா எழுதுகின்றதா என்று கிறுக்கிப்பார்த்த காகித துண்டல்லவா என நோயாளியை பார்த்து கோபமாக கத்தினார்..

ஹா ஹா ஹா !!!

கணவன் காலை அலுவலகம் செல்லும்போது தனது மனைவியை செல்லமாக முத்தமிட்டார். இதை சற்று எட்ட நின்று கண்ணுற்ற அவரது சிறுவயது மகள் ஓடிவந்து தாயிடம் அம்மா அப்பாவை உடனே செருப்பால் அடியுங்கள் என்றது திகைப்படைந்த தாய் ஒருவாறு சுதாரித்துக்கொன்டு தனது கணவரை வழியனுப்பிவிட்டு வந்து தனது மகளிடம் அது உனது அப்பா அல்லவா? அம்மாவை தானே முத்தமிட்டார்.. அவ்வாறெல்லாம் பேசகூடாது என செல்லமாக கடிந்துகொண்டார்.



உடனே குழந்தை சினுங்கலுடன் தாயிடம்.. அப்போ..! நீ நேற்று கடைக்கு போயிருந்தப்ப பக்கத்து வீட்டு ஆன்ரி வந்திருந்தாவே. அப்பா அந்த அன்ரிக்கு இதுபோல முத்தம் கொடுத்தவர்... உடனே அந்த அன்ரி ஏன் நம் அப்பாவிற்கு தனது செருப்பை கழட்டி அடித்தவர்? என கேட்டது.

பிறகு, மாலை வீடு திரும்பும் தன் கணவரை செம்மையாக வரவேற்க, மனைவி தன் கால் செருப்பை கையிலேந்தியபடி வழிமேல் விழி வைத்து காத்துக்கொண்டிருந்தது வேறு விடயம்...

ஹா ஹா ஹா !!!

பைத்தியம் 1: டேய் ! நான் இந்த டோர்ச் லைட்டை மேல் நோக்கி அடிக்கிறேன். உன்னால் இந்த ஒளிக்கதிரில் ஏறி போக முடியுமா..?

பைத்தியம் 2: நீ என்ன செய்யப் போகிறாய் என்பது எனக்கு தெரியும், நான் ஒளிக்கதிரில் ஏறி செல்லும்போது இடை நடுவில் லைட்டை அணைத்து என்னை கீழே விழ வைக்கப்போகிறாய் ஏன்டா டேய்....!



# ஹீல்ஸ் – பெண்கள்

குதிகால் செருப்புகள் பெண்களுக்கு கம்பீரமான தோற்றத்தை மட்டுமின்றி தைரியத்தையும் தன்னம்பிக்கையையும் கொடுக்கிறது! குதிகால் செருப்பணியும் 50 சதவீத பெண்கள் காலில் சுளுக்குடனும், குதிகால் வலியுடனும் அவதிப்படுவதுண்டு. குதிகாலின் பின்பக்கம் சிலருக்கு சிவந்து வீங்கியிருக்கும். இயல்பு நிலை பாதிக்கும் வண்ணம் குதிகால் நரம்பு விண்விண்ணெனத் தெறிக்கிற மாதிரி "நியுரோமா" எனப்படும் கடுமையான வலி ஏற்படலாம். குதிகால் செருப்புகளை நீண்டநேரம் அணியும்போது குதிகால் தசைநார்கள் சுருங்கிப் போகும். அதிக உயரமான குதிகால் செருப்புகளை நீண்டநேரம் அணியும் போது அதிக அழுத்தம் ஏற்படுவதுடன், முழங்கால் மூட்டுவலியும் ஏற்படும்.

# விரைவாக கருத்தரிக்க வேண்டுமா!!

- இரும்புச்சத்துள்ள உணவுகள் :பெண்களுக்கு இரும்புச்சத்து மிகவும் இன்றியமையாதது. பெரும்பாலும் இரும்புச்சத்து குறைபாடானது ஆண்களை விட பெண்களுக்குத் தான் அதிகம் ஏற்படும். இரும்புச்சத்து குறைபாட்டுடன் இருந்தால், கருத்தரிப்பதில் பிரச்சனை ஏற்படும். எனவே இரும்புச்சத்து அதிகம் நிறைந்த உணவுகளான கத்திரிக்காய், பருப்பு வகைகள் சோயா போன்றவற்றை அதிகம் பெண்கள் உட்கொண்டு வர வேண்டும்.
- சால்மன் மீனில் ஆன்டி-ஆக்ஸிடன்ட் அதிகம் நிறைந்துள்ளது. இதனை பெண்கள் உட்கொண்டால், கருத்தரிக்கும் போது விந்தணுவானது பாதுகாப்பாக கருமுட்டையை அடைய உதவிபுரியும்.
- பச்சை பட்டாணியில் கருத்தரிக்க அவசியமாக ஜிங்க் சத்து நிறைந்துள்ளது. இந்த சத்து குறைபாடு ஏற்பட்டால், ஈஸ்ட்ரோஜென் மற்றும் புரோஜெஸ்டிரோன் அளவு குறைந்து கருத்தரிக்க முடியாமல் செய்துவிடும்.

தொடரும் .. ..

# கொட்டியாபுரத்து சிங்கம்

**சம்பூர் சதீஸின்**

**கொட்டியாபுரம்**
வரலாற்றுக் குறுநாவல்
கி.பி 1600 – 1700 ம் ஆண்டுகளில்
கொட்டியாபுரத்தில் கோலோச்சிய வன்னிமையின் கதை

கடந்த வார தொடர்ச்சி .. ..

நாட்டு மக்களனைவரையும் எச்சரிக்கை யாயிருக்கும் படி அறிவுறுத்தப் பட்டதோடு அரசவை கலைந்தது.

அன்றைய நண்பகல் விருந்தில் அரண்மனையில் அரசன் மற்றும் அவருடைய புதல்வர்களுடன் இளஞ்சிங்கன் கலந்து கொண்டிருந்தான். கொட்டியாபுரப்பற்று இராச்சியத்தின் மீது இயல்பாகவே கண்டியரசனுக்கு அக்கறை இருந்து கொண்டே வந்தது. அதனாலென்னவோ கொட்டியாபுர வன்னிபங்களை அவன் என்றுமே மதிக்கத் தவறுவதில்லை. முன்னர் கூட அரசப் பிரதானிகள் கொடுத்த அழுதத்தினாலே தான் இப்பிரதேச வன்னிபத்துக்கும் பளுகாமத்து வன்னிபத்துக்கும் அரச கட்டளையை அனுப்பியதாக பின்னொரு சந்தர்ப்பத்தில் மன்னர் தெரிவித்ததுமுண்டு. இந்த அக்கறைக்கு கொட்டியாரத்துறை, இலங்கைத்துறை போன்ற முக்கிய வணிகப் போக்குவரத்துக்கான துறைகளும், வங்களா விரிகுடாக் கடலில் கொட்டியாரக் குடாவுக்கான முக்கியத்துவமும் காரணங்களாகும். கண்டி இராச்சியத்தின் வெளித் தொடர்புகளுக்கு கொட்டியாபுரப் பிரதேசம் முக்கியத்துவம் பெறுகின்றது. இவைகளெல்லாம் இளஞ்சிங்கனுக்கு தெளிவாகத் தெரிந்திருந்தது. அவனும் கூட பறங்கியரை வெளியேற்றுவதற்கான முயற்சிகளில் கண்டி இராச்சியத்தின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவதாகக் கூறியிருந்தான்.



பின்னர் இளஞ்சிங்கனும் குதிரை காவலன் வேடமிட்ட இராஜசிங்கனும் தனியாகப் பல விடயங்களை அளவளாவிய வண்ணமிருந்தனர். இராஜசிங்கனின் தமிழ்ப் பற்றும், புலமையும், சைவசமயப் பற்றும் இளஞ்சிங்கனை வெகுவாகவே கவர்ந்தது.

இவ்வாறிருக்கும் போது ஒற்றன் ஒருவன் முக்கிய செய்தியொன்றுடன் காத்துக் கொண்டிருப்பதாக மன்னனிடம் தெரிவிக்கப்பட்டது. அவனை உள்ளேவிட ஆணையிட்ட அரசன் அவனிடம் செய்தியைக் கேட்டபின் அவனை அனுப்பிவிட்டு அலோசனையில் ஆழ்ந்தான். மன்னன் தனது புதல்வர்கள் மூவர், சேனாதிபதி, முதல்மந்திரி ஆகியோரை அழைத்து பறங்கியர் கண்டியை நோக்கி மீண்டும் பெரும்படையுடன் வந்து கொண்டிருக்கும் செய்தியைக் கூறியதும் அங்கே மந்திராலோசனை நடந்தது.



அடிக்கடி படையெடுத்துக் கொண்டிருக்கும் பறங்கியரை இயலுமான வரை முற்றாக நிர்மூலம் செய்வது என கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கு செனரத் மன்னன் தான் வகுத்த வியூகங்களை அவர்களு க்குக் கூறலானான். நமது படைகள் மூன்று பிரிவு களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றுக்கும் இளவரசர்கள் மூவரும் தலைமை தாங்குவார்கள் எனவும் கூறினான். அத்தோடு தான் குமாரசிங்கன் பிரிவிலும், சேனாதிபதி இராசசிங்கன் பிரிவிலும், மந்திரி விஜயபாலவின் தலைமையிலும் போரில் பங்கு கொள்வது என தீர்மானிக்கப்பட்டது. இதன்போது இடையே குறுக்கிட்ட இளஞ்சிங்கன் இந்தப் போரில் எனது பங்களிப்பும் இருக்க வேண்டும் என தான் விரும்புவதாகவும், தன்னையும் ஓர் படையணியில் இணைத்துக் கொள்ளுமாறும் கூறினான். இளஞ்சிங்கனின் வற்புறுத்தல் காரணமாக அவன் கருத்தை ஏற்றுக்கொண்ட மன்னன் "நீர் உனது நண்பன் இராசசிங்கனுக்கு உதவியாக செயற்படலாம் என்று கூறினான்.

வீட்டுக்கொரு வீரர்களை அணி திரளுமாறு ஆணையிட்ட மன்னன் நாளை மறுநாள் காலை படை புறப்படுவதற்கு ஆயத்தமாகுமாறு கட்டளையிட்டு நகர்ந்தார். அன்று நள்ளிரவே தகவல் நாட்டுமக்கள் அனைவருக்கும் பறைசாற்றப்பட்டது. செங்கடகல நகரமே அன்று அல்லோலகல்லோலப்பட்டிருந்தது. அனைவரும் செனரத் மன்னனின் புதல்வர்களின் வீரத்தின் மேல் நம்பிக்கை வைத்திருந்தனர். அன்றிரவு மீண்டும் தலைவர்களுக் கிடையில் இரகசிய ஆலோசனை நிகழ்ந்தது. பறங்கியர் தளபதி கொன்ஸ்ரான்ஸ்ரைன் டீ சா தலைமையிலான படைவீரர்களில் 5000 லஸ்கரின்களுடன் 450 போர்த்துக்கீச வீரர்களும் அடங்கியிருந்தனர். இவர்கள் தவிர பொதி சுமப்பவர்கள், கூலியாட்கள் என ஆயிரம் பேரும் இருந்தனர்.

இப்படையினர் மலையகத்தை நோக்கி வருகின்ற போது எதிர்ப்பட்ட கிராமங்களை எல்லாம் சூறையாடியும், கோவில்களை உடைத்தும் கொடுமைகள் செய்வது கண்டி நகரெங்கும் பரவியது. இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி செனரத் மன்னன் நாட்டு மக்களுக்கு மிக முக்கியமான செய்தியொன்றை முரசறைவித்திருந்தான். அதாவது அந்நியரான பறங்கியர் கண்டி நகரைக் கைப்பற்றும் நிலை ஏற்பட்டால் கண்டி மக்கள் யாவரும் கைதிகளாகி சித்திரவதைக்குள்ளாக நேரிடும் என்று தெரிவித்திருந்தான். இதனால் கண்டி மக்களில் பெரும்பாலானோர் விசுவாசத்தோடு கண்டியரசுப் படைகளில் இணையத் தொடங்கினர்.

... பாகம் 13 தொடரும் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உள்ளூர் குறுஞ்செய்திகள்

பிரதேசவாரியாக கடந்த சனிக்கிழமை கிரிக்கட் போட்டியொன்று இடம்பெற்றுள்ளது. இதில் நான்கு குழுக்கள் பங்குபற்றின. இதன் போது ரூபா 3,000 பெறுமதியான பணப்பரிசில் வெற்றிபெற்ற அணிக்கு பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் பிரிவு 11 சுற்றுப்போட்டியில் இன்று 16.08.2014 கடந்த சனிக்கிழமை அன்று திருகோணமலை ஒலிம்பிக்ஸ் கழகத்தை எதிர்த்து செம்மலை புனித லூட்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. இப்போட்டி மாலை 4.00 மணிக்கு செம்மலையில் இடம்பெற்றுள்ளது.

இப்பிரிவில் எட்டு கழகங்கள் தெரிவு செய்யப்பட்டு அவை இரண்டு குழுக்களாக சுழற்சி முறையில் இச்சுற்றில் பங்கு கொண்டன.

செம்மலையில் இன்று நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியில் புனித யுட்ஸ் கழகம் திருகோணமலை ஒலிம்பிக்ஸ் கழகத்தை 3 க்கு 1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

வைன் கிண்ணத்துக்கான போட்டித் தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமை வேல்ஸ் கழகத்தை எதிர்த்து யங் ஒலிம்பிக்ஸ் கழகம் மோதுகின்றது. இதில் வெற்றி பெறும் கழகம் 24.08.2014ல் நடைபெறும் இறுதிப் போட்டியில் மீண்டும் நோமன்ஸ் கழகத்துடன் மோத உள்ளது. ஏழாவது தடவையாக நடத்தப்படும் இப் போட்டியினை வேல்ஸ் கழகம் ஒழுங்கு செய்துள்ளது.

திருகோணமலை உதைபந்து லீக் நடத்தும் கழகங்களுக்கு இடையிலான சுழற்சி முறை சுற்றுப்போட்டியில் சென் அந்தனீஸ் கழகம் (5) கிறீன்லைற் கழகத்தை (1) இன்று வெற்றி கொண்டுள்ளது.

– சசிகுமார் –

## Good Bye Mahela



பாகிஸ்தானுக்கு எதிரான 2 ஆவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 105 ஓட்டங்களால் வெ[illegible] பெற்று 2-0 என தொடரை தன் வசமாக்கியது. இதன்மூலம் இலங்கை அணி சிரேஷ்ட வீரரும் முன்னாள் அணித் தலைவருமான மஹேல ஜெயவர்தனவுக்கு சிறந்ததொரு பிரியா விடை வழியனுப்புதலையும் இலங்கையணி அளித்துள்ள[illegible]



## விராட்டின் தோல்விக்கு யார் பொறுப்பு



விராத் கோஹ்லியுடன் பிரபல பொலிவூட் நடிகை அனு ்கா தங்கியிருக்க சிறப்பு அனுமதி கொடுத்தது தொடர்பாக சர்ச்சை கிளம்பியுள்ளது. இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் மோசமாக விளையாடிய இந்திய வீரர் விராத் கோஹ்லி, 5 டெஸ்டில் 134 ஓட்டங்கள் தான் எடுத்தார். இவரும் பொலிவூட் நடிகை அனு்கா சர்மாவும் நண்பர்களாக உள்ளனர். இருவரும் அடிக்கடி சந்தித்து கொள்வது வழக்கம். இது இங்கிலாந்து தொடரிலும் தொடர்கிறது.

## சர்வதேசச் செய்திகள்

- **4 மெக்டொனால்ட் நிறுவனங்களை மூட உத்தரவு**

உக்ரைன் பிரிவினைவாதிகளுக்கு ரஷ்யா ஆயுதங்கள் கொடுத்து உதவி வருவதாக குற்றம் சாட்டி ரஷ்யா மீது அமெரிக்கா உள்பட ஐரோப்பிய நாடுகள் பொருளாதார தடை விதித்துள்ளது. இதற்கு பதிலடியாக ரஷ்யாவில் இயங்கி வந்த அமெரிக்க நிறுவனமான மெக்டொனால்ட்டின் 4 நிறுவனங்களை மூட ரஷ்ய அரசு உத்தரவிட்டுள்ளது.

- **விசா தற்காலிக நிறுத்தம்**

எபோலா வைரஸ் தாக்கத்தை அடுத்து இலங்கைக்கு வருகைதந்தவுடன் வழங்கப்படும் நுழைவு விஸா வழங்கும் நடைமுறை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று ,லங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

- **சூரிய குளியல் விபரீதம்**

பிரித்தானியாவை சேர்ந்த பெண் ஒருவர் சூரிய படுக்கையை அதிகமாக பயன்படுத்தியதால் முகத்தில் துளை ஏற்பட்டு புற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்.

- **மோடியை வரவேற்கும் ஒபாமா**

அடுத்த மாதம் அரசு முறை பயணமாக அமெரிக்காவுக்கு வரும் மோடியை வரவேற்க அதிபர் ஒபாமா ஆர்வமாக உள்ளதாக அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சகம் கூறியுள்ளது. இந்தியாவில் தேர்தல் நடைபெற்றுக்கொண்டிருந்த போதே மோடி பிரதமரானால் அமெரிக்காவுக்கு வருமாறு அழைப்பு விடுப்போம் என்று தொடர்ந்து தாங்கள் கூறி வருவதாக அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளரான மேரி ஹார்ப் கூறியுள்ளார்.

- **ஐஸ் பக்கட் குளியல்**

ஐஸ் பக்கட் குளியலை பிரபல கோல்ப் விளையாட்டு வீரர் Chris Kennedy அவர்கள் துவக்கி வைத்துள்ளார். இந்த குளியல் செய்தவர்கள் தங்களுக்கு பிடித்த மூன்று நபர்களின் பெயர்களை கூறுவார்கள். அவர்கள் மூவரும் ஐஸ் பக்கட் குளியலை குளிக்க வேண்டும். அவ்வாறு குளிக்கவில்லை என்றால் $100 நிதி கொடுக்க வேண்டும். அந்த நிதி ALS and Motor Neurone Disease charities என்ற அமைப்பிற்கு சென்றுவிடும். ஒருசிலர் ஐஸ் பக்கட்டால் குளித்தும் கூட நிதி கொடுத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

- **பெண் தீவிரவாதி சவால்**

இங்கிலாந்து அல்லது அமெரிக்காவைச் சேர்ந்த பிணையாளியின் தலையை வெட்டப் போவதாக பெண் தீவிரவாதி ஒருவர் அறிவித்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

- **நடிகர் ராபின் வில்லியமஸ் மரணம் தற்கொலையா?**

ஆஸ்கர் விருதுபெற்ற ஹாலிவுட் நடிகர் ராபின் வில்லியம்ஸ் மரணத்துக்கு, நடிகர் கமல் ஹாஸன், ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார். அதில் அவரின் மரணம் தற்கொலை என்றால் நான் அவரை வெறுக்கின்றேன் என கூறியுள்ளார்.

- **தொழிற்சாலைக் கசிவால் ஏற்பட்ட பீதி**

மெக்சிகோ நாட்டில் உள்ள மிகப்பெரிய தாமிரம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையில் பயங்கரமான அளவில் கசிவு ஏற்பட்டு ஆற்றில் கலந்ததால் பாதுகாப்பு நடவடிக்கையாக அந்த மாகாணத்தில் உள்ள 88 பள்ளிகளுக்கு அவசரமாக விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. மேலும் அந்த பகுதியில் வாழும் மக்களையும் சுற்றுப்புற சூழல் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

- **இரு வருட சுற்றுப்பயணம்**

அமெரிக்காவின் கொலறாடோ (Colorado) மாகாணத்தை சேர்ந்த Dan- Susie Kellogg என்ற தம்பதியினர், தங்களது 12 பிள்ளைகளுடன் கடந்த இரண்டு வருடங்களாக் கனடாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளனர். கனடாவின் நியுபிறவுன்ஸ்விக் நகருக்கு நேற்று சென்றடைந்த இவர்கள், படகு சவாரிக்காக ஒரு பொழுதுபோக்கு வாகனத்தை வாங்கியதுடன், தங்களது வீட்டை விற்றுவிட்டு இந்த வாகனத்தில் வசிப்பதற்கு தீர்மானித்துள்ளனர்.

- **சீனாவில் பூகம்பம்**

சீனாவை தாக்கிய பாரிய பூகம்பம் காரணமாக 150 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 1500ற்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர். சீனாவின், தென்மேற்கு பகுதியை தாக்கிய இந்த பூகமபம் 6.1 ஆக ரிச்டர் அளவையில் பதிவாகியுள்ளது.

- **சீனாவில் பாரிய பூகம்பம்**

அமெரிக்கா முழுவதும் பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வரும் 4.5 மில்லியன் நோயாளிகளின் பெர்சனல் டேட்டாக்களை ஹேக்கிங் செய்து திருடப்பட்டதாக அதிர்ச்சியான தகவல் ஒன்றை அமெரிக்காவில் உள்ள Community Health Systems Inc என்ற அமைப்பு கண்டுபிடித்துள்ளது. இதனால் அமெரிக்கா அதிர்ச்சி அடைந்துள்ளது. இதுவரை இல்லாத அளவுக்கு மிகப்பெரிய சைபர் க்ரைம் திருட்டாக இது காணப்படுகிறது.

## நிகழ்வுகள்

### நூல்கள் கையளிப்பு

செய்தி : அச்சுதன்

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள நகரசபை பிரதேசசபைகளின் கீழ் இயங்கும் பொது நூலகங்களுக்கு ஆசிய பவுன்டேசன் நிறுவனம் ஒருதொகுதி புத்தகங்களை (நூல்களை) கையளிக்கும் நிகழ்வு 19.08.2014ந் திகதிகாலை 11.00 மணிக்கு திருக்கோணமலை நகரசபையின் பொதுநூலக மண்டபத்தில் ஆரம்பமானது. ஆரம்ப நிகழ்வாக நகரசபையின் தலைவர் க.செல்வராஜா, பிரதம நூரகர் திருமதி.வயலட் எதிரிசூரிய ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதையும் இலங்கைக்கான ஆசியபவுன் டேசன் நிறுவனத்தின் முக்கியஸ்தர் அன்டன் நல்லதம்பி உரையாற்றுவதையும் பொது நூலகங்களுக்கு நூல்கள் கையளிக்கப்படுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களின் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம்.



படங்கள் : சேனையூர் நிருபர்

### ஒலிப்பேழை வெளியீட்டு விழா

செய்தி : அச்சுதன்



சாம்பல்தீவு வடலியம்பதி மஹா கணபதி பிள்ளையார் ஆலய முன்றலில் ஆலய வரலாறு உள்ளடக்கப்பட்ட ஒலிப்பேழை வெளியீட்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இவ் வெளியீட்டு விழாவிற்கு ஆலய பிரதமகுரு ஆலய தொண்டர் குழுவினர் பரிபாலன சபையினர் ஒலி, ஒளி அமைப்பினர் ஊர்மக்கள் கலந்து சிறப்பித்தனர்.

படங்கள் : சேனையூர் நிருபர்

### லட்சுமி நாராயணர் கொடியேற்றம்

சசிகுமார்

5ம்கட்டை லக்ஷ்மி நாராயணர் கோயில் கொடியேற்றம் இன்று காலை நடைபெற்றது. பெருமளவிலான ப்கதர்கள் இதில் கலந்து கொண்டார்கள். கொடி ஏற்றப்பட்ட வேளை அங்கு சொன்னதன் பிரகாரம் 4 கருட பறவைகள் ஆகாயத்தில் வட்டமடித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரிமலையூற்று பள்ளிவாயலை இராணுவம் சேதமாக்கியதாலேயே கட்டித்தர சம்மதம்

## மாகாணசபை உறுப்பினர்களின் ஒன்றித்த கருத்து

சேதமாகியுள்ள கரிமலையூற்றுப் பள்ளி- வாயலை மீளப் புனரமைத்துத்தர இராணுவம் இணங்கியதற்குக் காரணம் அவர்களாலேயே இந்தப் பள்ளிவாயல் சேதமாக்கப்பட்டதனாலேயே என அனைத்து கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களும் கருத்தறிவித்துள்ளனர்.

கடந்த 19ம் திகதி காலை கூடிய கிழக்கு மாகாண சபையில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர்.எம்.அன்வரினால் அவசர பிரேரணையாக சமர்ப்பிக்கப்பட்டு கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் உதுமான் லெப்பையால் வழிமெழியப்பட்டு பள்ளிவாயல் சேத விவகாரம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது பேசிய அமைச்சர்கள் மற்றும் எதிர்கட்சி ஆளும்கட்சி மாகாண சபை



உறுப்பினர்கள் இராணுவத்தனரால் சேதமாக்கப்பட்டதனால்தான் அவர்கள் குறித்த பள்ளியை நிர்மாணிக்க ஒப்புக்கொண்டிருப்பதாகவும் விவாதிக்கப்பட்டது அத்துடன் தாம் பள்ளியை கட்டுவதாகவும் குறித்த பகுதியை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலிருந்து 13

## “கிழக்கு முதல்வரின் கையாலாகாத்தனம்”

### இம்ரான் மஹ்ரூவ் குற்றச்சாட்டு

திருகோணமலை மாவட்டத்தின் தொன்மைமிகு பள்ளிவாயல்களுள் ஒன்றான கரிமலையூற்று பள்ளிவாயல் தகர்ப்பு விவகாரம், கிழக்கு மாகாண முதலமைச்சரின் கையாலாகாத் தனத்துக்கு சிறந்த உதாரணமாகும் என கிழக்கு மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

கரிமலையூற்றுப் பள்ளிவாயல் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட பள்ளிவாயலாகும். இந்த வகையில் திருகோணமலை மாவட்ட முஸ்லிம்களின் தொன்மையை எடுத்துக்காட்டும் முக்கிய 13




## ரூ.10 தாள் இனி இல்லை

## மாவட்டத்தைப் பிரதிபலிக்கும் 10 ரூபாய்க் குற்றிகள்

அரசாங்கம் இனிவரும் காலங்களில் ரூபாய் பத்துப் பெறுமதியான நாணயத் தாள்களை வெளியிடுவதில்லை என்ற முடிவை எடுத்துள்ளது.

அதற்குப் பதிலாகப் பத்து ரூபாய்க் குற்றிகள் வெளியிடப்படவுள்ளன என அறிவித்துள்ளது.

தற்போது புழக்கத்தில் 13



## புலிகளால் நிகழ்த்தப்பட்ட கொலைகளை வெளிக்காட்டி கைநூலொன்று திடீரென விநியோகம்

தோப்பூர் பிரதேசத்தில் கடந்த 20ம் திகதி அதிகாலையில் வீடுகள், கடைகள், பெருந்தெரு மற்றும் பள்ளிவாயல் பிரதேசங்களில் வீசி எறியப்பட்டிருந்த கைநூலொன்றில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட கொலைகள் தொடர்பான விபரங்கள் அடங்கியிருந்ததாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

முஸ்லிம் வயோதிபர் சங்கம் என்ற 13






## “விசா அனுமதி மறுக்கப்படுவது ஐநாவின் விசாரணையை பலவீனப்படுத்தவே”

### பாக்கியசோதி சரவணமுத்து



ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைக் குழு அங்கத்தவர்களை இலங்கைக்குள் வர அனுமதிக்கப் போவதில்லை என்ற சனாதிபதியின் தீர்மானத்தை யிட்டுத் தனது கருத்தை வெளியிட்டுள்ள மாற்றுக் கொள்கைகளுக்கான நிறுவனத்தின் தலைவர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து அவர்கள் 13

## புனித மரியாள் கல்லூரி பழைய மாணவிகளின் இலவச மருத்துவ முகாம்

### 150 வருடக் கொண்டாட்டங்கள் ஆரம்பம்

திருகோணமலை தேசிய பெண்கள் பாடசாலையான புனித மரியாள் கல்லூரி தனது 150வது ஆண்டு நிறைவினை இவ்வருடம் செப்டெம்பர் மாதம் 12ம் திகதி கொண்டாட இருப்பதனையொட்டி இக் கல்லூரியின் பழைய மாணவிகளால் கடந்த செவ்வாய்க்கிழமை 19.08.2014 அன்று மூதூரை அண்டிய பிரதேசமாகிய பாட்டாளிபுரத்தில் மக்களுக்கு முழு நேர மருத்துவ முகாம் ஒன்று நடாத்தப்பட்டது. வெளி நோயாளர் பிரிவு, சிறுவர் சிகிச்சை, பற் சிகிச்சை, தோல் சிகிச்சை, சுவாச நோய் போன்ற நோய்களுக்கும் ஏனைய நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு மருந்துகளும் 13





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org